# ஓர் எழுத்தாளரின் அரை நூற்றாண்டு வாழ்க்கை அனுபவங்கள்



தனபாக்கியம் குணபாலசிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓர் எழுத்தாளரின் அரை நூற்றாண்டு வாழ்க்கை அனுபவங்கள்

ஆசிரியர்

**தனபாக்கியம் குணபாலசிங்கம்**

பதிப்பாசிரியர்

**முனைவர் லேனா தமிழ்வாணன்**, எம்.ஏ.,

டிப்ளமோ இன் ஜர்னலிசம்

**மணிமேகலைப் பிரசுரம்**

தபால் பெட்டி எண் : 1447

7 (ப.எண் 4), தணிகாசலம் சாலை,

தியாகராயநகர், சென்னை – 600 017.

தொலைபேசி : 2434 2926, 2434 6082

மின்அஞ்சல் : manimekalai1@dataone.in

மின் இணையம் : www.tamilvanan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விவரம்



| | |
|---|---|
| நூல் தலைப்பு | ஓர் எழுத்தாளரின் அரை நூற்றாண்டு வாழ்க்கை அனுபவங்கள் |
| ஆசிரியர் | தனபாக்கியம் குணபாலசிங்கம் |
| மொழி | தமிழ் |
| பதிப்பு ஆண்டு | 2016 |
| பதிப்பு விவரம் | முதற் பதிப்பு |
| உரிமை | ஆசிரியருக்கு |
| தாளின் தன்மை | 11.6 கி.கி. |
| நூலின் அளவு | டெம்மி சைஸ் (14 x 21 செ.மீ.) |
| அச்சு எழுத்து அளவு | 10 புள்ளி |
| மொத்த பக்கங்கள் | viii + 208 = 216 |
| நூலின் விலை | **ரூ. 125.00** |
| அட்டைப்பட ஓவியம் | மோகன் கிராஃபிக்ஸ் |
| லேசர் வடிவமைப்பு | பி.எஸ். முத்து கிராஃபிக்ஸ் சென்னை - 600 015. |
| அச்சிட்டோர் | ஆதிலட்சுமி கிராஃபிக்ஸ் சென்னை - 600 094. |
| நூல் கட்டுமானம் | தையல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

## திரு. ஹபீப்
(சமூக சேவையாளர்)

ஒவ்வொரு நூலினையும் எழுதத்தூண்டிய காரணங்களை என் நூல்களின் முற்பகுதியிலோ அல்லது பிற்பகுதியிலோ கூறியிருப்பேன். அதுபோல் இந்த வாழ்க்கை வரலாற்றினை எழுதவும் ஒரு காரணம் இருந்ததெனில் மிகையாகாது. 1988 முதல் 2015 வரை எவரும் எனக்குப் பணத்தினை நன்கொடையாகத் தந்து எழுதும்படி தூண்டியிருக்கவில்லை. ஆனால் ஹபீப் அறக்கட்டளை நிதியத்தினர் பணத்தினை அன்பளிப்புச் செய்து எழுத ஆக்கமும், ஊக்கமும் தந்திருந்தார்கள். அதனால் இவர்களுக்கு என் தலைசாய்த்து நன்றி கூறுவதோடு, இந்நூலையும் சமூகப் பணியாளராகத் திகழ்ந்த திரு. ஹபீப் அவர்களுக்கே சமர்ப்பிக்கின்றேன். ஏனெனில், இறைவன் (அல்லா) எதனை அவரிடம் எதிர்பார்த்தாரோ அதனை நிறைவேற்றியதோடு, இவரது கொடைகள் மதங்களுக்கு அப்பாற்பட்ட இறைவனின் மனிதநேயப் பரிசில்களேயாம். மீண்டும் என் தலைசாய்ந்த நன்றிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | இப்பூமியில் நான் பிறந்த நாள்முதல் | 1 |
| 2. | இல்லற வாழ்வில் காலடி வைத்தல் | 25 |
| 3. | குழந்தை வளர்ப்புப் பணியில் | 29 |
| 4. | உரிமைக்குரலை என் பேனாக்கள் பேசலாயின | 36 |
| 5. | என் எழுத்துவளர்ச்சிக்கு உறுதுணையாகயிருந்தோரை நினைவுகூர்கின்றேன் | 39 |
| 6. | மீண்டும் கொலைக்களங்கள் | 44 |
| 7. | மாலைதீவு தந்த அனுபவங்கள் | 47 |
| 8. | லண்டன் நோக்கிய புலம்பெயர்வுகள் | 49 |
| 9. | குடும்ப வாழ்க்கை மீண்டும் ஆரம்பமாகல் | 52 |
| 10. | மீண்டும் எழுத்துப்பணிகள் தீவிரமடைந்தன | 56 |
| 11. | ஈழமக்கள் இழந்த உரிமைகளுக்காகக் குரல்கொடுப்போருக்கு நன்றி கூறி எழுதிய கடிதங்கள் | 60 |
| 12. | சமயங்கள் பற்றிய என் பார்வை | 63 |
| 13. | ஈழத் தமிழ்மக்கள் தம் பூர்வீகமண் உரிமைகளையிழந்து அடிமையாகிய வரலாறுகளை உலகத்தலைவர்களுக்கு அறிவுறுத்தி, நீதிகோரி எழுதிய கடிதங்களும், பதில்களும் | 75 |
| 14. | 20 ஆம் 21 ஆம் நூற்றாண்டுகள் எமக்கு நன்கொடையாக அளித்துள்ள மாமனிதர்கள் பற்றிய நினைவுகள் | 118 |
| 15. | மாவீரன் பிரபாகரன் நினைவந்தேல் | 146 |
| 16. | என் எழுத்துப்பணிக்கு உதவிய உறவினருக்கு நன்றிகள் | 166 |
| 17. | என் எழுதுகோல்களுக்கும், படப்பிடிப்புக் கருவிக்கும் நன்றி கூறுவேன் | 170 |


**வாழ்வியல் படங்கள்**


| | | |
|---|---|---|
| 1. | கல்வி கற்கும் மாணவியாக | 172 |
| 2. | மனைவியாகவும், தாயாகவும் | 175 |
| 3. | மீண்டும் எழுத்துலகத்துடன் | 184 |
| 4. | சமூக சேவையாளராக | 187 |
| 5. | நூலாசிரியருக்கு உறவினர்கள் வழங்கிய நீங்காத நினைவுகள் | 190 |
| 6. | ஒரு வேண்டுகோள்! | 198 |
| 7. | ஆசிரியர் பின்னுரை | 200 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

நான் 2011ஆம் ஆண்டு முதலாகவே எனது ஆய்வு எழுத்துத்துறையிலிருந்து ஓய்வெடுக்க விரும்பினேன். ஆனால் முடியவில்லை. அதனால் தொடர்ந்து மூன்று சிறுநூல்களை வெளியிட நேர்ந்தது. அவற்றுள் பொதித்திருந்த வரலாற்றுச் செய்திகள் சிலவற்றை வெளிச்சமிட்டுக் காட்டாதுவிடின் நான் இவ்வளவு காலமும் எழுதியவை முழுமை பெறா நிலையொன்றினை நான் உணர்ந்திருந்தேன். அதனால் ஈழத்தில் இரு நூல்களையும், சென்னையில் ஒரு நூலினையும், வெளியிட்டபின் மிகவும் மகிழ்ச்சியுடன் மணிமேகலைப் பிரசுரத்தாரைச் சந்திக்க 4.2.2015 அன்று பயணித்திருந்தேன். அப்பொழுது அவர்கள் நான் லண்டன் திரும்பும் நாளைக் கேட்டறிந்து கொண்டனர். பின் 12.2.2015 அன்று இடம்பெறவிருந்த ஒரு நிகழ்ச்சி நிரலையும், அப்பொழுது ஒலிம்பிக் ஹபீப் அறக்கட்டளை நிதியம் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் பணமுடிச்சு ஒன்றினைக் கொடுக்க விருக்கின்றார்கள் என்பதனையும் எடுத்துக் கூறினர். அப்பொழுது தமிழக எழுத்தாளர் ஒருவரை அறிமுகம் செய்யும்படி கேட்டபொழுது, அவர்கள் அதற்குடன்படாது என்னை அழைத்துச் சென்றனர்.

ஒலிம்பிக் ஹபீப் அறக்கட்டளை நிதிய சமூக சேவையாளர் ஹபீப் அவர்களின் வரலாற்றிற்கும் என்னுடைய வரலாற்றிற்கும் அதிக ஒற்றுமைகளை நான் அவதானிக்க முடிந்தது. அதாவது காலஞ்சென்ற திரு. ஹபீப் அவர்கள் சிறுவயதில் வாழ்க்கையுடன் போராடி, நேர்மையான உழைப்பினாலும், ஊக்கத்தினாலும் தன் வாழ்க்கையைக் கட்டியெழுப்பியதோடு, தன் தலைமுறையினரையும் பெருமையுடன் வாழ வழிவகுத்திருந்தார். அவரது பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் அனைவரும் கல்விமான்களாக மட்டுமன்றி, சமூக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவையாளராகப் பணியாற்றி, ஹபீப் அறக்கட்டளை நிதிமூலம் ஏழைகளின் திருமணங்களைக் குறையின்றி நிகழ்த்தவும், எழுத்தாளர்களை ஊக்குவிக்கவும், பணமுடிச்சுகளை வழங்கி திரு. ஹபீப் அவர்களை வருடந்தோறும் நினைவுகூர்ந்து வருகின்றனர்.

இவ்வகையில் எனக்குக் கிடைத்த ரூபாய் 10,000/- [பத்தாயிரம்] எழுத்து ஊக்குவிப்புத் தொகையாகும். அதனால் கட்டாயமாக எழுதவேண்டிய நிலையேற்பட்டிருந்தது. புத்தகங்களையோ அல்லது புதைகுழிகளையோ ஆராயாமல் எழுதக்கூடிய ஒரேயொரு கதாபாத்திரம் நானாகவே எனக்குத் தென்பட்டது. திரு. ஹபீப் அவர்களின் ஆற்றல், முயற்சி, முன்னேற்றம், வெற்றி என்பன பற்றி எனக்கு முழுமையாகத் தெரியாவிடினும், மனிதப் போராட்டங்கள், குறிப்பாக வாழ்வியலில் எல்லாமே ஒருவகையான அனுபவங்களேயாம். எனவே, என் வாழ்வின் போராட்டங்களை நான் எவ்வாறு வெற்றிகொண்டேன் என்பதனை எழுத்தில் வடிக்கத் தூண்டிய ஒலிம்பிக் ஹபீப் அறக்கட்டளை நிதியத்திற்கு என் பணிவான வணக்கங்கள் உரித்தாகுக. உங்கள் சமூகப்பணி மேலும் ஓங்கி வளர எல்லாம்வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன். அதனோடு உங்களை அறிமுகம் செய்துவைத்த மணிமேகலைப் பிரசுரத்தாருக்கும், அவர்கள் தமிழ்ப்பணி உலகெங்கும் மிளிர வேண்டி, வாழ்த்தி மகிழ்கின்றேன்.

பல்வேறு காலகட்டங்களில் என்னை எழுதத்தூண்டிய பின்னணிகளை நான் அவ்வப்பொழுது என் நூல்களிற் குறிப்பிட்டிருக்கின்றேன். அதுபோன்றதொரு நிலைமை இந்நூலாக்கத்தின் முடிவிலும் ஏற்பட்டதனால், அவற்றை சமூகப் பொறுப்புடன் பதிவு செய்யும் நிலைக்கு நான் தள்ளப்பட்டிருந்தேன். குறிப்பாக லண்டனில் இயங்கிவரும் தீபம், உலகத்தமிழ்ப்பார்வை (GTV) ஐ.பி.சி. தமிழ், ஆதவன், மற்றும் யாழ்குடாவில் இயங்கிவரும் டான் தமிழ் ஒளி தொலைக்காட்சிகள், அண்மைக்கால தமிழ் அரசியற் தலைமைகளின் பொறுப்புமிக்க பணிகளை நேர்காணல் மூலம் பதிவு செய்திருந்தன. அதனோடு மனிதநேயத் தொண்டர்களும் ஈழத்தமிழரின் நீதிக்காக குரல் கொடுத்திருந்தனர். இவர்கள் அனைவரும் எம்மால் பாராட்டப்பட வேண்டியவர்கள் என்பதனால், அவர்களின் பணிகளைப் பதிவு செய்து,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்திகளாக எழுதி மணிமேகலைப் பிரசுரத்திற்கு அனுப்பிவிட்டு, நூல் முடிவு பெற்றுவிட்டது என்று கருதியிருந்தேன். ஆனால், மீண்டும் அது நிலையான கருத்தாக அமையவில்லை. ஏனெனில் ஸ்ரீலங்காவின் போர்க்குற்ற அறிக்கையை 17.9.2015 அன்று மனித உரிமை ஆணையாளரான இளவரசர் ஹுசைன், ஜெனிவா ஐ. நாட்டு சபையில் சமர்ப்பித்த நாள்முதல் தொடர்ந்துவந்த செய்திகள், ஈழத்தமிழர் துயரங்களை ஒரு புதிய வடிவில் பதிவு செய்யத் தொடங்கின. குறிப்பாக இவ்வறிக்கைக்குப் பின் அமெரிக்க அரசு மனிதநீதியைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு, கொலைக்களங்களைத் தன்னிச்சைப்படி நிகழ்த்திய சிங்கள அரசு, உள்நாட்டு விசாரணை ஒன்றினைச் செய்தால் போதுமானதென நியதிகளைத் தலைகீழாக்கியிருந்தது.

இந்நிலையில் தமிழ்மக்கள் வாக்குகளினால் பதவியை எட்டிப்பிடித்த மைத்திரிபால சிறிசேனா அரசு தாம் ஆட்சியைக் கைப்பற்றிவிட்டோம் எனத் தமக்குத் தாமே புகழாரம் சூட்டிக்கொள்ள, ஈழத்தமிழர், தமிழகத்தமிழர், புலம்பெயர் தமிழர் என அனைத்துத் தமிழ்மக்களும் நீதி எங்கே? என்று தேடி அறப்போராட்டங்களை முன்னெடுத்தார்கள். சிறப்பாக, தமிழகத்தில் நீதியின் குரலாகத் திகழும் சட்டவாளர் வை.கோ. முதலானோரும், மாணவர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் பல்வேறு வழிகளில் போராட்டங்களை முன்னெடுத்தார்கள். இந்நிலையில் ஐ.நாட்டுச் சபை உரைகள், தமிழகப் போராட்டங்கள் அனைத்தும் பதியப் ıட்டன. அதனோடு தமிழகத்தில் தமிழ் இயல், இசை, நாடகத்திற்குப் பணியாற்றிய மெல்லிசை மன்னர் எம்.எஸ். விசுவநாதன், ஆச்சி மனோரமா, அணு விஞ்ஞானியான அப்துல் கலாம் ஆகியோர் காலமாகியிருந்தார்கள். எனவே, 20 ஆம் 21 ஆம் நூற்றாண்டுகள் எமக்கு நன்கொடையாக அளித்துள்ள மாமனிதர்கள் பற்றிய நினைவுகள் [பக் 118...] எனும் பகுதியில் இவையனைத்தும் காட்சிப்படுத்திப் பதிவுகளாகியுள்ளன. எனவே, ஓர் எழுத்தாளர் கால, நேர வரையறைக்கப்பால் செயற்படுவார் என்பதனையே இவை எடுத்துக்கூறும் செய்திகளாம். இறுதியாக, ஈழத்தமிழருக்காகக் கடந்த காலங்களில் மட்டுமன்றித் தொடர்ந்தும் குரல் கொடுத்துவரும் தமிழக உணர்வாளர்கள் எவரையாவது நான் குறிப்பிட்டு நன்றி கூறத் தவறியிருந்தால்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் அறியாமைக்காக மனம்வருந்தி மன்னிப்புக் கோருகின்றேன். இருப்பினும் அனைத்துத் தமிழர்களும் ஒன்றிணைந்து, தாமிழந்த தாய்மண்ணை மீட்டெடுத்து தமிழை அரியாசணையில் அமர்த்தித் தலைநிமிர்வார்கள் என்பதில் நான் உறுதியாக இருக்கின்றேன். இவற்றின் முக்கியத்துவத்தினை உணர்ந்து கொண்ட மணிமேகலைப் பிரசுரத்தாருக்கும் வாழ்த்தி நன்றிகளைக் கூறி விடைபெறுகின்றேன்.

நன்றியுடன்
**தனபாக்கியம் குணபாலசிங்கம்**

116, ஷெல்லி வீதி
லண்டன் E12 6SW
U.K.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1

# இப்பூமியில் நான் பிறந்த நாள்முதல்

என் கதையை நான் எழுத உட்கார்ந்த நாள் 2015 ஆம் ஆண்டு, பங்குனி மாதம், பதினெட்டாம் திகதி, புதன் கிழமையாகும் (18.3.2015). எனவே, நான் பூமியில் பிறந்த நாட்கணக்குப்படி (16.5.1941) ஏறக்குறைய எழுபத்து நான்கு (74) வருடங்கள் கழிந்துள்ளன. இந்த எழுபத்து நான்கு வருடங்களில் முதல் ஆறு வருடங்கள் பற்றி எழுதுவதற்கு எந்த அறிவுவளர்ச்சி நிலையும் எனக்கு மட்டுமல்ல, கூடுதலான மனிதர்களுக்கும் ஏற்பட்டிருப்பதில்லை என்பதே மனிதன் கண்ட உண்மையாகும். ஏனெனில் மனிதனின் மூளையியக்கம் குறிப்பிட்ட ஒரு வயதில் ஆரம்பமாகி குறிப்பிட்ட வயது முடிவில் முற்றுப்பெற்று விடுவதே அதன் இயல்பாகும். இது ஆளுக்கு ஆள் வேறுபடலாம். ஆனால், உயிரின் இயக்கமும், அதன் செயற்பாடுகளும் அது எடுத்துக் கொண்ட உடலின் துணைகொண்டு சாதனைகள் புரிவதும், வேதனையடைவதும் கண்கூடு. எனவே, ஏறக்குறைய என் 6, 7 ஆவது வயதுகளிலிருந்து அப்பழைய நாட்கள் எவ்வாறு இருந்தன என்பதனை நினைவுகூர முயல்கின்றேன்.

## என் குழந்தைப் பருவம்

என் பெற்றோர் வதுளையில் ஒரு சிறுவர் பாடசாலையின் (அப்புத்தளைக் கிராமம் ஆகலாம்) ஆசிரியர்களாக இருக்கையில் நான் தனியாக யன்னல்களில் ஏறிவிளையாடி விழுந்து தேங்காய் துருவி காயப்படுத்தியதும், பின் என் தம்பி தனநிருபசிங்கம் (தற்பொழுது கனடாவில்) நிலத்தில் தவழ்ந்து திரிவதும், எனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கா பாடசாலை விடுமுறை நாட்களில் வருகையில் ஒளிந்து விளையாடுவதுமே எனக்கு இந்த வயதிலும் நினைவில் நிறைந்தவை ஆவன. இப்பாடசாலையில் நான் ஏதாவது படித்தேனா? என்று குறிப்பிடுவதற்கு எதுவும் இல்லை. பெற்றோர் பாடசாலை விடுமுறை நாட்களில், தந்தையாரின் ஊரான ஏழாலைக்கு வந்து உறவினரைப் பார்த்துத் திரும்புவதும் வழமையாகும்.

தாயாரின் ஊரான கப்புதூருக்குச் செல்வது தவிர்க்கப் பட்டிருந்தது. அதன் காரணங்கள் கேள்விச் செய்திகள். ஆகையினால் அவை இங்கு தவிர்க்கப்பட்டுள்ளன. எனவே, பெற்றோருடைய பிரச்சனைகளையும் உணரத் தொடங்கி யிருந்தேன். வதுளையிலிருந்து மன்னார் மாவட்டத்திலுள்ள மறிச்சுக்கட்டி எனும் பாடசாலைக்கு இவர்கள் மாற்றலாகிச் சென்றபொழுது, அங்கும் ஒரு சில அனுபவங்களைப் பெற்றிருந்தேன். அங்கு வாழ்ந்திருந்த முஸ்லிம் மக்கள், ஆசிரியர்களான எம் பெற்றோர் தங்குவதற்கான வீடுகளைக் களிமண் சுவர்கொண்டு அமைத்துக் கொடுத்தமை, அவர்கள் தம் பிள்ளைகளின் கல்விமீது கொண்டிருந்த ஆர்வமேயாகும். இந்த மக்களின் தனிப்பட்ட வாழ்வுமுறைகள் பற்றித் தெரியாவிடினும், கோடை காலத்தில், தண்ணீர் பற்றாக்குறைக்கும், மாரியில் அருவியாறு, கல்லாறு என்பவற்றின் பெருக்கினால் போக்குவரத்துத் தடைகளுக்கும் முகம் கொடுத்திருந்தார்கள்.

இந்த இரு இயற்கையனர்த்தங்களுக்கும் நாமும் முகம் கொடுத்திருந்தோம். குறிப்பாக, கோடையில் என் தந்தையார் என்னை அழைத்துச் சென்று காலை 4 மணியளவிலே குளிப்பாட்டிக் கூட்டிவருவார். பிற நாட்களில் என் தாயார் ஊர்மக்களுடன் சேர்ந்து ஆற்றில் குளிப்பாட வைப்பார். காட்டுப்பாதையினூடாகப் பயணிக்கும்பொழுது யானைகளைக் கண்டு அஞ்சுவார்கள். நான் என் குழந்தைப் பருவத்தில் எனக்கு இத்தகைய இறப்பின் அச்சம் இருந்ததாகத் தெரியவில்லை. மறிச்சுக்கட்டிப் பாடசாலையில் படித்திருந்தாலும், 'நான் என்ன படித்தேன்? என்று நினைவுபடுத்த முடியவில்லை. என்னுடன் பாடசாலையில் படித்த மற்ற மாணவர், பெற்றோர் எவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவில் இல்லை. நான் இங்கும் தனியாகவே விளையாடுவேன். குறிப்பாகக் கட்டிலில் படுத்து குத்திக்கரணம் அடிக்கையில், நிலத்தில் விழுதலும் உண்டு. இது யாருக்கும் தெரியாது. இன்றுதான் எழுதவேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாகின்றேன். இந்தக் காலத்தில் நான்கு அல்லது இரண்டு சில்லுகள் கொண்ட ஊர்திகள், மற்றும் போக்குவரத்து வசதிகள் எதுவும் அங்கிருக்கவில்லை. முருங்கன், மன்னார் பகுதிகளுக்கு இவர்கள் எவ்வாறு வந்துபோனார்கள் என்றும் எனக்கு இன்றுவரை தெரிந்திருக்கவில்லை. ஆறுகள் பெருக்கெடுக்குங் காலங்களில் இருபக்க மரங்களில் கொடிகளை தொடுத்துக்கட்டி நீரினூடாகப் பயணிப்பர். நாங்கள் எவ்வாறு பயணித்தோம் என்பதனையும் நினைவுபடுத்த முடியவில்லை.

## நினைவில் உறைந்துகிடக்கும் பாடசாலை

வாழ்வின் இரண்டாவது கட்டம் சோகமானதாயினும் அதிற் கிடைத்த அத்திவாரக் கற்கள் மிக உறுதியானவை. இன்றும் அதனை அசைக்க முடியாத நிலையே உண்டு. எனது, 8, 9 வயதுகளில் ஆகலாம், நான் படிப்பிற்காக மீசாலையில் உள்ள மாமனார் வீட்டில் விடப்பட்டேன். வீரசிங்க வித்தியாலயம் என்னும் பாடசாலை இவர்கள் வீட்டுப் புகையிரதப் பாதையைக் கடந்துசெல்லும் தூரத்திலேயே இருந்தது. மாமி மற்றும் அவரது உறவினர் மத்தியில் வாழவேண்டிய ஒரு புது அனுபவம். என் தாயாருக்கு இத்தகைய அனுபவங்கள் கிடைத்திருக்க வாய்ப்பில்லை. ஆனால் அவரின் குறிக்கோள் கல்வி ஒன்றேதான். அக்குறிக்கோளை அவர் ஈட்டியிருந்தாலும், அதனைக் கண்டுகளிக்க முடியாமற்போனது ஒரு துர்ப்பாக்கியமே. இப்பாடசாலையில் மூன்றாம் வகுப்பிலே சேர்ந்தேன். அப்படியானால் இதற்குமுன் பெற்ற கல்வியை என் பெற்றோரே தந்திருந்தனர் என்பது வெள்ளிடைமலை. ஆனால் எப்படி அ, ஆ கற்றேன்? எப்படி கணக்குகளுக்குரிய எண்களைக் கூட்டிக் கழித்தேன்? என்பதற்காகிய நினைவுகள் எதுவுமே இல்லை. அது என் மூளையின் குறைபாடு என்றே கூறவேண்டும். இப்பாடசாலையில் 'ராசாவாத்தியார்' எனும் வயதுபோன, ஒரு ஆசிரியர் என்னைப் பாராட்டிப் பேசுவார். அந்தப் புகழுரையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்தாலும், உறவினர் வீட்டில் வாழும் நிலை கவலைக்குரிய தொன்றாகவே அமைந்திருந்தது. அதனால், புகையிரதங்கள் ஓடும் சத்தங்கள் காதுகளில் விழுந்ததும், அம்மா வந்து இறங்க மாட்டாரா? என்று புகையிரதங்களைப் பார்த்து ஏங்குவதே வழமையாகும். பின் பெற்றோர் விடுமுறைக்கு ஏழாலைக்கு வந்தபொழுது, என்னை அழைத்திருந்தார்கள். அப்பொழுது தாயாரிடம் மீசாலை உறவினருடன் வாழ்வது எனக்கு முடியாத செயல் என்று கூறினேன். அதனால் அவர் வேறு வழியின்றி ஏழாலை உறவினருடன் தங்கிப்படிக்க ஒழுங்குகள் செய்திருந்தார். இங்கு மல்லாகம் தமிழ்க்கலவன் பாடசாலைக்குச் செல்வதாயின் ஒரு மைல் தூரம் சிறுகால்களின் துணைகொண்டு பயணிக்க வேண்டியிருந்தது. இவர்கள் தந்தையாரின் ஒன்றுவிட்ட சகோதரங்கள். அம்மாமீது மதிப்பும், பாசமும் உள்ளவர்கள்.

இவர்கள் வீட்டில் வாழ்கையில் கூழ்காய்ச்சி அனைவரும் சூழ இருந்து சுவைக்கும் மரபுண்டு. அதற்காக பலா இலை எடுத்து வரும் பணி எனக்கிருந்தது. இதனைவிட, என் தந்தையாரின் தந்தை தம்பிமுத்து, தனியனாகவே பக்கத்துக் காணியில் வாழ்ந்திருந்தார். இவரது மனைவி மூன்று ஆண்மக்களைப் பெற்ற பின் காலமாகிவிட்டார். மூன்று மக்களும் குடும்பப் பொறுப்புடன் வாழ்ந்திருந்தாலும், இவர் தனியனாகவே நீண்ட காலம் வாழ்ந்திருந்தார். வாழைத் தோட்டத்தின் வருமானத்தைக் கொண்டு சமைத்து உண்ணல், தோட்டந்துரவுகளைக் கவனித்தல் போன்றவற்றை எதுவித உதவிகளுமின்றித் தானே செய்துவந்த ‘ஒரு தன்னம்பிக்கை’யுடைய மனிதர். எனக்கும் அவரது சாப்பாட்டினைச் சுவைக்கும் வாய்ப்புகள் கிடைத்திருந்தன. ஆனால் இன்றும் என் மனதை உறுத்தும் செய்தி, இவர் பிற்காலத்தில் எவ்விதம் தன் உரும்பிராயிலிருந்த இரண்டாவது மகனின் பராமரிப்பில் வாழ்ந்து, இறப்பைத் தழுவினார் என்பதனை அரியமலர் (லண்டனில் வாழ்கின்ற சிவஞானத்தின் மகள்) முதன்முறையாக (2009 இன் பிற்பகுதியில்) என்னைச் சந்தித்தபொழுது கூறியதனாலே உணர்ந்துகொள்ள முடிந்தது. இதற்குக் காரணம் ஈழத்தில் வாழும்பொழுதே முழுமையாக உறவினர்களின் தொடர்புகள் என் வாழ்க்கைச் சூழலில் கிடைக்க முடியாமையே காரணமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாயாரின் இறப்பும்,
## தாயற்ற வாழ்வின் சோகங்களும்

தாயார் பிள்ளைகள் பற்றிய தன் குறிக்கோளில் வெற்றியீட்டிய பின்னரே எம்மை விட்டு வெளியேறியிருந்தார். முதலாவதாக எம் கல்வி, இரண்டாவதாக தாயற்ற நிலையில் சமூகத்துடன் வாழ்ந்து பயணித்தல், சமூக சேவைகள் என்பன தெரிந்தோ, தெரியாமலோ இடம்பெற்றிருந்தனவென்றே இன்று கருதமுடிகின்றது. ஏனெனில் அவர் எம் சிறுபிராயத்திலே எம்மை விட்டுப் பிரிந்துசென்றிருந்தாலும், நாங்கள் மூவரும் ஏதோ ஒரு வழியில் கல்வியின் துணையுடன் எம் வாழ்வினை உறுதியாகக் கட்டி எழுப்பியிருந்தோம் எனில் மிகையாகாது. இதற்கும் பல பண்பாளர்களின் பங்களிப்புகள், இன்றும் நன்றியுடன் பாராட்டும் வகையில் இருந்துள்ளன என்பதும் மறுக்க முடியாத உண்மையாகும். அவற்றைக் குறிப்பிடல் அவசியமாகும்.

என் தாயார் உடல்நலன் பாதிப்புக்குள்ளாகியதும், தந்தையார் யாழ்ப்பாண வைத்தியசாலையில் சேர்த்திருந்தார். அதனால் அவரின் உறவினர்கள், குறிப்பாக சகோதரர் தில்லையம்பலம், சகோதரி தங்கம்மா ஆகியோர் முழுமையாக அவர் நலனைக் கவனித்தார்கள். பின் மூளாயிலிருந்த தனியார் வைத்தியசாலைக்குக் கொண்டுபோகும் வழியில் இவர் உயிர் நீத்தார். இச்சாவு கணவர், பிள்ளைகள், உறவினர் (இரு பகுதியினர்) என அனைவரையும் பாதித்திருந்தது. குறிப்பாகப் பிள்ளைகளாகிய எமக்கு நிரந்தரமான இழப்பாகும். இத்தாயை வேறு எவரும் நிரப்புவதற்கில்லை. அது எப்பொழுதுமே வெற்றிடமாகவே இருந்தது. நாம் மட்டுமின்றித் தாயைச் சிறுவயதில் இழந்த அனைவரும் உண்மையான அன்பை முற்றாக இழந்தவர்களே ஆவர். ஒவ்வொரு பிள்ளையும் தாயின் அன்பில் வளரும்பொழுது அதற்கு வாழ்க்கையில் தன்னம்பிக்கை என்பது இயல்பானதாகும். ஆனாலும், படைத்தவன் சகலவழிகளிலும் எம்மை வழிநடத்தியிருந்தான். அதற்கும் பூர்வபுண்ணிங்கள் கைகொடுத்திருந்தன. என் தகப்பன் ஒரு தனியியல்புகள் கொண்ட ஒரு மனிதர். சிறுவர் பாடசாலை அதிபர் வேலை தவிர வேறு சமூக சேவைகளில் ஈடுபட்டிருக்கவில்லை. அதனால் தாயார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறந்ததும், எம்மைத் தாயாரின் தம்பியாகிய தில்லையம்பலம் என்பவர் பொறுப்பில் விட்டதோடு, தாயாரின் சேமிப்புகள் அனைத்தையும் கப்பூதூரிலே கொண்டுவந்து போட்டிருந்தார். இன்னும் சொல்லப்போனால், இவர் சமையற்கட்டிற்குப் போய் தேநீர்கூடத் தயாரிக்கும் அனுபவமற்றவராகவே நான் அவதானித்திருந்தேன். மாமா தில்லையம்பலம் கப்பூதூர் பாடசாலை அதிபராகப் பணியாற்றியதோடு மற்று அவர் அப்பொழுது திருமணமாகாத ஒருவராகவும் இருந்தார். எனினும் நாம் அவர் பராமரிப்பில் இருந்தோம். அக்கா சிவபாக்கியம் மட்டும் இராமநாதன் கல்லூரி விடுதியிலிருந்து தின்னவேலி பயிற்சிக்கல்லூரி விடுதிக்கு மாற்றி விடப்பட்டிருந்தார். இது செலவீனத்தைக் குறைப்பதற்கான ஒரு வழியாகும். நானும், தம்பியும் மாமனாரின் அன்பிலும், அரவணைப்பிலும் வாழ்ந்துகொண்டு கப்பூதூர் பாடசாலையில் (இது என் பாட்டனார் ஏகாம்பரம் கட்டிய பாடசாலையாகும்) படிக்க ஆரம்பித்தோம்.

என் தாயார் 1951 ஆம் ஆண்டு காலமாகையில் என் தம்பிக்கு நான்கு வயதும், எனக்குப் பத்து வயதும், அக்காவிற்குப் பதின்மூன்று வயதும் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். என் மாமனாருடன் வாழ்வது என்பது ஒரு புதிய அனுபவங்களைக் கொண்ட வாழ்வின் புதிய அத்தியாயம் என்றே கூறவேண்டும். தாயாரின் தாய் நலனுடன் அங்கு வாழ்ந்திருந்தாலும், இவர் எம்மை வேறு எவரது பொறுப்பிலும் விட விரும்பவில்லை. காரணம், இவரும் என் தாயாரும் ஒருவர்க்கொருவர் அன்பு காட்டி வாழ்ந்தமையினால், அவரது பிள்ளைகளைப் பராமரிப்பது தன் தலையாய கடமையென்றே கருதினார். அதனோடு இவரும் கல்வியை வழங்குவதனாலே, எம்மைச் சிறந்த கல்விமான்களாக உயர்த்த முடியும் என்று கருதித் தொழிற்பட்டார். இதன் முதற்படியாக என்னை ஐந்தாம் வகுப்பு புலமைப்பரிசுத் தேர்விற்குத் தோற்றவைத்து வெற்றியீட்டியிருந்தார். என் தந்தையார் என் கல்விக்குத் தேவையான பிற உதவிகளைச் செய்து வருவார். ஆனால், அவரது வாழ்வே மனைவியை யிழந்ததனால் மிகப்பாதிப்படைந்திருந்தது. அதனால் நோய்வாய்ப்பட்ட நிலையில் மாமனார் தில்லையம்பலத்திடமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தஞ்சமடைந்தார். அப்பொழுது மாமனார் திருமணமாகி குடும்பஸ்தராகியிருந்தபொழுதும் ஒரு மாதம் வரை பராமரித்து சுகப்படுத்தியபின், அவர் மறுவிவாகம் செய்தல் அவசியம் என்று கூறியதோடு, தற்காலிக உதவியாளராக இருக்கத் தன் தாய்வழி மாமனையும் கூடவே அனுப்பிவைத்திருந்தார். அதனைத் தொடர்ந்து தந்தையார் இசைக்கலைஞர் வழிவந்த பரம் - தில்லைராசாவின் மூத்த சகோதரியைத் திருமணம் செய்திருந்தார். இவ்வாறு தந்தையாருக்கு புதுவாழ்வு கிடைத்தபொழுதும், இரண்டாவது மனைவி பொறுப்பற்று பொழுதுபோக்குகளில் அதிக ஈடுபாடுடையவராக இருந்தபடியினால், அவர் தன் பிள்ளைகளைக்கூட கல்வியை நோக்கி நெறிப்படுத்தத் தவறியிருந்தார் என்பது மட்டும் இங்குக் குறிப்பிடல் ஏற்றதாம்.

## எனது பாடசாலைக் கல்வியும், பல்கலைக்கழகப் பயணமும்

ஐந்தாம் வகுப்பு புலமைப்பரிசுக் கல்வியை நான் நெல்லியடி மகாவித்தியாலத்தின் விடுதியிலிருந்து *1953 - 1962* வரை மேற்கொண்டிருந்தேன். விடுதியில் ஒரு மேற்பார்வையாளர் கண்காணிப்பின் கீழ் ஏறக்குறைய இருபது மாணவிகள் இருந்து கல்வி கற்றோம். பாடசாலை அதிபர்களாக கலாநிதி. சிவப்பிரகாசம் அவர்களும் ஏ.ரி. சபாரட்னம் அவர்களும் இக்காலப்பகுதியில் கடமையாற்றியிருந்தார்கள். திரு. சபாரட்னம் பாடசாலையை சகல துறைகளிலும் முன்னேற்றுவதற்காக முயற்சிகளை எடுத்தவராவார். ஊக்கமுள்ள, சேவை மனப்பான்மை கொண்ட பல ஆசிரியர்களும் இங்கு பணியாற்றியிருந்தமையும் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கதாகும். அதிபர் சிவப்பிரகாசம் மற்றும் ஆசிரியர்களுடன் விடுதி மாணவ, மாணவிகள் சேர்ந்து எடுத்த நிழற்படம் இவர்களைப் பதிவு செய்யும் வகையில் பக். *172* இல் தரப்பட்டுள்ளது. இப்படத்தில் நிலத்தில் உட்கார்ந்திருக்கும் என்னை X அடையாளமிட்டுக் காட்டப்பட்டுள்ளது. இப்படத்தில் இடம்பெற்றுள்ள மாணவ மாணவிகளிற் பெரும்பாலோர் கல்வியைத் துணைகொண்டு பல்வேறு துறைகளிலும் தொழில்வாய்ப்பினைப் பெற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். ஆசிரியர்கள் அனைவரும் சிறந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விச் சமூகத்திற்கு எடுத்துக்காட்டாக இருந்தமையே இதற்கு முக்கிய காரணம் எனலாம். விடுதி வாழ்க்கை முறைகள்கூட பயிற்சி அளிக்கும் களங்களாகவே தொழிற்பட்டிருந்தன. இத்தகைய நிர்வாகக் கட்டமைப்பு அனைத்தும் அரசின் பண உதவி மூலமே இடம்பெற்றிருந்தன. அதிபராக ஏ.ரி. சபாரட்னம் கடமையாற்றியபொழுது உயர்கல்விப் படிப்புகளுக்கு மட்டுமன்றி, மாணவ, மாணவிகளின் விடுதிகளும் தரமாகக் கட்டப்பட்டமையினால், விடுதி மாணவர்கள் வாழ்வுமுறைகள் அனைத்தும், தனியார் பாடசாலைத் தரத்திலும் பார்க்க உயர்வாக அமையலாயின என்பதும் இங்குக் குறிப்பிடல் அவசியமாகும். நேர அட்டவணைப்படி நாமும் வாழக் கற்றிருந்தோம். குறிப்பாக விடுதியில் படிப்பதற்கென நேரம் ஒதுக்கப்பட்டிருக்கும். அதற்காகிய வெளிச்சங்களும் வழங்கப்பட்டிருக்கும். ஆனால், பிறர் துயின்று கொண்டிருக்கையில் இடையூறு விளைவிக்கும் வகையில் படுக்கையறையினுள், (இது ஒரு நீள் சதுர மண்டபம்) படிப்பது குற்றமாகும்.

ஆனால் இப்படத்தில் இடமிருந்து வலமாக நிற்கும் செல்வத் திரவியம் உயர்தரவகுப்பு மாணவி ஆவார். இவர் தன் கல்வியின் ஆர்வத்தினால் விடியற் சாமம் 3-4 மணிக்கெல்லாம் ஒரு குப்பி விளக்கினைக் கொளுத்தி வைத்துப் படிப்பார். அப்பொழுது நான் ஆறாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். எப்படி என்று எனக்கு நினைவுகூர முடியவில்லை. நானும் இவருடன் இணைந்து படிக்கும் பழக்கத்தை மேற்கொள்ளலாயினேன். இவர் ஒரு கட்டுப்பாடுடைய மாணவி. ஆகையினால் படிப்பிற்கு மட்டுமே கூட்டுச் சேர்வோம். மற்றும்படி அவர் யாரோ? நான் யாரோ? ஏறக்குறைய ஆறு வருடங்களுக்குமுன் எம்முடன் விடுதியில் வாழ்ந்து பழகிய பத்மா லண்டனுக்கு வந்தபொழுது செல்வத் திரவியத்தின் தொலைபேசி இலக்கத்தினைத் தந்தார். நானும் ஆவலுடன் தொடர்பு கொண்டேன். செல்வத்திரவியம் வயது முதிர்ந்த நிலையிலும் தன் உறுதியான கோட்பாடுகளைக் கைவிட்டிருக்கவில்லை. அதனால் அவரது பதில் “தனபாக்கியம் நான் பிள்ளைகளுக்கு வீட்டில் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கின்றேன். பின்பு தொடர்புகொள்ளும்” என்றார். அந்தக் குரல் பழைய பாணியிலேயே இருந்தது. ஆனால் அதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் நன்றிகளோ எல்லைகளற்றவை. ஏனெனில் பாடசாலைத் தேர்வுகளில் மட்டுமன்றி, பல்கலைக்கழகத் தேர்வுகளிலும் நான் முதலாம் பிரிவில் சித்தியடையவைத்த ஒருவரது அதிகார பூர்வமான குரலாகும். இவ்வாறு நல்ல மனிதர்களின் தொடர்புகள் எனக்குத் தொடர்ந்தும் ஏற்பட்டு என் கல்வியை மேம்படுத்திக் கொண்டேயிருந்தன. 1962ஆம் ஆண்டு நான் பல்கலைத் தேர்வில் சித்தியடைந்து பேராதனைப் பல்கலைக் கழகத்தில் படிக்கும் வாய்ப்பைப் பெற்றிருந்தேன். தந்தையார் விடுதி வாழ்க்கைக்கான எல்லா ஆயத்தங்களையும் செய்துகொண்டு என்னை விடுதியில் சேர்த்துவிட்டுத் தன் மாறாசேனாவில் இருந்த பாடசாலைக்குப் போயிருந்தார். இதன்பின் என் வாழ்க்கையில் ஏற்பட்ட விடுதி வாழ்க்கை, பல்கலைக்கழக வாழ்வுமுறைகள், நூல் நிலைய அனுபவங்கள், சிங்கள மாணவிகளுடனான உறவுமுறைகள், விடுதியின் தலைவியாக இருந்த செல்வி. மதியாபரணத்தின் ஆளுமைகள் அனைத்தும் அற்புதமானவை. ஆங்கிலேயர் அற்புதமாகத் திட்டமிட்டுக் கட்டிய பல்கலைக்கழக வளாகத்தின் இயற்கையழகுகள், இலையுதிற் காலத்தில் பூக்கள் சொரிந்து அழகுபெற்றுக் கிடக்கும். 'காதல் வளைவு' (love bend) அத்தனையுமே இயற்கையுடன் மனிதன் கூடிச் சாதித்த சாதனைகளை, மாணவர்கள் தொடர்ந்தும் அனுபவிப்பார்கள். இந்தப் பல்கலைக்கழகத்தின் அழகு அனைவரையும் பிரமிக்க வைக்கும் என்பதில் ஐயமில்லை.

அங்கிருந்த மூன்று பெண்கள் விடுதிகளில் எனக்குக் கிடைத்த ஹில்டா ஒபயசேகரா விடுதி, வகுப்புகளுக்கு குறுகிய நேரத்தில் செல்வதற்கு உதவும் வகையில் மிகவும் அணித்தாக அமைந்திருந்தது. இரு மாணவிகள் தங்கிப்படிக்கும் வகையில் இரு அறைகள், படுக்கை வசதிகள் கொண்டதனால், படிப்பு என்பது எவரது தலையீடுகளின்றிச் சுதந்திரமான முறையில் நடைபோடும் பாக்கியத்தையும் பெற்றிருந்தது. மணி அடிக்க உணவுச்சாலைக்குச் செல்வோம். அங்கு உணவுகள், உண்ணும் தட்டுகள், கரண்டிகள் என்பன வரிசையாக அடுக்கப்பட்டிருக்கும். கைகளால் உண்ணுவது தடை செய்யப்பட்டிருந்தது. ஆனால், செல்வி. மதியாபரணம் விடுதி மேற்பார்வையாளர் மட்டுமின்றி, பல்கலைக்கழக விரிவுரையாளராகவும் பணியாற்றிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தார். இருப்பினும் விடுதி நிர்வாகத்தில் கூடிய அக்கறை கொண்டவர். எனவே, நாம் சாப்பிட்டுக் கொண் டிருக்கையில், உணவுச் சாலையில் வெளியே நடைபாதையில் நடந்துகொண்டே பொறுமையாக அனைத்தையும் கண்காணிக் கும் ஆற்றல் கொண்டவர் ஆவர். உயரமான இவரது தோற்றமும் அதற்கு உதவியாகவே இருந்தது. தமிழ் மாணவிகள் கூடுதலாக, இவரது கண்களுக்கெட்டாத சைவ உணவுகள் மேசையிலே உண்பது வழமையாகும். எனவே, சில சைவக்கறிகளை விரல்களால் குழைத்து உண்பதில் ஏற்படும் இன்பத்திற்காக, கைகளைப் பாவித்து உண்டுவிட்டு, கைகளை மறைத்துக்கொண்டு வெளியேறுவர். இதனை இவர் என்றாவது கண்டிருக்க வாய்ப்பில்லை. இவர் ஒரு சிறந்த நிர்வாகி மட்டுமன்றி, அடக்கமான ஆற்றல்கொண்ட தமிழ்ப்பெண் என்றே நான் இன்றுவரை கருதிவருகின்றேன். இனி இக்காலத்தில் வாழ்க்கை யானது படிப்பிற்கப்பால் தமிழ் - சிங்கள மாணவிகளுடன் ஏற்படும் தொடர்பாடல்கள் சமூக அறிவு பற்றிய சிந்தனை களையும் வளர்க்கலாயின. இனவுணர்வுகளுக்கப்பாற்பட்ட மனிதத்தினையே அனுபவிக்க முடிந்தது. இத்தகைய புதிய கல்விச் சூழல் தனிப்பட்ட ஆளுமைகளின் வளர்ச்சிக்கு உறுதுணையாகி இருந்தன.

பல்கலைக்கழக இளம்கலை சிறப்புப் பட்டமாணிக்கு நான் வடமொழியைத் தெரிவுசெய்திருந்தேன். இதற்குக் காரணம் முதலாம் ஆண்டுத் தேர்வில் கிடைக்கப்பெற்ற புள்ளிகளே (A Grade) காரணமாகும். வீட்டில் உறவினர் “கோவிற் பூசாரியாகத் தொழில் பார்க்கப்போகின்றா” எனக் கேலி செய்தனர். உண்மையில் வடமொழியைக் கற்றதனாலே வரலாற்றடிப்படையில் வடமொழி எவ்வாறு ஊடுருவித் தென்னக மொழிகளைச் சிதைத்திருந்தது என்பதனை என்னால் அடையாளப்படுத்த முடிந்தது. குறிப்பாக, பழந்தமிழ் நாடான சேரநாட்டு மக்களும், தமிழ்மொழியும் வடமொழியின் தாக்கத்தினாலும், வடநாட்டுப் பிராமணக் குடியேற்றங் களாலும் முற்றாகத் தமிழ்மொழியிலிருந்தும், மூவேந்தர் எனும் பாராட்டைப் பெறுவதிலிருந்தும் அடையாளங்களையிழந்து மலையாளம், மலையாளிகள் ஆனார்கள் என்பன போன்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாறுகளையும் என்னால் என் வரலாற்று நூல்களில் ஆராய்ந்துகாட்ட முடிந்ததெனலாம். அதனோடு இருக்குவேதம் எனும் வழிபாட்டு நூல் தரும் வரலாற்றுக் குறிப்புகளே, அவர்கள் வெளியிலிருந்து நாடுகள் பிடிக்கும் முயற்சியில், இந்துவெளியில் ஆய்வாளர்கள் அதிசயிக்கும் வகையில் நன்கு திட்டமிடப்பட்ட அடுக்கு மாளிகைகள் மற்று லிங்க யோனி சிவ வழிபாட்டுத் தலங்களையும் அழித்துத் தம்மை உறுதிப்படுத்தினார்கள் என்ற செய்திகளையும் மற்று தாம் சுதேசிகளைவிட தோற்றத்தால் உயரியவர்கள் எனவும் தம் வருகையைப் பதிவு செய்து எமக்கு அறிவுறுத்தியுள்ளனர் எனில் மிகையாகாது. எனவே, இந்த வடமொழிக்கல்வியானது இந்திய இனங்களின் வரலாற்றில் ஏற்பட்ட பல்வேறு சமூக வளர்ச்சிகளையும் எனக்கு விளக்கமாகத் தந்துதவியிருந்தது என்றே கூறவேண்டும்.

இவ்வாறு வடமொழி, தமிழ்க் கல்விகளைத் துழாவினாலும் பேராதெனிய வளாகத்தின் இயற்கையழகு மகாவலி ஆறும், நீரோடைகளும் ஒருபுறத்தில் பூமியைக் குளிரூட்டிக் கொண்டிருக்கையில், மறுபுறத்தில், சிறு சிறு குன்றுகளும், பல நிற பூக்களால் மூடிமறைக்கப்பட்ட பெருமரங்களும் அதன் அழகும்கூட எனக்கு இயற்கை பற்றிய அறிவினை வழங்கிக் கொண்டிருந்தன. இயற்கையை ஆயிரக்கணக்கான வழிகளில் அழகூட்ட இறைவனின் சங்கற்பம் எத்தனையாகலாம். கோடானுகோடி என மதிப்பிடும் வகையில் இயற்கையின் அழகை முற்றாக வர்ணித்தவர்கள் இதுவரை எவரும் இல்லையென்றே கூறவேண்டும். மனிதன் அனுபவிக்கவென்று இயற்கையை இறைவன் படைத்திருந்தாலும் மனிதன் முழுமையாக ஊடுருவிப் பார்க்கமுடியாதவனாகவே இன்றுவரை இருந்து வருகின்றான். இந்த இயற்கையுடன் பேசிக்கொண்டே வகுப்புகளுக்குச் செல்வேன். குறிப்பாக விரிவுரைகளைக் காட்டிலும் என் நாட்டமெல்லாம் நூல் நிலையத்தில் பலமாடிகளில் சேகரித்து வைக்கப்பட்டிருந்த நூல்களை நோக்கியே இருந்தன. "கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு" எனும் பழமொழிக்கேற்ப அங்கிருந்த நூல்களில் சிறுதுளியளவிலேயே என்னால் படிக்க முடிந்ததெனலாம். வாழ்வில் கிடைத்த இச்சந்தர்ப்பத்தை நழுவவிடாமல் நான்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடங்களும் நூல்களிலேயே மூழ்கிக் கிடந்தேன். அதன் பயனாக வடமொழியில் முதலாம் பிரிவில் சித்தியடைந்தேன். தேர்வு வெளிவந்ததனைத் தொடர்ந்து என்னை தற்காலிக விரிவுரையாளராகத் தொழில்புரிவதற்கு நியமனக் கடிதம் கிடைக்கப் பெற்றது. முதன்முதலாகப் படித்து முடிந்து ஓய்வு எடுக்கு முன்னரே தொழில் வாய்ப்பென்பது இறைவனின் ஆசீர்வாதமேயாம். கைநிறையப் பணமும் கிடைக்கலாயிற்று. ஆயினும் இருவருடங்களே பேராதெனியப் பல்கலைக்கழகத்தின் வடமொழித்துறையில் உதவி விரைவுரையாளராகக் கடமை புரிந்தேன். இக்காலத்தில் கொழும்பு பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்தில் புதிதாக இந்துக்கலாசாரத்துறை உருவாக்கப்பட்ட நிலையில், நான் அங்குச் சென்று நிரந்தரப் பதவியினைப் பெற்று இந்து சமய விரிவுரையாளராகப் பதவியேற்றேன். பேராதெனியப் பல்கலைக்கழகத்தில் மாணவியாகவும், பின் விரிவுரையாள ராகவும் பணியாற்றியதனால் கிடைக்கப்பெற்ற அனுபவங்கள், கொழும்பில் புதிய தலைமைகளுடன் கூடிய அனுபவம் பெற்ற பல விரிவுரையாளர்களுடன், பணியாற்றப் பக்கபலமாக இருந்தன. கொழும்புப் பல்கலைக்கழகத்தில் என் மாணவர்களான திரு. கனகரட்னம், செல்வி. கலைவாணி, செல்வி. நாச்சியார், திரு. சண்முகலிங்கம் முதலானோர் பட்டதாரிகளான பின்னர் கொழும்பு, பேராதெனியா மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகங்களில் விரிவுரையாளர்களாகப் பணியாற்றியிருந்தனர். இவர்களுள் திரு. சண்முகலிங்கம் யாழ்ப்பல்கலைக்கழக உபவேந்தராகவும் நிர்வாகத்தினை ஏற்றிருந்தமையும் சிறப்பான செய்தியாகும்.

மற்று, என்னுடைய கல்வி வளர்ச்சிக்கு இக்காலத்தில் பெரும் ஊக்கசக்தியாகவும், அனுதாபம் கொண்டவராகவும் இருந்த மாமனிதர் ஒருவரை நான் இங்கு நினைவுகூரல் மிக அவசியமானதொன்றாகும். இந்த மாமனிதரை இன்னோர் மாமனிதர் அறிமுகம் செய்துவைத்தார். இவர்களுள் இரண்டாவது மாமனிதர் என்பவர்தான் தமிழ் சமூகத்தின் தவத்தினால் கிடைக்கப்பெற்ற பௌதிகவியல் பேராசிரியரான ஆ.வி. மயில்வாகனம் ஆவார். இவரை அறிமுகம் செய்தவர் மட்டு விலைச் சேர்ந்த திரு. நமசிவாயம் எனும் ஆசிரியராவார். இவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவரும் மனிதநேயத்துடன் வாழ்ந்த தவப் புதல்வராவர். குறிப்பாக, பேராசிரியர் மயில்வாகனம் தமிழ் - சிங்களம் எனும் பாகுபாடுகளைக் களைந்து அனைவரையும் அன்பினால் கட்டியணைத்து, தன்னால் முடிந்த உதவிகளை அனைவருக்கும் வழங்கியவர் என்பது நானறிந்த உண்மையாகும். அதனோடு தமிழிலும் - சைவத்திலும் வைத்திருந்த பற்றினால் தான் சேகரித்து வைத்திருந்த சைவசித்தாந்த நூல்கள் அனைத்தையும் எனக்குத் தந்துதவினார். இவரைப்போலவே என் மாமனார் ஏ. தில்லையம்பலமும் தன்னிடமிருந்த அனைத்து சைவசித்தாந்த நூல்களையும் எனக்குத் தந்து என் ஆய்வுகளுக்கு உதவியமையும் இத்தருணம் குறிப்பிடல் அவசியம். இந்த இரு தமிழ்ப்பற்றாளர்களின் நூல்கள் அனைத்தினையும் நானும் நன்கு படித்து புலமை பெற்றேன் எனில் மிகையாகாது. இப்பின்னணியிலேயே பிற்காலத்தில் என் 'சைவ சித்தாந்தமும் விஞ்ஞான உலகமும்' எனும் நூல் உருவாக முடிந்தது எனில், இப்பெருமை இவர்களையே சென்றடையவேண்டும். நான் இந்நூலை எழுதுமுன்னரே பேராசிரியர் மயில்வாகனம் (1987) காலமாகியிருந்தார். ஆனால், என் மாமனார் என் நூல்கள் அனைத்தையும் படித்து மகிழ்ந்துகொண்டு இன்னமும் வாழ்ந்து (99 வயது) கொண்டிருக்கின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்நூலிற்குக் கிடைத்த சாகித்திய மண்டலப் பரிசில்கள் இவர்களை நினைவுகூரவைக்கும் நூலெனில் மிகையாகாது.

## முதுகலைமாணிப் பட்டப்படிப்பின் அனுபவங்கள்

இனி, ஒரு பல்கலைக்கழக விரிவுரையாளரின் சிறப்புத் தகைமைகள் பற்றி ஆராய்வோமானால், பல்கலைக்கழகத்தில் மாணவர்களை வழிநடத்தும் வகையில் விரிவுரைகள் அமைதல் அவசியமாகும். இதற்கு மேலாக விரிவுரையாளர்கள் புது புதுத் துறைகளில் படித்து, தாமும் தரப்படுத்தப்பட்ட மாணவர்களாகவே வாழ்வர். நிரந்தரமாகப் பதவியை வைத்திருப்பதற்கும் இரண்டாவது பட்டமொன்று, எடுத்துக் கொள்ள இரண்டு, மூன்று வருட காலத்தினை பல்கலைக்கழக நிர்வாகம் வழங்குவதும் இதற்கு உதவியாக அமையும். இந்நிலையொன்றிற்கும் நான் முகம்கொடுத்தேன். அப்பொழுது

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கலைப்பீடாதிபதியாக இருந்த பேராசிரியர் ஆரியபாலா என்னை பூனா பல்கலைக்கழகம் (மத்திய இந்தியாவின் பகுதி) சென்று தத்துவத்தில் முதுகலைமாணிப் பட்டம் எடுத்துவரவேண்டு மென்று கோரியிருந்தார். என் தலைமைப்பீடப் (தமிழ் - இந்து கலாசாரம்) பேராசிரியரான ஆ. சதாசிவம் மாற்றுக்கருத்துகள் வைத்திருந்ததாகத் தெரியவில்லை. நான் விரும்பாமலே பூனா பல்கலைக்கழகத்திற்குச் சென்றிருந்தேன். அங்கும் என்னைத் தத்துவபீடத்தில் படிக்க அனுமதி வழங்குவதில், நிர்வாகத்தினர் விரும்பவில்லை. இக்குழப்ப சூழ்நிலையில் நான் சந்தித்த ஒரு இலங்கைத் தமிழர் விரிவுரையாளர் திரு. சி.க. சிற்றம்பலம் (இவர் பின்னால் யாழ் பல்கலைக்கழக வரலாற்றுத்துறைப் பேராசிரிய ராவார்) ஆவார். அவர் அப்பொழுது பூனா பல்கலைக்கழக மாணவரென்பதனால் எதுவும் உதவுவதற்கில்லை. ஆனால் என்னை ஆறுதல்படுத்தும் வகையில் தான் சமைத்துவைத்திருந்த சாப்பாட்டினைத் தந்து வழியனுப்பியிருந்தார். இந்நிலையில் இந்திய மத்திய அரசுக் கல்வித்துறை என்னைச் சென்னைப் பல்கலைக்கழகத்திற்குச் செல்லும்படி பணித்தது. இதனை மன மகிழ்ச்சியுடன் ஏற்று நான் அங்கு சென்றிருந்தும், இரண்டு மாதங்கள் தாமதமானபடியினால் சென்னைப் பல்கலைக்கழகம் உடனடியாக என்னை ஏற்றுக்கொள்ளவில்லை. அதனால் அடுத்த வருடம் வரை நான் சென்னையிலிருந்த பிற நாட்டினருக்கு உதவும் பணிமனையில் (ICCR) தங்கவைக்கப்பட்டேன். இக்காலத்தில் இவர்கள் தலைமையில் ஒழுங்கு செய்யப்படும் ஊட்டி, பங்களூர் சுற்றுலாக் குழுவினருடன் நானும் இணைந்து தென் இந்தியாவின் இயற்கை வளங்களை அனுபவிக்கலாயினேன்.

முதன்முதலாக ஆங்கிலத்தில் படிக்கவேண்டிய சூழ்நிலையில், ஆங்கில அறிவைப் பெருக்குவதிலும் முயற்சிகள் எடுத்திருந்தேன். அதனோடு என் இக்கட்டான நிலையையறிந்த கொழும்புப் பல்கலைக்கழக உபவேந்தர். (இவர் பேராசிரியர் மயில் வாகனத்தின் மாணவர். பெயர் நினைவிலில்லை) சென்னை வந்த பொழுது என்னை அவர் தங்கியிருக்கும் விடுதியில் சந்திக்க வைத்தார். நானும் இன்னோர் தமிழ்ப்பெண்ணும் (கொழும்புப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தவர்) சென்று சந்தித்தோம். இது ஒரு ஆறுதல் கொடுக்கும் சந்திப்பாகவே இருந்தது. வேறு ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்புப் பாடசாலை அதிபர். இவரும் சிங்களவர். அதிகம் பழக்கமில்லாதவர். ஆனால் ஆங்கில ஆசிரியை மூலம் அறிமுகமாகியவர். மற்று, ஒரு பிக்கு முதலானோர் மனிதநேயத்துடன் என்னை வந்து பார்த்துப் பேசிப்போனார்கள் என்றால், இங்கு தமிழ் - சிங்களம் எனும் இனக்குரோதமற்ற மனிதர்கள் (1972-ஆம் ஆண்டில்) பலர் இருந்தனர். இன்னும் இருக்கிறார்கள் என்பதனை இங்குக் குறிப்பிட்டேயாக வேண்டும். சென்னைப் பல்கலைக்கழகத்தின் 1973ஆம் ஆண்டிற்கான பல்கலைக்கழக வகுப்புகள் ஆரம்பமாகும் நிலையில், பூர்வீக வரலாறுகளும், தொல்லியலும் எனும் துறையில் படிக்க அனுமதித்தார்கள். பொதுவாக அக்காலத்தில் பெண்களை இத்துறைக்கு அனுமதிப்பதில்லை. அதனால் நானே இத்துறையில் படிக்க அனுமதிக்கப்பட்ட முதற் பெண்மணியாவேன். அண்மையில் 5.2.2015 அன்று என் நூல்களை அன்பளிப்புச் செய்வதற்கு சென்னை தொல்லியல் பீடத்திற்குச் சென்றபொழுது பல மாணவிகள் வகுப்பறையில் வீற்றிருந்தமையைக் காணமுடிந்தது.

நான் எதிர்பார்க்காத துறையாயினும், இன்றுவரை தமிழர் வரலாறுகளை மட்டுமன்றி, உலக இனங்களின் வரலாறுகளையும் பின்னோக்கிப் பார்த்து, மனிதன் சாதித்த சாதனைகளை ஊடுருவிப் படித்து, பிறரும் அறிந்துகொள்ள வேண்டும் எனும் நோக்கில் எழுதவைத்த துறையென்று குறிப்பிடுவதில் மகிழ்ச்சியடைகின்றேன். வடமொழியோ முற்றாக மறந்து விட்டதொன்றாயினும், அந்த மொழியில் உருவாகிய இலக்கியங்கள் தந்த அனுபவங்களும் அளப்பரியன என்றே குறிப்பிட்டேயாக வேண்டும். நான் முப்பது வயதிற்கு மேற்பட்ட ஒரு பெண் மாணவி. மற்ற நான்கு ஆண் மாணவர்களும் இருபது வயதிற்கு மேற்பட்டவர்களாகவே இருந்தனர். இவர்களுள் திரு. குருமூர்த்தி (?) எனும் மாணவன் மட்டுமே என்னுடன் சகஜமாகப் பழகி, உதவிகள் புரிந்திருந்தார்.

மீண்டும் என் படிப்புகள் வழமைபோல் புத்தகங்களுடன் மட்டுமன்றி, கள ஆய்வுகளையும் உள்ளடக்கியிருந்தது. முதல் வருடம் பூர்வீக மக்கள் வாழ்ந்து கைவிட்டுச் சென்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றங்கரைகளையும், பூர்வீக வரலாற்றுடன் தொடர்புடைய இடங்களையும் பார்வையிட்டுக் (An exploration trip to ancient Archaelogical sites) கிடைக்கப்பெற்ற தகவல்களை அடிப்படையாக வைத்து அறிக்கை தயாரித்தல் படிப்பின் ஒரு பகுதியாகும். புதிய அனுபவங்களுடன் உருவாகிய அறிக்கை ஒரு சிறந்த வரலாற்றுப் பதிவாகப் பல்லாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னரும் உருவாகியிருந்தது. அடுத்த வருடப்படிப்பில் வரலாற்று முக்கியம் வாய்ந்த காஞ்சியில் நிலத்திற்குக் கீழ் புதையுண்டு கிடக்கும் வரலாற்றுத் தரவுகளுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இடம் ஒன்றில் நிலத்தைக் கிளறும் பணி ஆரம்பமாகிற்று. ஒவ்வொரு மண்தட்டுகளிலும் (different layers of the trench) பானைத்துண்டுகள், மணிகள் போன்ற தடயங்கள் கிடைக்கப் படலாயின. காஞ்சிபுரத்தின் வரலாற்றுப் பின்னணிகளைக் கொண்டு இப்பொருட்களின் காலங்கள் தீர்மானிக்கப்படலாயின. இச்சான்றுகளுடன் காஞ்சிபுரத்தின் பூர்வீக வரலாறுகளையும், மீன்பார்வை செய்து எழுதிய அறிக்கையானது, ஒரு நூல் வடிவில் *1975* ஆம் ஆண்டு தயாரிக்கப்படலாயிற்று. காஞ்சிபுரம் மத அடிப்படையில் சைவம், ஜைனம், பௌத்தம் ஆகிய மூன்று மதங்களையும் தன்னகத்திற் கொண்டிருந்த முக்கிய நகரமாகும். ஆனால் காலப்போக்கில் சைவநாயன்மார்களின் எழுச்சியுடன் பௌத்தம் அங்கு முற்றாக நீங்கியிருந்ததோடு, பௌத்தத் தூபிகளின் வழிபாடுகளும் சிதறுண்டு கிடந்ததனையும் அவதானிக்க முடிந்தது. ஆனால் ஜைனத்தினை மக்கள் அங்குத் தொடர்ந்தும் பேணி வருவது குறிப்பிடத்தக்க செய்தியாகும். என்னுடைய இறுதித் தேர்வில் வழமைபோல் நன்றாகவே எழுதியிருந்தேன்.

படிப்புடன் நின்றுவிடாமல் கிடைக்கப்பெற்ற சந்தர்ப் பத்தைப் பயன்படுத்தி இந்திய அரசின் கலாசார மையம் ICCR ஒழுங்குபடுத்திய ஜம்மு - காஷ்மீர் பயணக் குழுவுடன் பயணிப்பதற்கும் விண்ணப்பித்திருந்தேன். ஆனால் என் கள ஆய்வு அறிக்கை தயாரிப்பது காரணமாக, குழுவினருடன் சேர்ந்து செல்ல முடியவில்லை. அதனால் நான் தனியாகவே பயணித்து இக்குழுவினருடன் இணைய வேண்டியிருந்தது. சென்னையிலிருந்து, டெல்லிக்கு புகையிரதத்தில் இருநாட்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயணித்தேன். பின் டெல்லியிலிருந்து ஜம்மு - காஷ்மீருக்கு மிகவும் ஆபத்தான பாதை வழியாக பேருந்தில் பயணித்தேன். ஒரு பக்கம் மலை, மறுபக்கம் ஆற்றுப்பாதையாகியதனால், பயணத்தின் நடுவில் மலையிலிருந்து உருண்டுவரும் கற்பாறையைக் கண்டு பேருந்து சில மணிநேரம் நிறுத்திவைக்கப் பட்டது குறிப்பிடத்தக்கது. இளம் கன்று பயமறியாது எனும் எம் வாழ்வியல் அனுபவத்திற்கேற்ப இப்பயணம் மிகவும் ஆபத்தானதொன்று என்று அறியாமல் இடம்பெற்றிருந்தது. ஏதாவது உயிராபத்து இடம்பெற்றிருந்தால் செல்வி. சதாசிவம் தனபாக்கியத்திற்கு நடந்தது என்ன? என்று எவரும் அறிய முடியாத பயணமே இதுவாகும். ஆனால், இறைவன் எப்பொழுதுமே வழிநடத்திக் கொண்டிருந்தார் என்பதே என் அசைக்கமுடியாத நம்பிக்கையாகும். இன்னொரு முக்கியமான விடயம் எனக்கு ஹிந்தி மொழியும் தெரியாது. இருந்தாலும் காஷ்மீரையடைந்ததும் ஒரு சிறிய வண்டிக்காரரர் (எத்தகைய வண்டி என்று நினைவிலில்லை) உதவியுடன் குறிப்பிட்ட பயணக் குழுவினர் இருப்பிடத்தைக் கண்டுபிடித்தேன். இந்த வண்டி ஓட்டுநர் ஒரு உன்னதமான மாமனிதராக இருந்ததனாலே இது சாத்தியமாயிற்று. பொதுவாக வட இந்திய மாநிலங்களில் பெண்களின் பயணமானது உயிர் ஆபத்து மிக்கது என்ற கருத்து இன்று மட்டுமல்ல, அன்றும் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

குறிப்பிட்ட சுற்றுலாப் பயணக் குழுவினர் ஒரு குளத்தின் நடுவில் அமைக்கப்பட்ட மர வீடுகளில் தங்கியிருந்தனர். மனித வாழ்க்கைக்கு ஏற்றதாக அந்தப் பூமியின் அமைப்பு இருக்கவில்லை. குறிப்பாக எஸ்கிமோ மக்கள் பனிப்பாறைகளால் கட்டப்பெற்ற சிறுவீடுகளில் வாழ்ந்தது போலவே காஷ்மீர் மக்களும், பனிமலைகளால் சுற்றிவளைக்கப்பட்டிருந்தனர். ஆறுகளின் நீர் அதிகம் குளிரூட்டப்பட்டவையாகும். ஆனாலும் கடவுளின் படைப்பு ரகசியங்களின் அழகினைப் பனிமலைகளும் பேணி வைத்திருக்கின்றன. அத்தகைய அழகுமிக்கப் பனிமலைகள் உருகிக் கடற்பெருக்கை ஏற்படுத்தும்பொழுது கொடுமை மிக்கவையாகப் பரிணமிப்பதும், இவற்றின் மறுபக்கம் ஆகும். பனிப்படலங்கள் உருகியதனால் ஏற்பட்ட கடற்கோள்களினால் மனிதனின் பல நாடுகள் நீர்மூலமாக்கப்பட்டிருந்தன. அவற்றுள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமரிக் கண்டத்தில் இடம்பெற்ற கடற்கோள்களின்பொழுதே முறையே கி.மு. 9600, கிமு. 5200 ஆண்டுகளில் தென்பாண்டியரின் தென் மதுரையாட்சிகளின் 49 நாடுகளும் அழித்துக்கட்டப்பட்டன என்பதனை இத்தருணம் நான் தவிர்க்கமுடியாத நிலையில் பதிவு செய்துகொள்கிறேன். காஷ்மீரின் இயற்கையழகினையும், மற்றும் வட இந்திய மாநிலங்களின் கலாசாரங்களையும் கண்களாற் கண்டுகளித்து விட்டு, மீண்டும் தனியாகவே சென்னை திரும்பினேன். ஏனெனில் எனது கள ஆய்வு அறிக்கையை முழுமைப்படுத்திக் கையளித்துவிட்டு இலங்கை திரும்ப வேண்டிய காலக்கெடுவினை எதிர்கொண்டிருந்தேன். இவ்வாறு முதுகலைமாணிப் படிப்பு முடிவில் என்னை அழைத்துச் செல்லவும், தமிழகப் பண்பாடுகளைக் கண்டுகளிக்கவும் என் அக்கா திருமதி. சிவபாக்கியம் நடராசாவும், தம்பியார் சதாசிவம், தனநிருபசிங்கமும் சென்னைக்கு வந்திருந்தார்கள். முடிவில் நாங்கள் மூவரும் இராமேசுவரம் சென்று கடல்வழியாகத் தலைமன்னார் சென்றடைந்தோம்.

## தமிழக வாழ்வின் அனுபவங்கள்

நான் படித்துக்கொண்டிருந்த காலத்தில் நான் தமிழகத்தின் பல கோவில்களைத் தரிசித்து தெய்வீக அனுபவங்களைப் பெற்றிருந்தேன். இத்தெய்வீக அனுபவங்களே இன்றுவரை என்னை நேரிய பாதையில் நெறிபடுத்தியிருந்தன என்பதே நான் தமிழகத்திற் பெற்ற மேலான படிப்பாகும். அந்தக் காலத்தில் (1972 - 1976) ஒரு தமிழ்ப்பெண்ணுக்கு தமிழக வாழ்வானது மிக மிக பாதுகாப்பானது. தமிழகத்திலிருந்து பொறுக்கி எடுத்துவந்த மிகப் பெறுமதியான சொல் "அம்மா" என்பதாகும். சிறியவர் முதல் பெரியவர் வரை இந்த அன்பும், அரவணைக்கும் சொல்லால் அழைப்பதற்குக் கற்றுக் கொண்டதும் இன்னோர் படிப்பாகும். உண்மையில் தமிழகத்தில் பழகிவிட்ட தமிழ் கலாசார பண்புகளைக் கைவிட்டு இலங்கைக்குத் திரும்பியது ஒரு கசப்பான உணர்வாகவே நான் அனுபவித்திருந்தேன். தமிழகத்தின் இன்றைய நிலை வடநாட்டுக் கலாசார ஊடுருவல்களால் மாறுபட்டிருந்தாலும், நான் வாழ்ந்தனுபவித்த தமிழகத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றைக்கும் மறப்பதற்கில்லை. இறைவனின் திருவிளையாடல்கள் நிகழ்ந்த கோவிற் தரிசனங்களுக்காக 8.2.2015 வரை என் கால்கள் நடைபோட்டிருந்தன. சிறப்பாக 8.2.2015 அன்று நான் தனியாகப் பழநிமலை சென்று திரும்பியமையையும் இத்தருணம் குறிப்பிடல் அவசியமாம்.

## நாடு திரும்பிப் பணியேற்றல்

1976ஆம் ஆண்டு மீண்டும் கொழும்புப் பல்கலைக்கழக விரிவுரையாளராகப் பணியேற்றுக் கொண்டேன். பின் விடுமுறைக்கு என் சகோதரி வீட்டில் (கித்துல்கலை எனும் மலைநாட்டுப் பகுதி) தங்கியிருந்தபொழுது சென்னைப் பல்கலைக்கழகத்தில் என்னைப்போல் இரண்டாம் பட்டப் படிப்பை மேற்கொண்டிருந்த கொழும்புப் பல்கலைக்கழக விரிவுரையாளர் (இவர் ஒரு முஸ்லிம் மதத்தைச் சேர்ந்தவர். பெயர் நினைவிலில்லை.) என் தேர்வு முடிவினைத் தந்தி மூலம் அறிவித்திருந்தார். அதாவது எனது முதுகலைமாணி பட்டப் படிப்பு முதலாம் பிரிவுச் சித்தியுடன், தங்கப் பதக்கத்தினையும் பெற்றிருந்தது என்பது அத்தந்தியின் செய்தியாகும். வகுப்புத் தேர்வுகளில் முதலாம் பிள்ளையாக வரும் நிலையை, இந்த முடிவு மேலும் உறுதிப்படுத்தியிருந்தது. கல்வி ஒன்றே நான் ஏறிமுடிக்க வேண்டிய ஏணியாகும். இந்த வகையில் நான் ஏறி முடித்திருந்தேன். இந்த ஏணிப்படிகளை வெற்றிகரமாக ஏறி முடித்தமையினாலேயே 1988 முதல் 2015 வரை என்னால் தமிழ் மக்களுக்குப் பயன்தரக்கூடிய பதினான்கு நூல்களை எழுத முடிந்ததென்றால் மிகையாகாது.

இலங்கையில் ஆங்கிலேயர் தொல்லியல் ஆய்வுத்துறையினை உருவாக்கிவிட்டுச் சென்றாலும், பெயரளவில் கொழும்பில் ஒரு தொல்லியற்பிரிவு இயங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. பல்கலைக்கழகங்களில் இதுவொரு படிப்புத் துறையாகத் தனித்துவத்துடன் இயங்கவில்லை. 1970களின் நடுப்பகுதியில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இது வரலாற்றுத் துறையின் ஒரு பிரிவாக உருவாகியிருக்கலாம் எனக் கருதுகின்றேன். ஆனால் களனியாப் பல்கலைக்கழகத்தில் இது ஒரு தனித்துறையாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அப்பொழுது அங்குக் கல்வி கற்கும் தமிழ்ப்பிரிவு மாணவர்களுக்குப் பகுதிநேர விரிவுரையாளராக என்னை அழைத்திருந்தார்கள். மீண்டும் எனக்கு இதுவொரு புதிய படிப்பாகவே இருந்தது. ஏனெனில் தமிழகத்தின் தொல்லியல் மற்றும் பூர்வீக வரலாறுகள் பற்றிய அறிவு, இங்குப் பெரும் பங்களிப்பைச் செய்திருந்தாலும், இலங்கைத் தொல்லியலாய்வுகள் அனைத்தும், அவற்றின் பெறுபேறுகளையும் அறியவேண்டு மானால் மீண்டும் கொழும்பிலிருந்த தொல்லியற்பிரிவு நூல் நிலையம், மாநகரசபை நூல்நிலையம் என நாடித் தொல்லியல் ஆய்வுகள் பற்றிய அறிக்கைகளை அறிதல் மிக அவசியமாகும். அதனுடன் மாணவர்களையும் கள ஆய்வுகளுக்கு அழைத்துச் செல்லல் நேரடியனுபவங்களை அவர்களும் பெற்றுக்கொள்ள வாய்ப்பளிப்பதாகும். அதனோடு எனக்குமே எல்லாமே புதிய தரவுகளாயினும், வரலாற்றுப் பதிவுகளற்ற மனிதன் விட்டுச் சென்ற இவையனைத்தும் அவனது காலத்திற்கு எம்மையும் கூட்டிச் சென்றிருந்தன. மனிதனின் கடந்தகாலத்துடன் தொடர்பான வரலாறுகளை உயிர்ப்பூட்டும் வகையிலேயே தொல்லியலாய்வுகள் வளர்ந்திருந்தன. எனினும் இக்காலத்தில் எனக்கு இருபக்க கல்விப் புலமை என்பது தவிர்க்க முடியாதிருந்தது. முதலாவதாக, கொழும்புப் பல்கலைக்கழக மாணவர்களுக்கு இந்துக்கலாசார நெறிகளை அறிந்துகொள்ள வழிப்படுத்துதல், இரண்டாவதாக தொல்லியல்துறை மாணவர்களைப் பல்லாயிரம் ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்த மனிதனின் மண்ணிற்கடியில் பதிவாகிய வரலாறுகளைத் தேடிக் காலவரிசைப்படுத்த வழிப்படுத்தல் என இரு சாராருடன், தொழிற்படவேண்டியிருந்தது. ஆனால் மாணவர்கள் அனைவரும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களாகவும், கலாசார உத்தியோகத்தர்களாகவும், உயர் பதவிகளைப் பெற்றிருந்தனர் என்பதற்கு யார் காரணம்? அவர்களின் ஈடுபாடும், முயற்சிகளுமே இப்புதிய துறைகளில் ஏற்பட்டிருந்தன என்றே கருத முடிகின்றது.

### தனிப்பட்ட வாழ்வின் நிகழ்ச்சிநிரல்கள் பற்றி

*1953* ஆம் ஆண்டு முதல் *1976* வரை ஏறக்குறைய *23* (இருபத்து மூன்று) வருடங்கள் பாடசாலை விடுதி, மற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழக விடுதிகளிலே என் வாழ்வின் இளமைப்பகுதி கழிக்கப்பட்டிருந்தது. விரிவுரையாளராகப் பணியேற்றபின் இவ்வசதிகள் சாத்தியமற்றனவாம். எனவே நான் படித்த காலத்தில் என் சம்பளத்தின் மிகுதி (இந்திய உதவிப்பணத்தைக் கழித்தபின் எஞ்சியது) என் சேமிப்பாகத் தேங்கியிருந்தது. இருப்பினும் தேவையைக் கடவுளே நிறைவேற்றிவைக்கும் வகையில் நான் தங்கியிருந்த சிங்களக் குடும்பத்தின் வீட்டிலிருந்து குறைந்தது ஐந்து வீடுகள் தள்ளி ஒரு வீடு விற்பனைக்குப் போடப் பட்டிருந்தது. நானும் இச்சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்தி அவ்வீட்டுக்காரரை அணுகினேன். அச்சிறிய வீடு ஏற்கனவே வங்கியில் ஈடுவைக்கப்பட்டிருந்து. அதனால் அக்கடன் எனக்கு மாற்றப்பட்ட பின் மிகுதிப்பணத்தைச் செலுத்தி அவ்வீட்டினை வாங்கிக்கொண்டமை என் விடுதி வாழ்க்கைகளுக்கு ஒரு நிரந்தரமான தீர்வைத் தந்திருந்தது. பாமன் கடை, கல்யாணி வீதி, 9/22 என்பது அந்த வீட்டு முகவரியாகும். பின் அந்த வீட்டிற்கு மலசலகூட இணைப்பு, நீரிணைப்பு, மதில்கள், அறைகள் போடல் என எல்லாவற்றையுமே ஒரு தனிப்பெண்ணாகவே செய்து முடித்திருந்தேன். இவையனைத்தும் எனக்கு எவ்வாறு கைகூடிற்று என்று கூறுவதற்கில்லை. எல்லாம் என் சக்திக்கு அப்பாற்பட்டவகையிலேயே நிறைவேறியிருந்தன. எனினும், அந்த இளைய வயதில் சிங்கள சமூகத்தின் மத்தியில் நானே நேரடியாகக் கூரைத்தகடுகள் (asbestos sheets), சீமெந்து, செங்கல், மண் முதலானவற்றைக் கோரிப் பெற்றிருந்தேன்.

தமிழ் சமூகம் குடியமர்ந்ததனால் கொழும்பின் பல பாகங்களும் அவர்களால் நகரங்களாக உயர்ந்தன. அதனால் சிங்கள மக்களுக்கும் வேலைவாய்ப்புகள், சமூக வளர்ச்சிகள் என்பன உருவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கதாம். ஆங்கிலேயரின் ஒற்றையாட்சியின் கீழ் கொழும்பு நகரத்திற்குத் தமிழர் புலம் பெயர்வுகள் கட்டாயமாகியிருந்தன. அதனோடு அக்காலகட்டத்தில் ஆங்கிலக் கல்வியும், ஆங்கிலக் கலாசாரமும் இனத்துவேசங்களை அகற்றியிருந்தன. இந்தப் பின்னணி நீடிக்கவில்லை. இரண்டாம் உலகப் போரின் பாதிப்புக் காரணமாக ஆங்கிலேயர் குடியேற்ற நாடுகளை விட்டு நீங்க வேண்டிய சூழ்நிலையில், உள்நாட்டுப் போராட்டங்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுத்தங்களும் அதிகரிக்க 1948-இல் இலங்கைக்கு சுதந்திரத்தை வழங்கிவிட்டு வெளியேறியிருந்தனர்.

இதன் பின்னரே, 'முரடன் கையில் கத்தி' எனும் வகையில் சிங்கள அரசுகள் சிங்களக் குடியேற்றங்களைத் தமிழர் பகுதியில் அமைத்தல், சிங்களமொழிச் சட்டம், கொழும்பு முதலான பகுதிகளில் குடியமர்ந்த தமிழர்வாழ் மனைகளையும், வர்த்தக நிலையங்களையும், காடையர்கள் மூலம் கொள்ளையடித்ததோடு, ஆயுதமற்ற தமிழ் மக்களையும் கொன்று குவித்தார்கள் என்பதே சிங்களவரின் மனிதநேயமற்ற வரலாறுகள் எமக்கு அறிவுறுத்தியுள்ளன. ஆனால், இயல்பாகவே சிங்கள மக்கள் அனைவரையும் அரசியல்வாதிகளின் கூடைக்குள் போட முடியாது என்பதே என் அனுபவமாகும்.

நான் இந்த வீட்டில் வாழுகையில் கொழும்பில் அரசாங்க உணவுக் காரியாலயத்தில் வேலையாற்றிய என் தம்பியும் (Officer in charge), என் அக்காவின் இளைய மகன் ந. ஸ்ரீதரனும் (9 வயதாகலாம்) என்னுடன் வாழ்ந்திருந்தமை குறிப்பிடத்தக்க தாகும். என் தம்பி தாயற்ற சூழ்நிலையில் வாழ்ந்த ஒருவர். அதனால் இவரது மேற்கல்வியை ஹாட்லிக் கல்லூரியில் தொடரவும் நான் உதவியிருந்தாலும்கூட, உறவுகள் உணர்வுகளைக் கொண்டதாக அமைய முடியவில்லை. இது குழந்தைப் பருவம் முதல் இளைஞனாக வாழும்வரை அவருக்குக் கிடைக்காத தாய்ப்பாசத்தின் வெற்றிடமே முக்கிய காரண மாகலாம். இவர் நாட்டுப் பிரச்சனையினால் குடும்பத்துடன் கனடாவிற்குப் புலம்பெயர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கின்றார். அங்கு வங்கியொன்றில் இரவு நேரத்தில் பணியாற்றுவதனால் அவரது பகல் நேரம் நித்திரையில் கழிந்துவிடும் நிலையில், குடும்ப, சமூக உறவுகள் மீண்டும் பாதிக்கப்படும் நிலையே இயல்பாகிவிட்டது.

இருப்பினும் அண்மையில் அக்கா வீட்டிற்கு (கிளிநொச்சி) அவர் வந்திருக்கையிலே நானும் அங்கு சென்று ஒரு படம் (27.1.2015) எடுத்து வந்திருந்தேன். வாழ்வின் இறுதிகட்டத்திலும் உறவுகள் நினைவுகூரப்படவேண்டியவை என்பதே என்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்பாடாகும். மீண்டும் கொழும்பில் வாழ்ந்த காலமே நாங்கள் அக்கா, தம்பி என்ற உறவினைப் பேணியிருந்த காலம். அந்த உறவு மீண்டும் கிடைப்பதற்கில்லை என்பதே எம் வாழ்வின் அடிப்படை களுமாகும். இனி, கொழும்பு வீட்டில் என்னுடன் வாழ்ந்த இன்னொருவர் அக்காவின் இளையமகன் ஸ்ரீதரன் ஆவார். ஒன்பது வயது உடையவர் ஆகையினால் மிகவும் சாந்த சுபாவமுடைய அவர் படிப்பு, வாழ்வுமுறைகளைக் கண்காணிக்கும் பொறுப்பினையும் ஏற்றிருந்தேன்.

## 1977ஆம் ஆண்டில் சிங்கள அரசின் சனாதிபதியான ஜே.ஆர். ஜெயவர்த்தனா தமிழர்களை அழிக்க காடையர்களை ஊக்கப்படுத்தியிருந்தார்

என் தம்பி அருகிலிருந்த வீதியொன்றினூடாக வீடு திரும்பிக் கொண்டிருக்கையில், மழை காரணமாக ஒரு கடையில் நிற்க வேண்டியிருந்தது. அப்பொழுது ஜே.ஆர். ஜெயவர்த்தனா சிங்களக் காடையர்களைத் தூண்டும் வகையில் வானொலியில் பேசியதைக் கேட்டபின் கவலையுடன் வந்து இச்செய்தியை என்னிடம் தெரிவித்தார். காடையர்கள் வந்து அள்ளிக்கொண்டு போகும் வண்ணம் எம்மிடமிருந்த பெறுமதியற்ற பொருட்களை வீட்டின் அறைகளில் பரவிவிட்டிருந்தோம். எதிர்பார்த்த வண்ணம் நாம் பாதுகாப்பாகவே இருந்தோம். நான் சமையல் கட்டுக் கதவினைப் பூட்டிவிட்டு, அடுத்திருந்த குளியலறைக் கதவையும் பூட்டிக்கொண்டு குளித்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது பின் மதவிலேறிக் குதித்துவந்த ஒருவன் குசினிக்கதவை உடைத்துக் கொண்டிருந்தான். நான் கதவினூடாகப் பார்த்ததும் சட்டையையணிந்து கொண்டு வெளியேவர ஆயத்தமானேன். என் தம்பியும், அக்காவின் மகனும் வீட்டிற்குள் நின்றுகொண்டே "ஐயோ கள்ளன் ஐயோ கள்ளன்" என்று சத்தமிட்டவாறு இருந்தனர். அதற்கிடையில் காடையன் வானொலியை எடுத்துக்கொண்டு மதில் ஏறிச் சென்றுவிட்டான். நான் வெளியேவந்து பார்க்கையில் பக்கத்து வீட்டு வேலியோரமாக பல சிங்களமக்கள் நின்றுகொண்டு ஆதரவாகப் பேசினார்கள். காடையன் வெளியேறியது பற்றித் தெரியாத நிலையில், நான் வீட்டிற்குள் சென்று பார்த்தபொழுது வீட்டினுள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயபீதியில் அழுதுகொண்டிருந்தவர்கள் அழுகையை நிறுத்தி விட்டிருந்தனர்.

தொடர்ந்து அங்கிருப்பது பயங்கரமானது என்பதனால் நாங்களனைவரும் வீட்டைப் பூட்டிவிட்டு வெளியேறி யிருந்தோம். அப்பொழுது எம் வளர்ப்பு நாயான ஜிம்மி (சிறிய நாய்) நாம் திரும்பும் வரையில் வாசற்படியிற் படுத்து காவல் புரிந்திருந்தது. இதனை அவதானித்தவர்களே எம்மிடம் தெரிவித்தார்கள். விலங்குகள் எப்பொழுதுமே நன்றியுடை யனவாம். பகுத்தறிவு கொண்ட மனிதர்கள் மிருகங்களிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டியவை அறத்தின் பாற்பட்டவையேயாம். இந்த இனக்கலவரத்தின்பொழுது, நான் வெளியேறியிருந் தமையால் பிற தமிழருக்கேற்பட்ட துயரங்களை நான் கண்களாற் காணவில்லை. அதுபற்றி எதுவும் குறிப்பிடுவதற்கில்லை. எனினும் 1983ஆம் ஆண்டில் ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் மிருகத்தனத்தை அனுபவித்ததோடு, பல தமிழர்களின் உயிர்களைப் பலிக்கடாக்கள் ஆகியிருந்தமை ஒட்டுமொத்த மனித இனத்தினையே பகுத்தறிவற்றதொன்றாக்கி விட்டிருந்தது. அதுபற்றி பின்னர் விவரிக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2

# இல்லற வாழ்வில் காலடி வைத்தல்

படிப்பு, தொழில், வீடு எனப் பல்துறையனுபவங்களும் என் முப்பத்தேழு வயதிற்குட்பட்டவையாம். அதுவரை இல்லற நாட்டம் உருவாகவில்லை. ஆனாலும் என் தாயாரின் கடைசித் தம்பியான ஏ. சோமசுந்தரம் பல திருமணப் பேச்சுக்களைக் கொண்டுவந்து, தங்கள் கடமைகளில் கருத்துடையவராக இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இவரது மனைவியான ராசாத்திமாமியும் மிகப்பரந்த உள்ளமுடையவராக இருந்தார். இவர்கள் வசிப்பிடம் என் நெல்லியடி மகாவித்தியாலய விடுதிக்கு அணித்தாக இருந்தமையால் விடுமுறை நாட்களில் இவர்களுடன் தங்கியிருக்கின்றேன். பிள்ளைகுட்டியில்லாத இவர்களுக்கு இரு குடும்பத்தினரின் பிள்ளைகள் அனைவருமே அவர்களது பிள்ளைகள்தான். இந்த மனிதநேய அடிப்படையிலேயே எனக்கும் திருமணப்பேச்சுக்கள் பல இடம்பெற்றிருந்தன. ஆனால், தலைவிதி இவையனைத்தினையும் நிராகரித்துவிட்டிருந்தது.

நான் முப்பத்தெட்டாவது வயதினை எட்டியபொழுது எனக்கும் தொழில், வீட்டு நிர்வாகம், சிங்களவர் மத்தியில் பாதுகாப்பின்மையென மனம் தளரும் நிலையேற்பட்டிருந்தது. இந்நிலைகளுக்கு முடிவுகட்டத் திருமணம் ஒன்றே தீர்வாகலாம் என்ற கருத்து மேலோங்கலாயிற்று. விதியும் தன் விளையாட்டைத் தொடங்கியது. என் பாடசாலை நண்பியான கமலாதேவி ஒரு மருத்துவப் பராமரிப்பாளர். இவரது வாழ்க்கை அனுபவங்கள் வேறு. தாய் மனநோயாளி. தந்தையார் எம் ஊருக்கு தபால் விநியோகம் செய்பவர். அதனாலே சில காலம் இவர் விடுதியில் தங்க நேரிட்டது. இவ்வாறு எனக்கு அறிமுகமாகியபின் இருவர் வாழ்வின் துயரங்களையும் பகிர்ந்திருந்தோம். இவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்பொழுதும் உதவிபுரியும் மனப்பான்மை கொண்டவர். குடும்பச் சூழ்நிலைகளினால் மேற்படிப்பைக் கைவிட்டு, மருத்துவத் தாதியாகியபின் திருமணமும் செய்துகொண்டார். இடைசுகம் எங்களுக்குத் தொடர்புகள் இருந்தது. ஆனால், இவர் என் கணவரின் தாயை மருத்துவ நிலையத்தில் சந்தித்து அவருக்கொரு மகன் லண்டனில் படித்துக் கொண்டிருக்கிறார் என்பதனை அறிந்திருந்தபொழுது, நான் எங்கே? என்ன செய்கிறேன்? என்று எதுவும் அவருக்குத் தெரிந்திருக்கவில்லை. இக்காலத்தில் (1978) நான் களனியாப் பல்கலைக்கழகத்திற்குச் சென்று பகுதிநேர விரிவுரையாளராகக் கடமையாற்றியிருந்தேன். அங்கு பேராசிரியர் ஆரிய அபயசிங்க, பேராசிரியர் செனக பண்டாரநாயக்க ஆகியோர் தலைமையில் என் விரிவுரைப் பணிகள் இருந்தாலும்கூட, தமிழ்த் துறை, புவியியற்துறை விரிவுரையாளர்கள் பலர் எனக்கு அறிமுகமாகியிருந்தனர். அதனால் கூடுதலான நேரங்களில் தமிழ்த்துறைப் பீடத்தில் என் பொழுதைக் கழிப்பது வழமை. அப்படியிருக்கையில் எனக்கு ஒரு கடிதம் வந்திருப்பதாகக் கூறி கையளித்தனர். அதனைத் திறந்து பார்த்தபொழுது நண்பி கமலாதேவி விசாரித்து எழுதிய ஒரு திருமணப் பேச்சாக மட்டுமே காணப்பட்டது. எனக்கும் தனிமையான வாழ்வு களைத்து ஒரு குறிக்கோளற்றுக் கிடக்கையில் அக்கடிதத்தினை வரப்பிரசாதமாக ஏற்று அக்கா கணவருக்கு (இவர் எம் மூத்த மாமா மகன்) அறிவித்து பெண் பார்த்தல் முடிந்ததும், தொலைபேசி மூலம் லண்டனிலிருந்து பாமன் கடை வீட்டிற்கு அழைப்புகள் வரத்தொடங்கின. என்னிடம் தொலைபேசித் தொடர்புகள் இல்லாமையால் பக்கத்து வீட்டிற்கு ஓட்டப்பந்தயப் பயிற்சிகளும் இடம்பெற்றிருந்தன.

பக்கத்து வீட்டார் ஒரு தமிழ்க்குடும்பம். அவர்களது மகள் எட்டு வயதாகலாம், அவள்தான் அன்றைய நாட்களில் என் வீட்டிற்கு வந்து சமையல் கற்றுத் தரும் ஆசிரியையாகவும், அன்புகாட்டும் சிறுமியாகவும் என்னுடன் இணைந்திருந்தாள். நான் பிட்டிற்கு மாவை அடுப்பில் வறுத்துக் கொண்டிருந்தால், "அன்ரி மா பொன்னிறமாகும்வரையும் வறுங்கோ" என்பாள். பிட்டு அவித்து இருவரும் சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் அவரது தாயார் "மது" என்று அழைத்ததும், எழுந்து ஓடிவிடுவாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவள் பற்றி இன்றும் நினைத்தால் என் கண்கள் வேதனையுடன் கண்ணீரை மல்கவைக்கும். ஏனெனில் இவள் பெற்றோர் ஆபிரிக்க நாடொன்றிற்கு ஆசிரியர்களாகச் சென்றிருந்த சமயம், புகையிரதப் பாதையைப் பிள்ளைகளுடன் கடக்கையில் ஏற்பட்ட கார் விபத்தில், மது தூக்கி வீசப்பட்டு இறந்து போனாள். ஆனால் அவள் வயதுபோன என்னுடன் வந்து மகிழ்வாகப் பொழுதைக் கழித்த நாட்கள் அத்தனையும் நினைவிலிருந்து அழிக்க முடியாதவையேயாம். ஆழ்ந்த பெருமூச்சுத்தான் வெளியேறும்.

எம் திருமண வேலைகளை அத்தான் முழுமையாகப் பொறுப்பேற்று நடத்தினார். பாமன் கடை வீட்டின் முற்றத்தில் நடந்த திருமணமாயினும், ஐயர், திருமணப் பந்தல், உணவு தயாரிப்பு ஆகிய அனைத்தினையும், தன் பாடசாலைத் தொழிலை ஒதுக்கிவைத்துவிட்டுச் செய்திருந்தார். அதனோடு ஊரிலிருந்து கொழும்பு பயணித்து வரக்கூடிய உறவினர்கள் அனைவரும் வந்து கலந்து சிறப்பித்திருந்தனர். காலம் கடந்த திருமணமாயினும் 3.3.1979ஆம் ஆண்டு சிறப்பாக நிறைவேறியிருந்தது. என் கணவர் க. குணபாலசிங்கம் லண்டனில் கணக்காளர் படிப்பினை மேற்கொண்டிருந்தபடியினால் அவர் இரு கிழமைகளில் லண்டனுக்குத் திரும்பியிருந்தார். நானும் முன்வைத்த காலைப் பின்வைக்காமலே கோடை விடுமுறை நாட்களுக்கு விண்ணப்பித்துக்கொண்டு, கணவர் எடுத்தனுப்பிய கடவுச் சீட்டுடன் 1979ஆம் ஆண்டின் பிற்பகுதியில் லண்டனுக்குச் சென்றிருந்தேன்.

இந்தப் பல்கலைக்கழக படிப்பு விடுமுறை அனுமதி நான்கு மாதங்களுக்கே கொழும்பு சர்வகலாசாலை நிர்வாகத்தால் அனுமதிக்கப்பட்டிருந்தது. நான்கு மாத முடிவில் நான் இலங்கைக்குத் திரும்பிச் செல்வதனைக் கணவர் விரும்பாமையால், என் படிப்பு விடுமுறை நாட்களை நீடிக்குமாறு, சர்வகாலசாலை நிர்வாகத்திடம் விண்ணப் பித்திருந்தேன். அவர்களும் ஒரு வருட காலத்திற்கு நீடித்திருந்தார்கள். அதன்பின்னர் என் பதவி நீக்கத்தை அறிவித்தார்கள். அதுவரை காலமும் என் கல்விக்காக அயராது உழைத்துப் பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளராகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியாற்றிவந்த பணிக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டியிருந்தது. திருமணம் செய்த பெண்ணிற்கு முதன்மையான அணிகலனாகத் தாய்மை திகழ்வதனால், நான் பதவியினைக் காட்டிலும், தாய்மை எனும் பதவிக்கே அதிக முன்னுரிமை கொடுத்தேன். அதில் வெற்றியும் கண்டேன். என் மகள் சிவச்செல்வியை 4.6.1981 அன்று இறைவன் திருவருளால் பெற்றெடுத்தேன். இது குடும்பப் பட்டப் படிப்பிற்குக் கிடைத்த பரிசாகும். அன்றைய காலகட்டத்தில் லண்டனில் வாழ்க்கையென்பது புதிய அனுபவங்களைக் கொண்டதாகும். ஒரு அறையுடன் பொதுச் சமையலறை, பொது மலசலக்கூடம் என்பன பலவித இடர்களைக் கொண்டிருந்தது. விடுதிகளில் பலருடன் வாழ்ந்து, சாப்பாட்டு அறைகளில் பரிமாறப்பட்டிருக்கும் உணவினைச் சேர்ந்து உண்டு படுக்கை மண்டபங்களில் வரிசையாகப் படுத்துறங்கி எழுந்து, பாடசாலைக்கு இணைந்து செல்லல் போன்ற பழக்கவழக்கங்களை மேற்கொண்டிருந்தாலும், அது ஒரு பயிற்சிக் கலாசாலையாக அமைந்திருந்ததனால், அந்த வாழ்க்கை எம் போன்றோருக்கு மிக உகந்ததாகும். ஆனால் மாபெரும் நகரமான லண்டன் வீடுகள் பொதுவுடமை அடிப்படையில் அமைந்த வரிசை வீடுகளாகவே அமைந்திருந்தன. அதனால் ஒரு வீட்டிற்குள் பலர் வாடகைக்குக் குடியிருப்பின் நாளாந்த வாழ்வு முறையில் சிக்கல்கள் பலவற்றை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அதனோடு தொடர்ந்து தங்குவதற்கான அனுமதிகளைப் பெறுதலிலும் சில தடைகளை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அதனால் சிவச்செல்வி மூன்று மாதக் குழந்தையாகியதும், நான் பாமன் கடைக்கு அவளை எடுத்துச் சென்றேன். கணவரோ தன் படிப்பைத் தொடர்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3

# குழந்தை வளர்ப்புப் பணியில்

குழந்தை வளர்ப்பிலுள்ள சிரமங்களை, முதற் குழந்தையினை வளர்க்கையில் எல்லாத் தாய்மாரும் அனுபவித்திருப்பர். மனிதன் ஆறு அறிவு படைத்தவன் என்று கூறிக்கொண்டாலும், தாயின் கருவிலிருந்து வெளியே வந்ததும் குழந்தை எதனையும் தானாகச் செய்யாது. தாயைப் பார்த்து சிரிக்கவோ அல்லது தாயின் பாலைத் தானாக அருந்தவோ அதற்குத் தொடர்ந்தும் பயிற்சி அளிக்க வேண்டும். தூக்கி நிமிர்த்தி தோளில் போட்டு நிமிரப் பழக்கல், நிலத்தில் தவழப் பழக்குதல், நடையைப் பழக்கி எடுத்தல் எனப் பல பயிற்சிகளைத் தொடர்ந்தும் வழங்கிய பின்னர், குறைந்தது ஒரு வருடமாவது சென்ற பின்னரே, குழந்தை தானாகச் சிலவற்றைச் செய்து தாயின் உறவுகளுடன் தன்னை இணைத்து மகிழும். ஆனால் பகுத்தறிவற்ற விலங்குகளோ தாயின் கருவிலிருந்து வெளியேறியதும் எழும்பி நிற்க முயல்கின்றன அல்லது தாமாகவே தாயிடம் பாலை அருந்த முயன்று தம் தேவையைப் பூர்த்தி செய்கின்றன. அதனோடு ஒரு மாதத்திற்குள் தாயோடு சேர்ந்து பயணிக்கவும், விளையாடவும் செய்கின்றன. மொழியற்ற நிலையிலும் குரல் ஒலிகளை எழுப்பியும் அச்ச உணர்வுகளைக் காட்டியும் தம்மைப் பாதுகாத்துக் கொள்கின்றன. மனிதனின் நிலைமைகள் அப்படியல்ல. மாறாக நீண்டகாலப் பயிற்சிகள் அவனுக்கவசியமாகின்றன. படைப்பாளியின் அற்புதத் திட்டங்களில் இதுவுமொன்றாகும். இந்தத் திட்டத்தினை நிறைவேற்றும் வகையில் ஒவ்வொரு தாயும் பணியாற்றக் கடமைப்பட்டிருக்கிறாள். இவ்வகையில் எனக்கும் இதுவொரு புதிய துறை. ஆனால் இதனையும் முழுநேர வேலையாகவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றிருந்தேன். கொழும்பிலிருந்த தமிழ்த்துறைப் பிரிவுகள் அனைத்தும் யாழ் பல்கலைக்கழகத்திற்கும், ஒருசில பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கும் மாற்றப்பட்ட நிலையில், நானும் பல்கலைக்கழகங்களில் மீண்டும் இணையும் நோக்கம் எதனையும் கொண்டிருக்கவில்லை. என் மகள் சிவச்செல்விக்கு ஒரு வயதாகிவிட்ட காலத்தில், கணவரும் தன் படிப்பினை இடை நிறுத்திக்கொண்டு, எம்முடன் இணைந்து, ஒரு யப்பான் நிறுவனத்தில் தொழில்புரிந்து கொண்டிருந்தார். மீண்டும் ஜே.ஆர். ஜெயவர்த்தனா கொழும்பில் வாழ்ந்து சிங்கள அரசின் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்பியிருந்த தமிழர்களை முற்றாக அழிக்கும் திட்டத்தில் ஆடி மாதம் 1983ஆம் ஆண்டளவில் ஒரு இனக்கலவரத்தைத் தூண்டியிருந்தார். இதற்குரிய காரணமாக, யாழ் நகர மக்களின் இயல்பு வாழ்க்கையை அச்சுறுத்தும் வகையில் இயங்கிய இராணுவத்தினருக்கெதிரான நடவடிக்கையில் விடுதலைப் புலிகள் நடந்துகொண்டமை கூறப்பட்டது.

1948ஆம் ஆண்டு முதல் ஆங்கிலேயர் தமிழரின் அரசாட்சிப் பிரிவுகளைச் சிங்கள அரசுகளிடம் தாரைவார்த்துவிட்டுச் சென்ற நிலையில், சிங்கள அரசியல் தலைமைகள் அனைவரும் எஞ்சிய தமிழர் பாரம்பரிய நிலங்களில் சிங்களக் குடியேற்றங்கள், சிங்களம் மட்டும் ஆட்சிமொழி, தமிழ் மாணவர்களைத் தராதரப்படுத்துதல், தமிழ்மொழி மகாநாட்டுக் கொண்டாட்டத் திற்குக் குழுமியிருந்த மக்களைத் தாக்குதல், ஆயிரக்கணக்கான வர்த்தக நிலையங்களைத் தீக்கிரையாக்குதல் போன்ற நடவடிக்கைகளுக்கெதிராகத் தமிழர்கள் சாவா? வாழ்வா? என்ற நிலைக்குத் தள்ளப்பட்டனர். மக்கள் ஆட்சியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல சாத்வீகப் போராட்டங்களை தமிழ் அரசியல்வாதிகள் மேற்கொண்டபொழுதும் அதனையும் ஆயுதபலத்தால் அடக்குவதற்கே இராணுவம் பயன்படுத்தப் பட்டது. இந்நிலையில் மனிதநேயத்தால் வெல்ல முடியாத சிங்கள அரசுகளுக்கெதிராகவே, தமிழ் இளைஞர்கள் தம் மக்களுக்காகவே ஆயுதமேந்தி உயிரை மாய்த்து வந்தமை சத்தியத்தின் பாற்பட்ட தமிழர் வரலாறாகும். இவ்வாறான கொடுமையான கொலைக்களமொன்றினை நானும் காண நேரிட்டது. கணவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலை வேலைக்குச் செல்கையில் வாயிற் தாழ்ப்பாளைப் பூட்டி விட்டு வீட்டினுள் இருக்குமாறு கூறிவிட்டு வெளியேறியிருந்தார்.

நானும் என்ன நடக்கப்போகின்றதோ? என்று யோசித்துக் கொண்டிருக்கையில் காலை 10 மணியளவில் வெடிகளும், புகைமூட்டங்களும் எம் வீட்டிற்கு எதிர் வளவின் வீதியிலிருந்து வரத் தொடங்கின. அந்த வீதியில் நீண்டகாலமாகத் தமிழ்க் குடும்பங்கள் வாழ்ந்துவந்தனர். அவர்கள் வீடுகளின் முன் நிறுத்தப்பட்டிருந்த சாமான்களைக் கொண்டிருந்த பேருந்தும் எரிக்கப்பட்டு, சிங்கள மக்கள் எடுத்துச் செல்வதனை நாற்காலியில் ஏறி மேற்துவாரத்தினூடாகப் பார்த்தேன். சிறிது நேரத்தில் எம் வீட்டு வாயில் தாழ்ப்பாள் பூட்டப்பட்டிருந்ததனால், ஒருவன் இது தமிழர் வீடா? என்று அறிந்து கொள்ள உற்று நோட்டமிடுவதனையும் கண்டுகொண்டேன். அதனால் அச்சமுற்றுப் பக்கத்து வீட்டில் வாடகைக்கு இருப்போரை அழைத்தேன். பதிலில்லை. காரணம், அவர்கள் பயபீதியால் தங்கள் பின் வீட்டிற்கு மதிலால் ஏறிக்குதித்துச் சென்று தஞ்சமடைந்திருந்தார்கள். அப்பொழுது சாவின் விளிம்பிற்குச் சென்றுவிட்டதாக ஒரு பிரமை. எனவே, காடையர் கூட்டத்திடம் எம் உடைமைகளை விடக்கூடாது என்பதனால், என் இரு உடுப்புப் பெட்டிகளையும் வளவிற்குள் இருந்த கிணற்றுக்குள் வீசி விட்டிருந்தேன். பின் எம் மதில்கள் உயரமாகக் கட்டியிருந்ததனால் ஏணியை வைத்து மகளை ஏற்றிப் பின் நானும் ஏறி எங்கள் வீட்டிற்குப் பின்னால் இருந்த சிங்கள வீட்டிற்குள் அடைக்கலம் புகுந்தோம். அன்றிரவு நுளம்புக்கடி மத்தியில் தூக்கம் வரமறுத்துவிட்டது. அதனால் விடிந்ததும் மீண்டும் ஏணி ஏறி வீட்டிற்குள் வந்திருந்தோம். அப்பொழுது அன்றிரவு வேலைத் தலத்தில் தங்கிவிட்டு, ஊர்க்காவலர் உதவியுடன் வந்திருந்த கணவர் பக்கத்து வீட்டு மதிலோரமாக நின்று அழைத்தார். அப்பொழுது நான் வாயிலுக்குச் சென்று தாழ்ப்பாளைத் (Gate) திறந்து கணவரை உள்ளே வரச்செய்தேன். பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் கோவில்களில் தஞ்சமடைந் திருந்தார்கள். என் தம்பி குடும்பம் ஒரு சிங்களக் குடும்பத்தினரின் வீட்டில் தங்கியிருந்தனர். அதனை அறிந்த காடையர் இவர்கள் இருந்த பகுதியை எரித்துவிட்டார்கள். அதனால் மாற்றி உடுக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்கு உடுப்பில்லாமையால், என்னிடம் வந்து எடுத்துப் போயிருந்தார்கள். தமிழர் கட்டி எழுப்பிய வெள்ளவத்தை நகர் முற்றாகக் கொள்ளையடிக்கப்பட்டு வெறுமையாகிக் கிடந்தது. புறக்கோட்டையிலிருந்த வர்த்தக நிலையங்களும் கொள்ளை யடிக்கப்பட்டிருந்தன.

இத்தகைய தமிழினப் படுகொலை தன்னிச்சையாக இடம்பெறுகையில் இந்தியா தன் கப்பல்களைக் கொழும்புத் துறைக்கு அனுப்பி, தமிழ் மக்களைத் தம் தாய் மண்ணுக்குப் புலம்பெயர வைத்தது. அதனால் கொழும்பை தமிழரின் கொலைக்களமாக அச்சத்துடன் அடையாளப்படுத்திக் கொண்டு கடைசிக்கப்பலில் ஏறி யாழ்ப்பாணம் சென்று உறவினருடன் சில மாதங்கள் வாழ்ந்தபின், மட்டக்களப்பின் சிறுநகரான ஏறாவூரில் நிரந்தரமாக வாழ முற்பட்டோம். கொழும்பு வீட்டினை அரைக்கூலிக்கு விற்றுவிட்டுத் தப்பினோம், பிழைத்தோம் என்னும் மனச்சாந்தியுடன் கொலைக்களத்தின் இரத்தங்களையும், ஈனக்குரல்களையும் காணவோ, கேட்கவோ முடியாத வகையில் ஏறாவூர்க் கிராமத்தில் நான்கு கடைகளையும், ஒரு வீட்டினையும் தொடுத்துக்கட்டி 'குணம் நிறுவனத்தின் பல்பொருள் அங்காடி' (Gunam & Co., Supper Store) எனப் பெயரிட்டு வர்த்தகர்கள் ஆனோம். ஆரம்பத்தில் அங்குள்ள முஸ்லிம் சமூகத்துடன் நாம் வாழ்ந்து, பலருடைய நட்பினைப் பெற்றிருந்தோம். ஏற்கனவே மறிச்சுக்கட்டியில் (மன்னார் மாவட்டம்) அறிமுகமாகிய இவர்கள் நட்பு மீண்டும் ஏறாவூரில் கிடைக்கப் பெற்றமை "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" எனும் என் இறை நம்பிக்கையை மேலும் உறுதிப்படுத்தியிருந்தது.

ஏறாவூரில் குடியமர்ந்தபொழுது மகள் சிவச்செல்வி முன் பள்ளிப்படிப்பிற்குச் செல்லும் வயதினை எட்டியிருந்தாள். சிறிது தூரத்தில் திரு. கனகநாயகம் ஆசிரியரின் மனைவி முன்பள்ளியை நடத்திக்கொண்டிருந்தபடியால் அடிப்படைக்கல்விக்கு இது மிக உதவியாயிற்று. இப்பள்ளிக்குப் போவதில் இவள் காட்டிய ஆர்வம் அளப்பரியது. ஏனெனில் அங்கு படிப்புடன் மறு சிறுவர்களுடன் விளையாடும் வாய்ப்புகள் அதிகமிருந்தன. பின்னர் மட்டக்களப்பு நகருக்குத் தனியார் வண்டியில் சென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை செல்கையில் ஒருநாள் அவள் சொன்ன கதை என்னை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. "எங்கள் வண்டி வேகமாகச் செல்லும். அப்பொழுது ஆமி மாமாக்களைக் கண்டால், நான் கைகளை மெதுவாக மேலே உயர்த்தி, (கிழங்கு அடிக்கின போன்ற நிலையில் கைகளை உயர்த்துவது சிரமம் என்பதே இதன் பொருள்) டாட்டா காட்டுவேன்" என்றதும் வண்டியின் வேகம் பற்றி எனக்குக் கவலை உருவாகிற்று. அவர்கள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வர்த்தகர்கள் என்பதனால், நானும் அணுகி என் மனக்கவலையைத் தெரிவித்தேன். அவர்கள், "நாங்கள் இப்படித்தான் ஓடுவோம். நீங்கள் வேணுமானால் நிறுத்திக்கொள்ளலாம்" என்றார்கள்.

அவர்களது சவாலையேற்று சிவச்செல்வியும் அரசாங்கப் பேருந்தில் இன்னொரு சிறுமியுடன் பயணித்து வந்தாள். 'எல்லாம் அவன் செயல்' எனும் கோட்பாட்டில் உறுதிபூண்டமையால் இதுவும் சாத்தியமாயிற்று. ஆனால் சில மாதங்களின்பின் அதே தனியார் வண்டிக்காரன் தன் வண்டியைப் புரளவிட்டு ஆபத்தில் மாட்டிக் கொண்டபொழுது, அவனை அச்சிக்கலிலிருந்து என் கணவர் பொலிசாருக்கு விளக்கம் கொடுத்துக் காப்பாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இது நடைபெற்றது தன் சொந்தத் தேவைக்காக ஓட்டிக் கொண்டிருந்த நேரத்தில் என்பதனால் மாணவர்கள் தப்பியிருந்தார்கள் என்பதும் சிறப்பான தகவலாகும். ஆனால் தன்னிட்டமாகப் பயணிப்பது சிவச்செல்விக்கு ஒரு குதூகலமான அனுபவமாகும்.

ஏறாவூர் முற்றுமுழுதாக ஒரு பாதுகாப்பான நகரல்ல என்பதனை நாங்கள் சிறிது, சிறிதாக உணரத் தொடங்கினோம். முஸ்லிம் மக்கள் குடியிருப்புகளுக்கு அருகாமையில் இராணுவம் நிலைகொண்டிருந்தது. முஸ்லிம் குடியிருப்பினையும் தமிழ் குடியிருப்பினையும் எல்லை போடும் வகையில் காளிகோவிலும், ஒரு தமிழ்க்கலவன் பாடசாலையும் இருந்தது. ஒருசில சிங்கள வர்த்தகர்களும் குடியமர்ந்து வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்தார்கள், மட்டக்களப்பு மக்களின் வாழ்வாதாரம் சிறப்பாக நெல்வயற் செய்கை, கால்நடை வளர்ப்பு, போன்றவற்றிலே தங்கி யிருந்தமையால், வர்த்தக நிறுவனங்களை யாழ்ப்பாணத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்த்தகர்கள் அங்கு நிறுவிப் பொருளாதார வளர்ச்சிக்கு உதவியிருந்தார்கள் என்பதும் சிறப்பம்சமாகும். இக்கால கட்டத்தில் விடுதலைப் புலிகள் தமிழ்ப்பகுதிகள் சிங்கள மயமாகாமல் பார்க்கும் வகையில் தம் நடமாட்டத்தினை அதிகரித்திருந்தனர். இருப்பினும் 1987 ஆம் ஆண்டு ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் சூழ்ச்சிவலையில் சிக்குண்ட இந்திய அரசு 'சமாதானப்படை' எனும் ஒரு கூலிப் படையை அனுப்பியிருந்தது. தமிழ்மக்களும் முதலில் தமக்கு உதவுவதற்கே இப்படையினர் வந்ததாகக் கருதி மகிழ்ச்சி ஆரவாரத்தில் இந்திய இராணுவத்தினருடன் கைகுலுக்கி பல அன்பளிப்புகளையும் கொடுத்து மகிழ்ந்து நிம்மதிப் பெருமூச்சினை விட்டுக் கொண்டனர்.

இவையனைத்தையும் நாமும் எம் கடை வாயிலில் நின்று கண்டுகளித்தோம். ஆனால், மக்கள் எதிர்பார்த்தபடி தமிழர் நலனுக்காக இவர்கள் வரவில்லை. மாறாகச் சிங்கள அரசிற்கு உதவுமுகமாகக், காரணங்கள் எதுவுமின்றி மக்களைக் கைது செய்தார்கள். ஒருமுறை கரடியனாற்றுப் பகுதியில் கூட்டுறவுச் சங்கக் கடையின் தொழிலாளியைக் கைது செய்து கைகளைப் பின்னுக்குக் கட்டி, வெயிலில் இருத்திவிட்டிருந்தார்கள். அப்பொழுது மக்கள் வந்து என் கணவருக்கு இந்த நடைமுறையினால் தங்கள் உணவுப் பொருட்களைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை என்று முறையிட்டனர். உடனே என் கணவர் அவ்விடத்திற்குச் சென்று மக்களின் உணவுப் பாதிப்பினை அங்கிருந்த அதிகாரியிடம் எடுத்துக் கூறி விடுவித்த சம்பவம் ஒன்று இடம்பெற்றிருந்தது. இன்னொரு முறை கணவர் சுகவீனமுற்றிருந்ததனால் நான் கடையின் உள்ளே இருந்த நாற்காலியில் உட்கார்ந்திருந்தேன். சாமான் விற்பனையாளராக ஒரு பையன் கடையின் முற்பகுதியில் நின்று கொண்டிருந்தான். அப்பொழுது அசாம் மாநிலத்தைச் சேர்ந்த இந்திய சிப்பாய் ஒருவன், அவ்வழியில் காண்பவர்களையெல்லாம் தாக்கிக் கொண்டு வருகையில் எங்கள் கடைப்பையனையும் தாக்கினான். நான் அச்சத்தால் உள்ளே வந்தால் பதில் தாக்குதலுக்கு ஏதாவது கையில் எடுக்க முடியுமா? என்று பார்க்கையில், அவன் உள்ளே வரவில்லை. தொடர்ந்தும் ஓடிச்சென்று விட்டான். இதுபற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் என் கணவரிடம் விவரித்தபொழுது அவர் ஏறாவூரில் நிறுவப்பட்ட இராணுவப்பிரிவிற்குச் சென்று, சிப்பாயின் அறிவிழந்த செயற்பாடுகளை எடுத்துக் கூறியதனால், அந்தச் சிப்பாயை அந்த அதிகாரி தண்டிக்குமுகமாக வெயிலில் விட்டிருந்தார். இவ்வாறு தொடர்ந்தும் மக்களை இந்திய இராணுவம் அச்சுறுத்திவந்த சம்பவங்கள் பெருமளவில் இடம்பெற்றன. யாழ்ப்பாணத்தில் வைத்தியர்களைக் கொல்லும் அளவிற்கு ஒரு மிருகக்கூட்டமே இராணுவ உடையில் வந்து, ஜே. ஆர். ஜெயவர்த்தனாவிற்கு தமிழர்களைப் பலிக்கடாக்கள் ஆக்கியிருந்தது என்பதே இந்திய அரசு தமிழருக்குச் செய்த உதவியாகும். இந்தப் பலவீனம் இன்றுவரை நீடிப்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு இந்தியப் பிரதம மந்திரி ராஜீவ் காந்தியைத் துப்பாக்கியால் தாக்கிய அதே சிப்பாய் இன்றைய பிரதம மந்திரி மோடியின் வருகையின்பொழுதும் இனக்குரோத வார்த்தை களையே கக்கியிருந்தான். சிங்கள இனம் சிறிதும் வெட்கப் படாமல் அடுத்தவன் மண்ணைக் கொள்ளையடிப்பதற்காக, ஈழத்திற் கரையொதுங்கிய நாள்முதல் கொலைக்களங்களின் வெற்றியிலேயே ஆட்சிபுரிகின்ற இனம் என்பது உலகறிந்த வரலாற்று உண்மையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4

# உரிமைக்குரலை என் பேனாக்கள் பேசலாயின

இனி 1984 - 1990 வரை நாம் இவ்வாறான தலையீடுகளின் மத்தியிலும் வேறு வழியின்றி ஏறாவூரில் வாழ நிர்ப்பந்திக்கப் பட்டோம். ஆனால் இக்குறிப்பிட்ட காலத்திலேயே என் வாழ்வு புதிய திசையொன்றினை நோக்கிப் பயணிக்கத் தொடங்கியது. பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய காலத்தில் என் இந்துக்கலாசாரத்துறை மாணவனாகிய திரு. கனகரத்தினம் (பின்னால் இந்துக்கலாசாரத்துறை பேராதனைக்கு மாற்றப்பட்ட பொழுது அங்கு விரிவுரையாளராகப் பணியாற்றியவரும், ஆறுமுக நாவலர் பற்றி ஆய்வுகளை நடாத்தியவரும் என்று மட்டுமே எனக்குத் தெரிந்திருந்தது. மற்றவை பற்றி காலம்தான் அறியும்.) களனிப் பல்கலைக்கழகத்தில் புவியியற்துறை விரிவுரையாளரான திரு. சிவச்சந்திரன் ஆகியோர் (இவர் யாழ்குடா புவியியற்துறைப் பேராசிரியராகக் கடமையாற்றி, தற்பொழுது ஒய்வு பெற்றுள்ளார்.) தமிழர் வரலாறுகளை ஆய்வுசெய்து மீள்கட்டுமானம் செய்யவேண்டும் என்ற கோரிக்கையை அவர்களுக்காக மட்டுமன்றி, வரலாற்றுணர்வு கொண்ட என் பசியைத் தீர்ப்பதற்காகவும், வள்ளுவர் வழி வந்த ஒட்டுமொத்த தமிழினத்தின் பெருமைகளை நிலைநாட்டுவதற்காகவும், ஆய்வுகளை மேற்கொண்டு இராப்பகலாக எழுதிக் கொண்டிருந்தேன். இந்த எழுத்துப் பணியானது இன்றுவரை தொடர்வதனையிட்டு, நான் என் தமிழ்சமூகத்திற்குச் செய்யும் பணியாகவே கருதுவேன். பலர் வரலாறு எனில் கடந்தகால ஆண்டுகளின் வரலாறுகள், அதனால் அலுப்புத்தட்டுவனவாகக் கருதி நாட்டம் கொள்வதில்லை. உண்மையில் ஆண்டுகள் மட்டுமன்றி மாதம், கிழமை, வாரம், மணி, நிமிடம், நொடி என்னும் கால அளவுகள்கூட ஒரு தனிப்பட்ட மனிதனின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வில் ஆதிக்கம் செய்து, அவனது வரலாற்றினை முடிவுக்குக் கொண்டுவந்து இல்லாது ஒழித்துவிடுகின்றன. அதனாலேதான் "காலம்தான் பதில் சொல்லவேண்டுமென்று" நாங்கள் அனுபவித்துக் கூறி வருகின்றோம். இவ்வாறே ஒரு இனத்தின் வரலாறுகளும் காலத்திற்குள் இரையாகிவிடுகின்றன. ஆனாலும் மனிதன் ஆதிகாலம் முதல் வாழ்ந்த குகைகளில் தன் வரலாற்றினை எழுதிப் பாதுகாக்க முயற்சித்தான். காலப்போக்கில் குறியீடுகள் மூலம் தன் எண்ணங்களை எழுதி மற்றவர்களுக்கும் அறிவுறுத்தினான். பின்னர் காய்ந்த ஓலைகளை, ஏடுகளாக்கி எழுதினான். சீனாவில் முதலில் விலங்குகளின் எலும்புகளிலும், மூங்கில் தண்டுகளிலும், பட்டுகளிலுமே எழுதியிருந்தனர். பின் மரக்கூழ்களை வெயிலில் பரவிக் காயவைத்து கடதாசியை உருவாக்கினர். இவ்வாறான வளர்ச்சிகளினூடாகவே மனிதன் தன் வரலாறுகளைப் பதிவு செய்துகொள்ள முடிந்தது.

எனவே, இந்த நிலைகளையெல்லாம் தாண்டி இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த எனக்கு "வரலாறே ஒரு இனத்தின் உயிர்" எனும் கருத்து மேலோங்கியிருந்தது. எனவே, தமிழின வரலாற்றினை உயிர்கொடுத்து மீண்டும் சுவாசிக்க வைக்கவே என் பேனாவை அன்றிலிருந்து, இன்று வரை நான் தூக்கினேன் எனில், அதனை எவ்வளவு தூரம் சாதித்திருக்கின்றேன் என, என் நூல்கள் ஒவ்வொன்றும் பதில் சொல்லவல்லன. திரு. கனகரத்தினம், திரு. சிவச்சந்திரன் ஆகியோர் மட்டுமல்ல, நானும் வரலாறு அற்ற பிண்டமாகவே நடமாடியிருந்தேன். ஆனால் இன்றைய நிலை அப்படியல்ல. புலம்பெயர்ந்து வாழும் நிலையில் எமக்குக் கிடைத்த மனித உரிமைகள், சமய சமூக வாழ்வியல், அரசியல் அந்துஸ்துகள் அனைத்தும் அற்புதமானவை. எமக்காக குரல் கொடுத்த மனிதநேயத் தொழிற்பாட்டாளர் அனைவரும் மேற்குலகத்தைச் சேர்ந்தவர்களே ஆவர். எனவே, இந்நிலையில் இறுதியாக இவர்கள் அனைவருக்கும் என் தலைசாய்த்து கடிதங்களை எழுதும்பொழுது, சுருக்கமாக எம்மக்களின் "வந்தாரை வரவேற்கும் மனிதநேயமே" நாடுகளையும், ஆட்சிகளையும் இழப்பதற்காகிய காரணம் என்பதனை வரலாற்றடிப்படையில் சான்றுகளுடன் நிரூபித்து எழுதியிருந்தேன். பின் இக்கடிதங்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டிற்கு நூல் வடிவம் கொடுத்து ரஷ்யா முதல் நியூசிலாந்து வரையுள்ள ஏழு நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களுக்கு அனுப்பி அவர்களுக்கும் "நாங்கள் எவ்வாறு நாடற்றவர்களாக ஆக்கப்பட்டோம்" என்பதனை அறிவுறுத்தினேன். இதனைத் தொடர்ந்தே ஐரோப்பியர், ஆபிரிக்கர், கனடியர் முதலானோருக்கும், போர்க்குற்ற விசாரணை பிற்போடப் பட்டதனால் ஏற்படவிருக்கின்ற நிலைமை, முற்றாகத் தமிழ்மக்களின் இருப்பினை அழித்துக்கட்ட உதவுவதற்கே என்பதனையும் கடந்தகால வரலாற்று அனுபவங்கள் கொண்டு கோடிட்டுக் காட்டியிருந்தேன். குறிப்பாக கியூபா, இஸ்ரேல் ஆகிய நாட்டின் வெளியுறவு அமைச்சுகளுக்கும், தமிழரின் உரிமைகளைப் பகடைக்காயாக நகர்த்தி, சிங்கள அரசுடன் சூதாட்டத்தில் துணை போகின்ற அமெரிக்காவிற்கும், மனித நேயத்திற்கு நன்றி கூறி எழுதிய கடிதங்கள் அனுப்பப்பட்டன. ஏனெனில் எம் வரலாறுகள் முற்றாகத் திரிபுபடச் செய்த நிலையில், உலக மக்களுக்கும் பாதுகாப்புக்காகிய எம் வாழ்வுரிமைப் போராட்டம் பயங்கரவாதமாகவே திரிபுபடுத்தப்பட்டிருந்தது.

எனவே, அவர்களைச் சொல்லிக் குற்றமில்லை. இவற்றை நாம் எமக்குள்ளே பேசிக்கொண்டேமேயொழிய பிற உலகிற்கு எடுத்துக்கூறத் தவறியிருந்தோம். இந்நிலையை மாற்றியாக வேண்டுமென்றே என் நன்றி கூறும் கடிதங்கள், வரலாற்றுக் கோவைகளாக உருவெடுத்திருந்தன. இவையனைத்தையும் "தமிழும், ஈழமும் கடந்துவந்த வரலாற்றுச் சோதனைகள்" எனும் நூலில் தொகுத்து வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (மணிமேகலைப் பிரசுரம், 2014.) இந்நூலில் தாமரை குணாளன் எனும் என் புனைபெயர் இடம்பெற்றிருப்பதும் பாதுகாப்புக் காரணங்களைக் கருத்திற் கொண்டிருந்ததெனலாம். வரலாற்றுப் படிப்பினையே இதற்குக் காரணம். கலிபோனியாவில் தன் வளர்ப்பு நண்பனாகிய ஜெரமிக்காக வேகமாகப் பாய்ந்து நாயை விரட்டிக் காப்பாற்றிய பூனை காட்டிய நன்றி, அன்பு, இரக்கம் என்பன வந்தேறுகுடிகளாகிய விஜயன் பரம்பரையினரிடம் இல்லையென்பதனை இன்றுவரை நிரூபித்துக் கொண்டிருப்பது யாவரும் உணர்ந்த உண்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5

# என் எழுத்துவளர்ச்சிக்கு உறுதுணையாகயிருந்தோரை நினைவுகூர்கின்றேன்

இனி, ஏறாவூர் வாழ்க்கையில் பத்து வருடங்களாக நான் முழுமையாகப் பேனா, கடதாசி, மேசை, நூல்கள் ஆகியவற்றுடன் கழித்திருந்தேன். நான் இளம் கலைமாணிப் பட்டப்படிப்பிற்கும், முதுகலைமாணிப் பட்டப்படிப்பிற்கும் வேண்டிய அனைத்து நூல்களையும் வாங்கிவைத்திருக்கும் பழக்கம் கொண்டவள். வடமொழிப் பாடத்திட்டத்திற்குரிய நூல்கள் அத்தனையையும் தபால்பொதி மூலம் இந்தியாவிலிருந்து அச்சிறுவயதிலேயே (23; 24) தருவித்திருந்தேன். தமிழகத்தில் மேற்படிப்பை மேற்கொள்கையில் நூல் கொள்வனவு என்பது தொல்லியல் துறையின் ஒவ்வொரு நுணுக்கத்தையும் அறிந்துகொள்ள இடம் பெற்றிருந்தது. அதனால் ஏறாவூர் வீட்டில் எனக்கொரு சிறுநூலகமும் உருவாகியிருந்தது.*

---

* இந்நூலகம் எம் நன்றிகெட்ட ஒரு சமூகத்தினால் கொள்ளையடிக்கப்பட்டது குறிப்பிடல் அவசியம். இந்நூல்களை எவருமே விளங்கிக் கொள்ளும் ஆற்றல் இல்லாமல் இருந்தும்கூட நம்பிக்கைத் துரோகம் இடம் பெற்றமை வியப்பே. 1996ஆம் ஆண்டு நான் தனியாக ஏறாவூரைவிட்டு நீங்கி லண்டனிலிருந்த என் கணவர், மகளுடன் இணையப் புறப்படுகையில், அருகிலிருந்த பிள்ளையார் கோவிற் பூசகர், அங்கு வர்த்தகத்திலீடுபட்டிருந்த வேலாயுதம் மகன் ஆகியோர் பாவனைக்கெனக் கையளித்திருந்தேன். இனாமாகக் கைக்கெட்டிய இவ்வீட்டிற்குள் நூல்கள் அனைத்தும் உள்ளடங்கிய அலுமாரி மட்டுமே என் உடைமையாகும். இவர்கள் இவ்வளவு நன்றிகெட்ட தொழிலில் ஈடுபடமாட்டார்கள் என்பதில் உறுதியாக இருந்தேன். ஆனால், நாங்கள் நான்கு ஆண்டுகள் கழிந்து அங்கு சென்றபொழுது நூல்களின்றி அலுமாரி ஓரிரண்டு நூல்களுடன் வெறுமையாகக் கிடந்தது. பின்னர், அலுமாரியையும், எஞ்சிய நூல்களையும் மட்டக்களப்பு பொதுநூலகத்துக்கு அன்பளிப்புச் செய்திருந்தேன் என்பதும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே என் எழுத்துத்துறைக்கு இந்நூல்களும் உதவியிருந்தன. ஆனால் இன்று அவற்றை மீண்டும் பார்த்து மகிழ முடிய வில்லையே என்ற ஆதங்கம் என் நினைவிலிருந்து அகல்வதற் கில்லை. ஆனாலும் மீண்டும் ஒரு நூலகம் லண்டன் வீட்டிலும் உருவாவதற்கு என் கணவர், மகள் சிவச்செல்வி ஆகியோரின் பங்களிப்பும் தவிர்க்க முடியாதவையாகும். மகள் நொட்டிங்காம் பல்கலைக் கழகத்தில் (University of Nottingham) ஆங்கிலத்தினையும், தத்துவத்தினையும் படித்தமையால் அவளும் என்னைப்போலவே அனைத்து நூல்களையும் வாங்கியிருந்தாள். என் கணவர் கணக்காளரானபடியினால் கணக்குத்துறை நூல்களுக்கப்பால் படிக்கும் ஈடுபாடற்றவர். ஆனால் தமிழரின் உரிமைப்போராட்ட அனுபவங்கள் அவரை அரசியற் செயற்பாடுகளில் ஈடுபடுத்தி யிருந்தது. அதனால் தமிழர்கள் விடுதலைப் போராட்டம் பற்றி எழுதிய நூல்கள் அத்தனையையும் வாங்கிக் கொள்வார். அது மட்டுமின்றி கணினியில் வெளியிடப்படும் அத்தனை ஈழப்பிரச்சனை தொடர்பான ஆக்கங்களையும் பிரதி எடுத்துக் கொள்வார். இருப்பினும் 1948 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட தமிழரின் அரசுகள், நாடுகள், இழப்புகள் பற்றி நான் எடுத்துக் கூற முற்பட்டால், “வரலாறு எனக்கு தேவையற்றது” என்று கூறிவிட்டு விலகிக் கொள்வார்.

ஆனாலும் என் எழுத்துப்பணிக்கு எப்பொழுதும் அவர் பல்வேறு வழிகளில் உதவியிருக்கிறார். இவற்றுள் சிறப்பாக நான் ‘மட்டக்களப்பு மான்மிய ஆராய்ச்சி’ எனும் நூலினை எழுதத் தயாராகுமுன் கிழக்கு மாகாணத்தின் தென்பகுதிவரை பழம்பெருமை வாய்ந்த கோவில்கள், மக்கள் குடியிருப்புகளை அவதானித்து, வரலாற்றினை ஊடுருவலாம் எனக் கருதினேன். அப்பொழுது என்னையும், மகளையும் தன் மோட்டார் வண்டியில் கொக்கட்டிச்சோலைச் சிவன்கோவில், மண்டூர் முருகனாலயம் என்பவற்றினூடாகத் தெற்கே பயணித்து திருக்கோவில் (கடற்கரைக் கோவில்) வரை அழைத்துச் சென்றிருந்தார். அதனோடு மட்டக்களப்பு நகரிலும், பின் லண்டன் ஈஸ்ட்ஹாம் நகரிலும் என் நூல்களை வெளியிடும் முயற்சிகளிலும் ஈடுபட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. இதற்கப்பால் மணிமேகலைப் பிரசுரம் நூல்களைத் தயாரித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திருக்கையில், அவற்றின் ஒரு பகுதியை லண்டனுக்கு எடுத்து வந்தும் உதவுதல் சிறப்பான அம்சம். இன்னும் சிறப்பாகச் சொல்லப்போனால் நான் என் அறைக்குள்ளிருந்து எழுதிக் கொண்டிருப்பேன். அவர் தன் கணினியில் விடயங்களை பிரதிபண்ணித் தொகுத்திருப்பார். இவற்றுள் கிடைக்கப்பெற்ற தகவல்களைக் கொண்டே ஆணித்தரமான கருத்துகளை சான்றுகளுடன் பிரித்தானியப் பிரதமர் மேன்மைதகு. டேவிட் கமரூனுக்கும், கனடாப் பிரதமர் மேன்மைதகு ஸ்ரீபன் ஹார்பருக்கும், அண்மைக்கால இனப்படுகொலைகள் பற்றி மனிதநேயச் செயற்பாட்டாளர்கள் தெரிவித்த தூரக் கண்ணோட்டங்களை முன்வைக்க முடிந்தது எனில் மிகையாகாது. இவரைப்போலவே என் மகளின் பங்களிப்புகளையும் நான் நிராகரிப்பதற்கில்லை. நான் ஆங்கிலத்தில் எழுதும் விடயங்களைப் பார்வையிட்டுத் திருத்தித் தருபவள் என்பதனையும் குறிப்பிட்டேயாக வேண்டும். சிறுவயதில் மட்டக்களப்பிற்கு திருமதி. சமியின் ஆங்கில வகுப்புகளுக்கும், பின் மாலைதீவில், ஒரு ஆங்கில ஆசிரியர் (பெயர் ஞாபகமில்லை, ஈழத்தமிழர்) வீட்டிற்கு வரவழைத்தும் ஆங்கிலத்தைப் படிப்பித்ததன் பயனின் அறுவடை மிகுந்த பயன் தந்ததெனலாம். முருகப்பெருமானே தந்தைக்கு உபதேசம் செய்த தமிழரின் மரபுவழி வந்ததெனில் தவறாகாது.

ஏற்கெனவே நான் குறிப்பிடத்தவறிய ஒருவர் வித்வான் எப்.எக்.சி.நடராசா ஆவர். யாழ்குடாவைச் சேர்ந்த இவர் மட்டக்களப்பில் திருமணம் செய்தபின் அங்கு வாழ்ந்தமையால், மட்டக்களப்பின் தனித்துவத்தினைக் கட்டியெழுப்பும் வகையில் 'மட்டக்களப்பு மான்மியம்' எனும் ஒரு சிறு நூலினை உருவாக்கி மட்டக்களப்பு அறிஞர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்றவராவார். அன்றைய காலகட்டத்தில் வரலாற்று முக்கியம் பெற்ற ஏடுகள் மாகோன் எனும் கலிங்கத்து மன்னன் காலம் முதலாகத் தேசத்துக் கோவிற் பெட்டகங்களில் வைத்துக் காப்பாற்றப்பட்டன. ஏனெனில் மட்டக்களப்புப் பகுதியில் ஏற்பட்டிருந்த சிங்களக் குடியேற்றங்களையும், பௌத்த விகாரைகளையும் இவன் படையெடுத்துவந்து அகற்றியபின் மட்டக்களப்பில் தமிழும், சைவமும் தழைக்கும்படி செய்வதற்கான நடவடிக்கைகளிலேயே,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகோனால் மட்டக்களப்புத் தேசத்துக் கோவில்களும், தமிழ்மொழி வளர்ச்சிகளும் புத்துயிரூட்டப்பட்டன என்பது வரலாறு. எனவே, இந்தக் குறிக்கோளுடன் பாதுகாக்கப்பட்ட ஏடுகளைப் பெற்றுத் தொகுக்கும் தகைமைகளை எப்.எக்.சி. நடராசா பெற்றிருந்தார் என்பதும் ஒரு வரலாற்றுத் திருப்ப மாகும். இதனோடு தொடர்புடைய இன்னோர் செய்தியையும் நான் இங்கு குறிப்பிடல் அவசியமாகும். களனியாவில் என் விரிவுரைகளுக்குச் சமூகமளிப்பவரான, செல்வி. தங்கேஸ்வரி கதிர்காமர், "தமது மட்டக்களப்பு வரலாற்று மூலங்களை யாழ்குடா அறிஞர் ஆய்வுகளுக்கு கொடுக்கமாட்டார்கள்" எனத் தெரிவித்திருந்தார். அதனாலே யாழ்குடாவைச் சேர்ந்த மிகச்சிறந்த வரலாற்றுப் பேராசிரியரான எஸ். பத்மநாதன் அவர்கள் அங்கு ஆய்வுகளை மேற்கொள்ள முடியாதிருந்தமை இதன் மறுபக்கக் கதையாகும். இந்நிலையிலேயே நான் ஏறாவூரில் எழுத்துப் பணியில் ஈடுபட்டிருக்கையில், செல்வி. தங்கேஸ்வரியைச் சந்தித்து மட்டக்களப்புடன் தொடர்பான வரலாறுகளை ஆய்வு செய்ய ஊக்கப்படுத்தியிருந்தமையும் என் பக்க வரலாறாகும். ஆனால், எப்.எக்.சி. நடராசா இரு மாவட்டங்களுக்கும் உரித்தானவரான படியினால், அவரை என் போன்றவர்கள் இலகுவாக அணுகக்கூடியதாகவிருந்தது. அதனோடு இவர் பேராசிரியர் ஆ.வி. மயில்வாகனத்தின் நட்பினைக், கொழும்பில் இவர் தமிழ் மொழித்துறைப் பணிமனையில் கடமையாற்றும்பொழுது ஈட்டியிருந்தார் என்பதும் தமிழ் அவருக்கு வழங்கிய நன்கொடையாகும்.

எனவே, மட்டக்களப்பில் இவரது வீட்டிற்கு நான் செல்லும் காலங்களில், துணைவியார் காலமாகிய சூழ்நிலையில் தனிமையான வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருந்தார். இடைசுகம் பிள்ளைகள் வந்து தம் கடமைகளைச் செய்து போவர். இந்நிலையில் வீடு பெரிதானாலும், இவரது நூலக அறையின் வெளியே காவல் புரிபவர்போல் ஒரு சாய்மான நாற்காலியில் படுத்துக் கொண்டிருப்பார். இதே நிலையொன்றினையே கொழும்பில் பேராசிரியர் ஆ.வீ. மயில்வாகனம் வீட்டிற்குச் செல்கையிலும், ஓய்வுபெற்ற என் மாமனார் ஏ. தில்லையம்பலம் (கரணவாய் தெற்கு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரப்பதிராயன்) வீட்டிற்குச் செல்கையிலும் இருந்துள்ளமையை நான் இத்தருணம் மீட்டுப் பார்க்க விரும்புகின்றேன். இந்த மூவரின் வீட்டு நூல்நிலையங்களும் என் அறிவுப்பசிக்கு விருந்தாகியிருந்தன. அல்லாவிடில் நான் சமய, சமூக, வரலாற்றாசிரியராக உருவாகும் வாய்ப்பினைப் பெற்றிருக்க மாட்டேன் என்பதே உண்மையாகும். இவர்களுள் பேராசிரியர் ஆ.வி. மயில்வாகனம் என் 'சைவசித்தாந்தமும் விஞ்ஞான உலகமும்' எனும் நூல் உருவாகுமுன்னரே காலமாகிவிட்டார். வித்வான் எப்.எக்.சி. நடராசா என் 'மட்டக்களப்பு மான்மிய ஆராய்ச்சி' எனும் நூலிற்கு ஆசியுரையொன்றினை திருமலை - மட்டுநகர் ஆயர் வணக்கத்திற்குரிய கிங்ஸ்லி - சுவாமிபிள்ளையிடமிருந்து பெற்றுத் தந்திருந்தார். ஆனால், நூல் 1993ஆம் ஆண்டு முழுமை பெற்ற நிலையில், இவர் காலமாகியிருந்தார். ஆனால், என் மாமனார் ஏ. தில்லையம்பலம் இன்னமும் 99 வயதிலும் நூல்களை வைத்துக்கொண்டு பொழுதைக் கழிக்கின்றார் எனில் முதுமை தன் பல்வேறு முகங்களைக் காட்டி மகிழ்வதில் உறுதியாக இருப்பதே பலனாம். இப்பதிவுகள் என் மீளாய்விற்கு வந்திருந்த சமயம் மாமனார் ஏ. தில்லையம்பலம் அவர்கள் 8.6.2015 அன்று காலமாகிவிட்டார் என்பதும் புதிய பதிவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6

# மீண்டும் கொலைக்களங்கள்

ஏறாவூர் வாழ்க்கையில் பலப்பல புதிய அனுபவங்கள் இருந்தாலும், 1990 ஆம் ஆண்டு எதிர்கொண்ட சாவின் விளிம்புகளும், சாகாத நினைவுகளும் மீண்டும் சிங்கள இனத்தினை அச்சத்துடனே பார்க்க வைக்கின்றது. சிங்கள இராணுவத்தினர் பொல்லநறுவையிலிருந்து மட்டக்களப்பை நோக்கி கால்நடையாகப் படையெடுத்து வருகையில், தமிழர்களைக் கொலைசெய்தும், அவர்களின் வர்த்தக நிறுவனங்களைக் கொள்ளையடித்துக்கொண்டும் வந்தார்கள். அப்பொழுது ஏறாவூரின் முஸ்லீம் நபர், ஒரு நேர்மையற்ற பேர்வழி இந்த இராணுவத்தினருக்கு மாலை போட்டு வரவேற்றிருந்தார். இது அங்கு நிலைகொண்டிருந்த கருணா தலைமையிலான விடுதலைப்புலி இயக்கத்தினருக்குச் சவாலாக அமைந்திருந்தது. விடுதலைக்குப் போராடுகிறவன் தன் உரிமையை மறுக்கின்றவனுடனேயே போராட வேண்டும். மாறாக போராட்டக் கோட்பாடுகள் தெரியாத ஒரு சில பேதையர்களும், அறிவிலிகளும் இந்த விடுதலையியக்கத்தின் பெயரைக் கரிபூசும் வகையிற் செயற்பட்டிருந்தார்கள். அதனைக் குறிப்பிடாவிடின் நான் பெண்ணினத்திற்குத் துரோகம் புரிந்தவளாகவே என்னை எடைபோடும் நிலைக்குத் தள்ளப்படுவேன். எனக்கு முஸ்லீம் மக்களுடன் நீண்டகாலத் தொடர்பு, மற்றும் அவர்களது உபசரிப்பு என்பன என்னை மிகக் கவர்ந்ததொன்றாகும். இங்கு தமிழ் முஸ்லீம் மக்களையே நான் குறிப்பிடுகின்றேன். ஏறாவூரில் முஸ்லீம், தமிழ்ப் பகுதி மக்களிடையே ஒரு இறுக்கமான நட்பு சகல துறைகளிலும் இருந்துவருதல் நான் அவதானித்த சிறப்பம்சமாகும். சைவக் கோவில்களுக்கு, அடுத்து கிறித்துவ தேவாலயங்கள் இருப்பதும் இந்த மக்களின் தெய்வ வழிபாட்டுச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனையின் உயரிய நிலைக்கு எடுத்துக்காட்டாகும். அதுபோலவே விடிய 4 மணிக்கு முஸ்லீம் வழிபாட்டு நிலையங்களிலிருந்து 'அல்லாவும் அக்பர்' எனும் வழிபாட்டு ஒலி அனைத்து மக்களையும் இறைவனை நினைக்கத் தூண்டும் செயலைச் செய்துவந்ததெனலாம். அதனால் ஒரு முஸ்லீம் உம்மா, ஐம்பது வயதிற்குட்பட்டவராகலாம், தமிழ்ப் பகுதிகளுக்கு வந்து தன் அரிசி விற்பனையைச் செய்வதனை வழமையாகக் கொண்டவர். இவரது அரிசியினை உண்டு வருபவர்களில் நாங்களும் ஒருவர். அவர் வீட்டிற்குள் வந்து என்னுடன் சுகநலன் கேட்டு உரையாடிச் செல்வதனாலும், இவர் என் மனத்திரையில் நிலையான இடத்தினைப் பிடித்திருந்தார்.

ஆனால், இந்தச் சிங்கள இராணுவத்தினை மாலை போட்டு வரவேற்ற துரோகச் செயலானது, இன்னொரு துரோகச் செயலிற்கு தூபம் போட்டிருந்தது. போரில் நெஞ்சில் வேல் பாய்ந்தால் வெற்றிச் சாவு, முதுகில் வேல் பாய்ந்தால் தோல்விச் சாவாகும் என்பதே தமிழர் காலம்காலமாகப் போற்றிவந்த மரபாகும். ஆனால் ஏறாவூரில், வெற்றியுமல்ல, தோல்வியுமல்ல. போரானது மிகுந்த இழிநிலைக்குரிய பெரிய பாவமூட்டையை நிலையாகச் சுமக்கும் வகையில், மிருகங்கள்கூட ஐயோ எனக் கதறும் வகையில் அமைந்திருந்தது. இந்த அரிசி உம்மா தூங்கியிருக்கையில் கொல்லப்பட்டார். அது போலவே இன்னொரு கர்ப்பிணிப் பெண்ணும் இரையாகியிருந்தார் என்று பேசிக்கொண்டார்கள். இவர்கள் வீடுகளை முட்டாள்கள் இலகுவாக அணுகக்கூடிய வகையில் எல்லையில் இருந்ததே இச்சாவுகளுக்குரிய முக்கிய காரணமாகும். இவர்கள் சாவுடன் ஏறாவூர் தமிழ்ப்பகுதியும் மயானபூமியாகிற்று. இதனைக் கேள்வியுற்ற மக்கள் இரவோடு, இரவாக வந்தாறுமூலையிலமைந்திருந்த பல்கலைக்கழகத்திற்குள் அடைக்கலமானார்கள். நாமும் அவர்களைப் பின் தொடர்ந்தோம். இவ்வாறு அகதிகளாகச் சென்றபொழுது பல்கலைக்கழக விஞ்ஞானபீடப் பேராசிரியையும், விடுதி நிர்வாகியுமான செல்வி. மனோ. சபாரட்னம் தன்னாலான உதவிகளைச் செய்திருந்தார். அதனோடு இராணுவம் அங்கு வந்து கைது செய்துபோனபொழுது, இருநூற்றைம்பது பேர்வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்குப் பலிக்கடா ஆனார்கள். ஆனாலும், ஒருசிலரைக் காப்பாற்றும் வகையில் மனோ. சபாரட்னம் மதிலேறிக்குதித்து, இராணுவத்துடன் வாதாடிச் சிலரை மீட்டுவந்த சம்பவமும் காலத்தால் மறக்கக்கூடாத பெண்களின் செயற்பாடுகள் ஆகும். ஆயுதமேந்தாத தமிழ்ப் பெண் போராளிக்கு இவர் தலைசிறந்த ஒருவராவார். நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்த இவரும், தன் முதுமையை மட்டக்களப்பிலேயே கழிக்க முடிவெடுத்திருந்தார். இவரது தொடர்புகள் அற்ற நிலையில் அவர் பற்றி மேலதிகமாக எதுவும் குறிப்பிடுவதற்கில்லை. சிங்கள இராணுவத்திற்குக் கிடைத்த அதிர்ஷ்டலாபச் சீட்டுகள் போல் உலகத்தில் வேறு எந்த இராணுவத்திற்கும் கிடைக்கவில்லையென்றே கூறவேண்டும். ஏறாவூரிலும், செங்கலடியிலும் யாழ்குடா வர்த்தகர்களின் பொருட்கள் அத்தனையும், கதவுகள், யன்னல்கள் உட்படச் சூறையாடப்பட்டன. எம் வீட்டுப் பொருட்கள் அத்தனையும் கட்டி, கட்டி வைக்கப்பட்டிருந்தன. மற்று நகைக்கடை வியாபாரிகள் கடைகள், வீடுகள் என்பன எல்லாமே பெறுமதியான சொத்துகளைக் கொண்டவை. குறைந்தது பதினைந்து நாட்கள் பல்கலைக்கழக வளாகத்தில் வாழ்ந்திருப்போம். ஒவ்வொரு நாளும் இவர்கள் அள்ளிக்கட்டிய தமிழரின் வியர்வையில் உருவாகிய சொத்துகள் அனைத்தும் பெரிய ஊர்திகளில் ஏற்றிச் சென்றதைப் பதினைந்துநாள் வரை நாள்தோறும் அவதானித்தோம். அதனால் அங்கிருந்து புலம்பெயர்தலே, எம் திறமைகளுக்குப் புதிய துறைகள் திறக்கும் எனும் நோக்கில் மாலைதீவு புலம்பெயர்ந்தோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7

# மாலைதீவு தந்த அனுபவங்கள்

**அ**ங்குக் கணவர் கணக்காளரானார். நான் ஒரு பாடசாலை ஆசிரியையானேன். மாலைதீவினைச் சூழ உள்ள தீவுகளிலிருந்து வீடுகளில் வேலைக்கமர்த்தப்பட்டவர்களே பெரும்பாலான மாணவர்கள். ஆகையினால் இவர்களுக்குப் படிப்பிப்பதென்பது இன்னோர் சவாலாகும். ஆயினும் வங்கத்திலிருந்து மக்களுக்குத் தொல்லை கொடுத்த விஜயன் குழுவினரின் மனைவியரின் தோணி கரை சேர்ந்த இடம் மகளிர் தீவு என மகாவம்சம் குறிப்பிடும் வரலாற்றுத் தகவலை ஆராய இது ஒரு வாய்ப்பாக எனக்குக் கிடைத்திருந்தது. பெண்கள் குடியமர்ந்த இத்தீவினில் முஸ்லீம் வர்த்தகர் தொடர்பினால் இவர்கள் முஸ்லீம் மதத்தைத் தழுவியிருந்தனர் என்பது உண்மையே. ஆனால் முற்று முழுதாக முஸ்லீம் மதக்கோட்பாட்டின்படி நாம் அங்கு வாழ்ந்திருந்த காலத்தில் பெண்கள் முக்காடிடும் மரபை ஏற்கவில்லை. அதனோடு பெண்களும் வழிபாட்டுத்தலத்திற்குச் சென்று வழிபட்டு வந்தனர். வீட்டு நிர்வாகத்திலும் முழு அதிகாரம் கொண்டவர்களாகவே காணப்பட்டனர். குறிப்பாக அவர்களது 'திவேஹி மொழி' (Divehi) சிங்கள மொழித் தொடர்புடையது என்பதும் குறிப்பிடத்தக்கது. இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்குப்பின் மகாவம்சம் குறிப்பிட்ட சிங்களக் குடியேற்றங்கள் உண்மையானவை என்பதனை நான் முழுமையாக ஏற்றுக்கொள்ள முடிந்தது.

மாலைதீவில் தொடர்ந்து வாழ்வதென்பது இருட்டறைக்குள் வாழ்வது போன்றதாகும். அதனால் மகளை ஒரு சிங்கள விடுதியிலே சேர்க்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாகினேன். காரணம், கொழும்பிலிருந்த பிற பாடசாலைகளில் விடுதிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கவில்லை. அதனோடு உறவினர்களோடு விடுவதற்கும் என் சிறுவயது அனுபவங்கள் அனுமதிக்கவில்லை. விடுதியுடன் ஆங்கில மொழியினூடாகக் கல்வியென்பதனால் நன்கொடையாக அறுபத்தைந்தாயிரம் (65,000/-) கொடுப்பதோடு, மாதம் ரூபாய் 12,000 ஆயிரமும் கட்டவேண்டிய திட்டமும் இருந்ததனால், பாதுகாப்பு உறுதியானது என நம்பிப் பன்னிரண்டாவது வயதிலேயே வேறொரு சமூகத்துடன் படிக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளாகினாள். விடுதியில் தமிழ்பேசும் ஒரு முஸ்லீம் மாணவி தவிர, மற்ற இருபதிற்குட்பட்ட மாணவிகள் சிங்களப் பிள்ளைகளே. முஸ்லீம் பிள்ளையே முதலில் இவளின் பாதுகாவலர்போல் பணியாற்றியிருந்தாள். காலம் போகப் போகச் சிங்களத்தைப் பேசும் அளவிற்கு முன்னேறியிருந்தாள். இவள் பேசிய முதல் சிங்கள வாக்கியம் முஸ்லீம் பிள்ளை சொல்லிக் கொடுத்தது. ஏனெனில் இவளது நீலநிறப் பேனாவைக் காணவில்லை. அதனை யாராவது கண்டார்களா? என்று ஒவ்வொரு கட்டிலில் இருந்த சிங்கள மாணவியையும் நோக்கிக் கேட்க வேண்டியிருந்தது. அது பின்வருமாறு, "மகே நில்பாட்ட பேனா நத்திவுனா கௌவுருத் வலுவத" என்பதனைப் பல தடவை கூறிகொண்டு சென்றதாக என்னிடம் தெரிவித்தாள். அதனோடு இந்த விடுதியிலேயே இவளுக்குப் புத்த மத வழிபாடும் அறிமுகமாகியிருந்தது. எனக்குக் கிடைத்த சிறு வயது வாழ்க்கையின் சிறுபகுதியை இவளும் அனுபவித்திருந்தாள். எம் வாழ்வு நீரோட்டத்தில் இது தவிர்க்கக்கூடியதாக இருக்கவில்லை. பெரிய பிரித்தானியாவில் பிறந்த சான்றுப்படிவம் இருந்தாலும், தமிழ்ப் பாரம்பரியங்களைக் கற்பித்தலே எமது குறிக்கோளாக இருந்தது. அதுவும் நடைபெறாத நிலையில் மீண்டும் லண்டனுக்குச் செல்லலே சிறந்த முடிவாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8

## லண்டன் நோக்கிய புலம்பெயர்வுகள்

**அ**தனால் முதலில் கணவர் லண்டன் புலம்பெயர்ந்து, தன் நிலைமைகளை உறுதிப்படுத்திக்கொண்டு, மகளையும் புலம்பெயர வைத்திருந்தார். எனக்கு மகளுடன் பயணிக்க கொழும்பிலிருந்த பிரித்தானியக் காரியாலயம் மறுத்திருந்தது. அதனால் வேறு வழியின்றி, மீண்டும் ஏறாவூர் வீட்டிற்குத் திரும்பிச் சென்றேன். அப்பொழுது பெரிய கடைகளுக்குள் எனக்குத் தெரிந்த குடும்பமொன்றும், சிறிய கடைகளுள்ளும், வீட்டிற்குள்ளும் உள்ளூரைச் சேர்ந்த ஒரு குடும்பமும் குடியிருந்தனர். பெரிய கடைக்குள் இருந்த குடும்பத்துடன் ஒரு மாதிரி சமாளித்து அவர்களுடன் தங்கினேன். அப்படியானால்தான் வீட்டிற்குள் இருப்பவர்களை சுமுகமாக வெளியேறச் செய்யமுடியும் என நம்பினேன். ஆனால் அவர்களோ குடிநீர் எடுக்கக்கூட கிணற்றடிக்கு என்னைப் போகவிடவில்லை. அதனால் பக்கத்து வீட்டிற்குச் சென்றே குடிநீர் எடுத்து வந்தார்கள். பெரிய கடைக்குள் பின்னால் கிணறு இருந்தாலும்கூட மலசல கூடத்திற்கு அணித்தாகக் கிணறு இருந்தமையால், அது குடிப்பதற்கு தூய்மையற்றதாக இருந்தது. இத்தகைய நிலையில் நானும் எனக்கு நன்கு பழக்கப்பட்ட சரோஜினி என்பவரிடம் இவர்கள் பற்றிக் கூறினேன். இவர் எம்முடன் நட்புக் கொண்டிருந்தவரானபடியாலும், ஊரவரானபடியாலும் துணிச்சலுடன் அவர்கள் விரைவில் வீட்டை விட்டு வெளியேற வேண்டுமென்று வலியுறுத்தினார். அதற்கு அவர்கள் ஏறாவூர் ஊர்க்காவலரிடம் முறைப்பாடு செய்தனர். இச்சமயம் பேராசிரியை மனோ சபாரட்னம், உபவேந்தராய் இருந்த பேராசிரியர் சந்தனத்தின் தலைமையிலான பல்கலைக்கழக நிர்வாக சபையின் அனுமதியைப் பெற்று, விஞ்ஞானபீட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களுக்கு 'சமூகம் பற்றிய சிந்தனைகளை வளர்க்குமுகமான விரிவுரைகளை' நடாத்தும்படி நியமனக்கடிதம் பெற்றுத் தந்திருந்தார். தற்காலிகமான தொழிலாயினும் எனக்குக் கையறவிட்ட விரிவுரை வகுப்புகளுக்குச் செல்ல இது ஒரு வாய்ப்பை அளிப்பதாக இருந்தது. எனவே, என்னைத் தேடி வந்த ஊர்க்காவலரிடம், "என் தொழில் செய்வதற்கு எனக்கு வீடு அவசியம்" என நானும் வலியுறுத்தினேன். அப்பொழுது ஊர்காவலர் என் நியாயத்தை ஏற்றுக்கொண்டு "ஒரு மாத காலத்தில் அவர்கள் வீட்டை விட்டு வெளியேற வேண்டு"மெனக் கூறிவிட்டுச் சென்றார்.

இவ்வாறு தமிழர்களுக்கும் பிறர் சொத்துக்களை அல்லது காணிகளை அபகரிக்கும் குணங்களை நான் பல்வேறு சந்தர்ப்பங்களில் அவதானித்ததனாலோ என்னவோ தமிழ்ச்சமூகம் "இறைவனின் சாபக்கேட்டினைத் தொடரவைக்கும் ஒரு சமூகமாகவே தொடர்கிறது" என நானும் எடைபோட்டுக் கொண்டேன். ஆனாலும் நான் இவ்வாறு தனியனாக வாழ்ந்த காலத்திலேயே 'மட்டக்களப்பு மான்மியம் ஒரு ஆராய்ச்சி' எனும் நூலை அச்சேற்றியிருந்தேன். என் முதல் நான்கு நூல்களையும் மட்டக்களப்பிலிருந்த கத்தோலிக்க அச்சகமே, எவ்வித இடையூறுகளுமின்றி நிறைவேற்றித் தந்திருந்தது. அச்சுக் கோர்க்கும் பழைய நூலாக்கமாயினும், ஏறாவூரில் வசித்து வந்த ஒரு பறங்கி இளைஞர் அங்கு வேலை செய்ததனால் அச்சிட்ட பகுதிகளைக் கொண்டுவந்து தருவதும், நான் இரவோடு இரவாக அச்சிறிய பகுதியைத் திருத்திக் காலையில் கொடுத்து விடுவதும், விரைவான செயற்பாடுகளுக்கு உதவியிருந்தன. பின் என் மகள், கணவருடன் இணைவதற்கு ஒரு புதிய திட்டம் தீட்டப்பெற்றது. அதாவது வட அயர்லாந்து பல்கலைக்கழகத்தில் இணைந்து ஆய்வுகளை மேற்கொள்ள நுழைவிற்கான முயற்சியில் விண்ணப்பிக்க ஒரு கட்டுரை தயாரிக்க வேண்டியிருந்தது. 'The History and the Culture of the Celtic People' எனும் ஆங்கில மொழிக் கட்டுரையை இதற்காகத் தயாரித்து அனுப்பியிருந்தேன். எனக்கு எதிர்பார்த்தபடி பல்கலைக்கழகப் படிப்பிற்கு அனுமதி கிடைத்ததும், அதற்காகிய பணத்தைக் கணவர் கட்டியிருந்தார். இதனைத் தொடர்ந்து நான் அயர்லாந்திற்கு 1996ஆம் ஆண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயணித்துப் பல்கலைக்கழகத்திலும் இணைந்துகொண்டேன். பின் அங்கிருந்து ஒரு மாத காலத்திற்குள் ஒரு கப்பல்மூலம் பயணித்து லண்டன் துறைமுகத்தையடைகையில், கணவர் காத்திருந்து அழைத்துச் சென்றார். இங்கு வந்ததும் தங்கிய விடுதிக்கு நான் லண்டனுக்கு வந்துவிட்டதாக அறிவித்திருந்தேன். பின்னர் லண்டனில் அகதியாகப் பதிவு செய்துகொண்டேன். குடும்பத்துடன் இணையும் மனிதாபிமான செயற்பாடு ஆகையினால் லண்டனில் எல்லாமே மனிதநேய அடிப்படையில் சட்டங்கள் சீர்தூக்கப்பட்டன. இவ்வாறு மேலைநாட்டார் 1ஆம், 2ஆம் உலகப்போரின் பாரதூரமான உயிரழிவுகளின்பின் மனிதநேயத்தினை நிறம், இனம் மொழிகளுக்கப்பால் வளர்த்திடும் நாடுகளாகவே பண்பட்டிருந்தன. கடவுளின் அறக்கோட்பாடு களை வளர்க்கப் பணிபுரியும் மக்களாகவே இவர்களை, இவர்கள் சீர்தூக்கும் சமூகப்பணிகளைக் கொண்டு கணிக்கலாயினேன். நாகரிகம், பண்பாடு எனும் சொற்கள் பகட்டான ஆடை, அலங்காரங்களைக் குறிப்பதன்று. மாறாக, மக்களின் நலன் கருதிப் பணிபுரியும் ஒரு சமூகமே பண்பாடான, நாகரிகம் கொண்ட சொற்களை பொருளுடைத்தாக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9

# குடும்ப வாழ்க்கை மீண்டும் ஆரம்பமாகல்

குடும்பம் என்பது ஒரு சமூகத்தின் சிறிய அலகாகும். தனி மனிதனாகச் செயற்படுகையில், ஒருவன் பல திறப்பட்ட மனிதர்களுடன் உறவாடி உதவிகளை வழங்கியும், உதவிகளைப் பெற்றும் வாழும் வாழ்வின் முழுமைத் தன்மையினை அவன் இழந்துபோகின்றான். ஆனால் குடும்பம் எனும் உறவுகள் கட்டி எழுப்பப்படும்பொழுது சேவைகள் பல திறத்தனவாகின்றன. முதலில் சேவைகள் குடும்ப நலனுக்கென உருவாகிப் பின் பரந்துபட்டுச் சமூக நலன், உலக சமுதாய நலன் என விரிவடைவது தவிர்க்க முடியாததாகும். மீண்டும் கட்டியெழுப்பப்பட்ட எம் குடும்ப வாழ்க்கை சுமுகமாக இயங்கத் தொடங்கியது. முற்றாகப் புதிய சூழல். லண்டன் மாநகரத்தின் கிழக்குப் பிராந்தியத்தில் கணவர் ஒரு வீட்டினை வாங்கியிருந்தார். அதனால் முன்பு போலன்றி சுதந்திரமான குடும்பவாழ்வு உருவாகியிருந்தது.

இரண்டாம் உலகப் போர் விட்டுச்சென்ற சுமைகளைக் கருதியும், குடியேற்ற நாடுகள் ஏகாதிபத்திய ஆட்சிக்கெதிராகப் போராட்டங்களை முன்னெடுத்தமையாலும், பெரிய பிரித்தானியா தன் குடியேற்ற நாடுகளுக்குச் சுதந்திர அரசுகளை உருவாக்கிவிட்டு வெளியேறியிருந்தது. ஆனால் இவர்கள் இந்நாடுகளில் வாழ்ந்து தமக்கெனக் கட்டியெழுப்பிய கலாசாரங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், ஒற்றையாட்சி போன்ற முறைமைகளில் ஒரு இனத்தை மற்ற இனம் கட்டியாளும் வகையில் ஆட்சியுரிமைகளைக் கையளித்துவிட்டு வெளியேறியிருந்தார்கள். இதுபோன்ற காரணிகளால் பாதிக்கப்பட்ட இனங்கள் அனைத்தும், பெரிய பிரித்தானியாவை நோக்கித் தஞ்சமடையலாயினர். இந்த வகையில் லண்டன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகரத்தின் பல பகுதிகள் இன்று ஆசியமக்கள், ஆபிரிக்க மக்கள் நிரம்பிய பகுதிகளாக உருவாகலாயின. இவ்வாறு பல்லினக் கலாசாரத்தின் மத்தியில் அனைத்து இனமக்களும் பாகுபாடின்றி தத்தம் குடும்ப வாழ்வுகளை ஒட்டி, தம்மினக் கலாசாரங்களையும் சிறப்பாக வளர்த்துப் பெருமையடைகின்றார்கள் எனில் மிகையாகாது. புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்களும் சிறப்பான முறையில் இன ஒற்றுமைகளைப் பேணிவரும் நிலையில், நாமும் இச்சமூகங்களின் ஒரு துளியேயாம்.

எனக்குப் படிப்பு, பட்டம், பதவிகள் பற்றிய அனுபவங்கள் இருந்தாலும், புதிய சூழலில் எனக்குப் பயிற்சிகள் அவசிமாய் இருந்தன. அதுவும் தற்செயலாக இடம்பெற்ற நிகழ்ச்சியொன்றே ஏற்படுத்தியிருந்தது. நானும் திருமதி. தேவமணி, செந்தில்நாதனும் பொருட்கள் கொள்வனவிற்காக ஈஸ்ட்ஹாம் கடைவீதியூடாகச் செல்கையில், ஒருவர் ஒரு துண்டுப்பிரசுரத்தைக் கொடுத்திருந்தார். அதில், கணினி வகுப்புகள், மற்றும் புதுமுக வகுப்புகள் இலவசமாக நடைபெறுகின்றன எனும் தகவல்கள் இருந்தன. எனக்குக் கிடைத்த இப்புதிய துறைகளை அலட்சியம் செய்ய விரும்பவில்லை. முதலில் கணினி வகுப்புகளுக்குச் சென்று பயிற்சி பெற்றேன். பின் புதுமுகங்களுக்கான பயிற்சி வகுப்புகள் நடாத்தியவர்கள் என்னைவிடப் பாதி வயதினரைக் கொண்டவராவர். இந்த ஆசிரியைகள் திருமதி. பிரபுலா வட்கம, செல்வி. ஜஸ்பீர் பனேசர் எனும் வட இந்தியப் பெண்மணிகளே ஆவர்.

இந்த இரண்டு வகையான பயிற்சிப்பட்டறைகள் அனைத்தும் என்னைச் சமூகங்களுடன் உறவாட இலகுவாக்கியிருந்தன என்பது என் அனுபவமாகும். இவ்வாறான மொழிப்பேச்சுப் பயிற்சிகளைப் பெற்றபின்* நியூஹாம் மொழிபெயர்ப்பு திணைக்களத்தில் (Newham Language Shop) மொழிபெயர்ப்பாளராக இணைந்து ஆறுவருடங்கள் வரை

---

* மொழிப்பயிற்சி எழுதவும், பேசவும் அவசியம். ஏனெனில் பேசுபவர்கள் அனைவரும் அதனை எழுதமாட்டார்கள். அதுபோலவே எழுதுபவர்கள் அனைவரும் பயிற்சியில்லாமல் பேசமாட்டார்கள் என்பதே உண்மை. நான் மிகவும் ஆங்கிலத்தில் பேசிய காலம் இந்த மொழிபெயர்ப்புக் காலத்திலேயாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியாற்றியிருந்தேன். இத்தொழில் முற்றாக கண்ணியமாகச் செய்ய வேண்டியதொன்றாகும். ஆனால் ஈழத்திலிருந்து குடிபெயர்ந்த மக்கள் பல்வேறுபட்ட பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்திருந்தனர். அதனால் சில சமயங்களில் தனிப்பட்ட முறையில் உரையாடல்கள் இடம்பெறுதல் தவிர்க்க முடியாததாகும். கடைசியாக நான் இவ்வேலையைக் கைவிட நேர்ந்த சம்பவத்தினை இங்குக் குறிப்பிடல் ஏற்றதாகும். ஒரு இளம் குடும்பம். 3 சிறிய பிள்ளைகள். கணவர் வேறுநாட்டுப் பெண் ஒருவருடன் ஒரு வருடமாகக் கூடிவாழ்ந்திருந்தார். அதனால் குடும்பப்பெண் சமூக சேவையினருக்கு அறிவித்திருந்த நிலையில், இக்குடும்பத் தலைவியும் பிள்ளைகளும் தனியாக வாழ அனுமதிக்கப்பட்டு கண்காணிக்கப்பட்டிருந்தாலும், பிள்ளைகளைச் சந்திக்க தந்தை அனுமதிக்கப்பட்டிருந்தான்.

இவ்வாறு இவர்கள் சந்திக்கும் காலத்தில் ஒருமுறை கணவன், மனைவியை கழுத்தைப் பிடித்துத் தள்ளி விழுத்தியதோடு, இனி சமூகசேவைக்குப் புகார் செய்யின், தான் ஒரு கைத்துப்பாக்கி வாங்கிவைத்திருப்பதாகவும், அதனால் மனைவியையும், பிள்ளைகளையும் சுடுவேன் என்றும் கூறியிருந்தான்.

இப்பெண்ணுக்கு மொழிபெயர்ப்பு வேலைகள் ஆரம்பமாகும் முன்னரே, ஏற்கனவே நடைபெற்றவற்றின் அறிக்கைகளை வாசித்து விளக்கம் கொடுக்கும்படி ஒரு அறையில் இருவரும் விடப்பட்டோம். அப்பொழுது மேற்குறிப்பிட்ட சம்பவத்தைக் கூறிவிட்டு, என்னை அதிகாரிகளுக்குச் சொல்ல வேண்டாம் என்றும் கேட்டிருந்தாள். ஆனால் நான் அதனை ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது. காரணம், நான்கு உயிர்களின் பாதுகாப்புச் சம்பந்தமான விடயமாக இருந்தது. அதனால் விசாரணைக்குத் தலைமை தாங்கும் பெண் உத்தியோகத்தர், அறைக்குள் வந்ததும் இச்செய்தியைத் தெரிவித்தேன். அவரும் இவ்விடயம் பாரதூரமானது என்று கருதி, அமர்ந்திருந்த குழுவினரிடம் தெரிவித்து, ஊர்க்காவலர்க்கும் அறிவித்து பெண்ணுக்கும் பிள்ளைகளுக்கும் பாதுகாப்பை ஏற்படுத்தியிருந்தார்கள். ஆனால், ஊர்க்காவலர் விசாரணையின்பொழுது, அப்பெண் என்மீது பழியினைச் சுமத்தியிருந்தாள். அப்பொழுது தொலைபேசி மூலம் நியூஹாம் மொழித்திணைக்களத்திலிருந்து ஒரு பெண் அதிகாரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னிடம் இதுபற்றி விசாரித்தார். அதற்கு, "அந்தப் பெண்ணிற்கும், பிள்ளைகளுக்கும் பாதுகாப்பு வேண்டியே என் செயற்பாடு அமைந்தது. இச்சூழலில் நான் இத்தொழிலைத் தொடரமாட்டேன்" என்று கூறியபின், மொழிப்பெயர்ப்பு வேலைக்கு முழுக்குப் போட்டிருந்தேன். ஆனால் இத்தொழிலால் சுயமாக இயங்குவதற்கான வருமானம் மட்டுமன்றி, குறைந்தது எட்டு பரோக்களுக்கு (Borough - மாவட்டப் பிரிவுகள்) பயணித்து குறிப்பிட்ட இடத்தினை வரைபடங்கள் தயாரித்துக்கொண்டு சென்றடையும் அனுபவம், மற்று எம் சமூகத்தின் பல்வேறுபட்ட பிரச்சனைகளையும் நான் அறியமுடிந்தது. எனவே, குடும்பங்கள் சமூகமாக வளர்வதில் ஏற்படுகின்ற நன்மைகளும், தீமைகளும் பின்னிப்பிணையப்பட்டவை என்பதும், இவற்றிலிருந்து எவராவது, புறநடையினராக வாழ்ந்திருக்க முடியாது என்பதும் நிரூபிக்கப்பட்ட உண்மைகளாம். சிலருக்குத் துறவு வாழ்க்கையேற் படவும் இவை சில சமயம் துணைபோகியுள்ளன என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு லண்டனில் தொழில் என்பதும் எனக்கு மிக இலகுவானதொன்றதாகவே இருந்தது. பல்கலைக்கழகத் தொழிலும் விரிவுரைகள் அதிகவேலைப்பளுவைத் தரும் வகையில் அமைவதில்லை. அதுபோலவே மொழிபெயர்ப்பும் பயணத்துடன், பலவேற்றின மக்களையும், எம்மின மக்களையும் தொடர்பு கொள்ளும் உரையாடல்களையே கொண்டிருந்ததும் குறிப்பிடத் தக்கது. ஆனாலும் நான் இந்த மொழிபெயர்ப்பு வேலையைக் கைவிடுவதற்கு, என்மீது சுமத்தப்பட்ட காரணம் முற்று முழுதாகத் தவறானது. ஏனெனில் பல சந்தர்ப்பங்களில் சமூகப் பணியாளர்கள் உரிய பாதுகாப்பு நடவடிக்கை எடுக்காததனால், ஏற்பட்ட பாதிப்புகளுக்கு, வேலை நிறுத்தம் செய்யப்பட்டது போன்ற செய்திகள் பற்றி நான் ஊடகங்கள் வாயிலாக அறிந்து, என் பாதுகாப்பு நடவடிக்கை சரியானதே என்பதனை ஏற்றுக் கொண்டிருந்தேன். எனினும் என் உளப்பாதிப்பை நீக்கு முகமாகவும், மறக்குமுகமாகவும், காசி, வாரணாசியூடாக வட - இந்திய தலயாத்திரை சென்ற குழுவினருடன், இணைந்து தரிசித்துக்கொண்டு மீண்டும் புதிய வாழ்க்கையினை ஆரம்பிக்கலானேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10

# மீண்டும் எழுத்துப்பணிகள் தீவிரமடைந்தன

**மொ**ழிபெயர்ப்புச் செய்த காலத்தில் எனக்கு மணிமேகலைப் பிரசுரத்தாரின் அறிமுகம் ஏற்பட்டிருந்தது. அதனால் 2001ஆம் ஆண்டு முதலாக என் பரிசுபெற்ற நூல்களை மறுபதிப்புச் செய்து கொண்டதோடு, வெவ்வேறு சமய இதழ்களில் வெளியாகிய கட்டுரைகளைப் 'பின்பற்றப்பட வேண்டிய சைவ, சமய தத்துவங்கள்' எனும் நூலாகவும் தொகுத்து வெளியிட்டிருந்தேன். ஆனால், மீண்டும் 2008 ஆம் ஆண்டு முதல், முழுமையாக எழுத்துத்துறை தலைதூக்கி நிற்கலாயிற்று. நான் செய்த தொழில்களில் வருவாய் இல்லாத துறையாக இருப்பினும், எழுத்துத் துறையையே நான் முதன்மையாகக் கருதுகின்றேன். பொதுவாக சிறுகதை, நாவல், கவிதை இலக்கியங்களை யாப்பவர்கள் கண்களாற் கண்டவற்றை, கேள்விப்பட்டவற்றை மட்டுமன்றி கேள்விப்படாத, காணாதவற்றிற்கே தம் சிந்தனா சக்தியைப் பல்வேறு திசைகளிலும் ஓடவிட்டு தம் எழுத்துகளுக்கு உயிர்கொடுப்பர்.

சினிமாத்துறை உருவாகிய பின் கவிஞர் கண்ணதாசன், கவிஞர் வாலி, கவிஞர் அறிவுமதி, கவிஞர் கவிப்பேரரசு வைரமுத்து முதலானோர் கவிதைகளில் காதல் உணர்வானது உளம், உடல்களையெல்லாம் ஊடறுத்து எலும்புகள் வரை பாய்ந்தோடுவனவாம். இப்பாடல்களுக்கு மேலும் உயிர் கொடுப்பவர்கள் நூற்றுக்கணக்கான இளம்வயதினரான ஆண்களும் பெண்களுமே ஆவர். இவர்கள் முன்பின் தெரியாத நடிகர்களானாலும், பாடல் குறிப்பிடும் உணர்வுகளைத் தமதாக்கி நடித்தே பணமுட்டைகளைப் பெற்றபின், அனைத்தும் கனவாகவோ அல்லது கானல்நீராகவோ ஓடவிட்டு விடுவர் என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதலாம். ஆனால், அவற்றைப் பார்க்கும் ரசிகப்பெருமக்களுக்கு இவர்கள் எப்படி உணர்வுகளைப் புடம்போட்டுக் காட்டுகிறார்கள் என்பது அதிசயத்தின் மேல் அதிசயமாகவே தென்படும். இனி, இவற்றை ரசிக்கவே இன்றைய மக்கள் கூட்டம் முண்டியடிப்பர்.

ஆனால் என்னுடைய எழுத்துத்துறையின் கதை முற்றிலும் எதிரானது. குறிப்பாகத் தமிழ்மக்கள் விரும்பாததும், கைவிட்டதுமாகும். வரலாறு என்பது நாம் இன்றைய வாழ்க்கையை எட்ட எம் முன்னோர் எடுத்திருந்த நடவடிக்கைகள், பாரம்பரியமுறைகள் எவ்வாறு எம்மை வழிநடத்தியிருந்தன என்பதனைச் சற்று பின்னோக்கிப் பார்த்து பெருமையடைய வைப்பதாகும். எம் முன்னோர் தம் கருத்துகளை, வாழ்க்கை முறைகளை எழுதிவைக்க முயன்ற காலம் முதலாக, எமக்கு வரலாறுகள் பதிவாகத் தொடங்கின. ஆனால் எழுத்துமுறைகளுக்குமுன் எப்படி வாழ்ந்தார்கள், அவர்களின் செயற்பாடுகள் என்னவாக இருந்தன என்பவற்றைக் கண்டுள்ள மேலைத் தேசத்தவர்கள் அதிக ஈடுபாடு கொண்டவர்கள் ஆவர். அதற்காக அவர்கள் உருவாக்கிய துறையே தொல்லியற் துறையாகும். தொல்லியற்துறை மூலம் பல இனமக்களின் வரலாறுகள் தெளிவாக்கப்படலாயின. மக்கள் பொதுவாக ஓரிடத்திலே நிலையாக வாழ்ந்ததாக வரலாறு இல்லை. எப்பொழுதும் நல்ல வாழ்க்கையினைக் கட்டியெழுப்புவதற்காக புலம்பெயர்கையில், மற்றோர் சமூகம் அவ்விடத்தில் வந்து குடியமர்கையில் அவர்கள் கலாசாரப் பண்புகள் தனித்துவம் கொண்டவையாக இருக்கும். அன்றேல் குமரிக்கண்டம் கடற்கோள்களின்பொழுது, பெரும்பாலான பழம் பாண்டியர் வழிவந்த மக்கள் மத்தியதரைப் பிராந்தியம் வரை இந்துவெளி வரை புலம்பெயர்ந்து வாழ்கையில், தம் பண்பாடுகளைப் பாதுகாப்பான இப்பகுதிகளில் கட்டியெழுப்பியிருந்தார்கள் என்பது போன்ற வரலாறுகளையெல்லாம் வெளிச்சம் போட்டுக் காட்டுவது தொல்லியற்துறையேயாம். அதாவது மக்களின் பண்பாட்டுத் தடயங்கள் நிலத்தின் கீழ் பாதுகாக்கப்படுகின்றன. அதனால் மண்படைகளை மெதுவாகத் தோண்டிப் பொருட்களை அடையாளம் காண்பர். இவற்றுள் முக்கியமாக புதைகுழிகளான சவக்குழிகள் அதிக வரலாற்றுத் தடயங்களைத் தரவல்லன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீனாவில் கூட கொகேசியர் எனும் மேலைநாட்டு இனம் கடல் வழியாகச் சென்று குடியமர்ந்து வாழ்ந்ததற்கான சான்றுகளாக சவக்குழிகளே அடையாளம் காட்டியுள்ளன. (CCTV9 Documentary - Endless River.) இந்த ஆய்வின்படி புதைக்கப்பட்ட பெண்மணியின் முகம் அவளை கொகேசியன் இனத்தவள் எனப் புடம்போட்டுக் காட்டியிருந்தது. அதனோடு மனித இனம் பொதுவான சிந்தனைகளைக் கொண்டது என்பதனைக் காட்டும் வகையில் இச்சவச்குழிகளை அடையாளப்படுத்தும் வகையில் உயரிய மரத்தூண்கள் பதிக்கப் பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கதாம். இதுபோலவே உலகளாவிய அளவில் பெருங்கற் பண்பாட்டுத்தூண்கள் (Megalithic or Stonehenge) அமைக்கப்பட்டுள்ளமை ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட மனிதனின் வரலாற்றுச் சின்னங்களாக அவதானிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, இக்கற்றூண்களை எங்கிருந்து, எவ்வாறு கொண்டுவந்து சேர்த்தார்கள் என்பதும் கேள்விக்குறியாகவே இன்றுவரை உள்ளது. எகிப்திய பிரமிடுகளைப் பாரிய அளவில் கட்டி முடிக்கப் பாரிய மனிதவளம் சுகபோகங்களையிழந்து வாழ்ந்திருந்தது என்பதனை நாம் உணரலாம். அதுபோலவே இங்கும் மனிதர்களே பாரம்தூக்கிகளாகப் பயன்படுத்தப் பட்டிருக்கிறார்கள் என்றே கருதமுடிகின்றது. யந்திரக் கருவிகள், மின் கருவிகள் பரவலான பாவனையிலிருக்கின்ற 21 ஆம் நூற்றாண்டிலும் மனிதன் பாரம்தூக்கியாகத் தொழிற்படும் முறை நீடித்து வருகின்றது. இவற்றுள் சில தவிர்க்க முடியாதவையாகவும் காணப்படுகின்றன.

இவ்வாறு அன்றைய மனித வரலாறுகளை ஆய்வதில் பெரும் பயிற்சிகள் (களப்பயிற்சிகள்) எனக்கு இல்லாதிருந்தாலும், பூர்வீக வரலாறுகளைச் சான்றுகள் கொண்டு மீள்கட்டுமானப் பணியில் நான் பல வரலாறுகளைக் கட்டியெழுப்ப முயற்சி செய்து, வெற்றியும் கண்டிருக்கின்றேன். ஆனால் தமிழ்மக்களுக்கு இவை பற்றி இன்னும் ஈடுபாடில்லாதிருப்பது, கவலைக்குரிய விடயமாகும். மனிதன் கூட்டாகவோ அல்லது தனித்தோ சாதித்த அனைத்தும் நினைவுமலர்களாகக் காலத்தை வென்று நிற்கவேண்டுமென்பதில் ஆங்கிலேயர் மிக உறுதியாக உள்ளனர். ஒவ்வொரு இனமும் சாதனையாளர்களே. அவர்கள் இல்லாமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாமில்லை. எனவே, அவர்களைத் தேடும் முயற்சியிலேயே தொல்லியலாளர்கள் பணி அமைந்திருக்கின்றது.

இந்த வகையில் தமிழர் வரலாறுகளை ஆராய்ந்து, நூல்களை வெளியிட்டுத் திருப்தியடைந்திருக்கின்றேன். குறிப்பாக புனித விவிலிய வேதத்தில் பதிவாகிய பாண்டியர் வரலாறு, கலித்தொகை செய்யுள் (104) குறிப்பிட்ட வரலாறு, நக்கீரர் குறிப்பிட்ட தமிழ்ச்சங்கங்களும், கடற்கோள்களும், ஆண்டிருந்த மன்னர்கள் பற்றிய வரலாறுகள் (நக்கீரர் இறையனாகப்பொருள் உரை), சிலப்பதிகாரம் குறிப்பிடும் கடற்கோள்கள் அனைத்தும் கடந்தகால மனித வரலாறுகள் என்பதனைக் கடற்கோள் ஆய்வாளர் கிரகம் ஹன்கொக்கின் (Graham Hancock) ஆய்வுகள் உறுதி செய்துள்ளன. அதனோடு மனிதய இயல், மொழியியல், பண்பாட்டியல் அனைத்தும் தமிழினம் பரவி வாழ்ந்த இடங்களையும் அடையாளப்படுத்தியுள்ளன. இயைனைத்துமே என் எழுத்துத் துறையை வளர்த்துவிட்டிருந்தன எனில் மிகையாகாது. இவையனைத்தும் தமிழினத்தின் உண்மை வரலாறுகளை வலியுறுத்தி, அவர்கள் இழந்து நிற்கின்ற ஆட்சியுரிமைகளினால், மக்கள் அனுபவிக்கும் துயரங்களை என்றோ ஒருநாள் இறைவன் நீக்குவான் என நம்புவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11

# ஈழமக்கள் இழந்த உரிமைகளுக்காகக் குரல்கொடுப்போருக்கு நன்றி கூறி எழுதிய கடிதங்கள்

ஈழத்தமிழருக்காக இருபதுக்கு மேற்பட்ட தமிழக உணர்வாளர்கள் துயரத்தினைத் தாங்கிக்கொள்ள முடியாத நிலையில் தம் இன்னுயிர்களைத் தீயிற்கு ஆகுதியாக்கியிருந்தனர். இவர்கள் கையாண்ட ஆயுதம் கொள்வனவு செய்யாத ஆயுதமாகும். அதுதான் 'உயிர்' என்று நாம் கூறினாலும், அந்த உயிரை இன்றுவரை அடையாளம் கண்டாரில்லை. இப்படியான ஒரு புனிதமான ஆயுதத்தை ஏந்தித் தம் எதிர்ப்பை உலகிற்குப் பல்வேறு காலகட்டங்களில் அறிவுறுத்தியபொழுதும், இந்தியா உட்பட அனைத்து நாடுகளும் உதாசீனம் செய்திருந்தன. ஆசிரியருக்கு எவ்வாறு இவர்களுக்குக் கடிதம் எழுதி நன்றி கூறுவது என்று தெரியவில்லை. எனவே, அவர்களுக்கு நன்றி கூறுமுகமாகத் தன் நூல்களாகிய 'பிராணிகள் கூறும் அறிவியல் கதைகள்', 'கால ஆய்வில் சிக்கித் தவிக்கும் மாணிக்கசுவாமிகள்' எனும் நூல்களையும் இவர்களுக்காகச் சமர்ப்பணம் செய்திருந்தார்.* ஆனால் இவர்களை நாம் எவ்வளவோ

* திருவாளர்களான அப்துல் ரஹூப், முத்துக்குமார், ரவி, ரவிச்சந்திரன் சிவப்பிரகாசம், எழில்வளவன், முருகதாஸ், ராஜா, தமிழ்வேந்தன், கோகுலரத்தினம், ராஜசேகர், ஆனந்து, மாரிமுத்து, பாலசுந்தரம் மற்றும் செல்வி ரவீந்திரன் ஆகியோருக்கு 2009 ஆம் ஆண்டு வெளிவந்த பிராணிகள் கூறும் அறிவியல் கதைகள் எனும் நூலினையும், சேலத்து விஜயராஜ், மற்றும் நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளரான இளமணி ஆகியோருக்கு 2013 இல் வெளியாகிய மேற்குறிப்பிட்ட நூலினையும் சமர்ப்பணம் செய்து நினைவுகூர்ந்தார். இத்தகைய தியாகிகளைத் தமிழினம் நினைவில் தொடர்ந்தும் வைத்திருக்க வேண்டும் என்பதும் ஒவ்வொரு ஈழத்தமிழனதும் தலையாய கடமையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்ந்தவர்களாகப் பாராட்டினாலும், அவர்கள் தத்தம் குடும்பங்களுக்கு விட்டுச் சென்ற துயரங்களை நாம் எழுத்தால் விவரிக்க முடியாது.

காலப்போக்கில் இவற்றை உணர்ந்த தமிழக மக்கள் பலவழிகளிலும் அறவழிப் போராட்டங்களை முன்னெடுத்திருந் தார்கள். ஆயினும் தோழர். தியாகு உயிரைப் பணயம் வைத்து தெய்வாதீனமாகப் பிழைத்துக்கொண்டனர். நீதிமானாகிய வை.கோ. அவர்கள் பல்வேறு அறவழிப் போராட்டங்களில் தன் கட்சியினருடன் சேர்ந்து உடற்துன்பங்களை அனுபவித்தார். அதனால் துயரம் தரும் போராட்டங்களுக்கு ஈழத்தமிழர் சார்பில் நன்றி கூறல் அவசியம் என்பதனால் இவர்களுக்கும், வேறு திரு. பழ. நெடுமாறன் (உலகத் தமிழர் தலைவர்), பேராசிரியர் சுபவீரபாண்டியன், மறவன்புலவு க. சச்சிதானந்தன், மணிமேகலைப் பதிப்பக உரிமையாளர் திரு. ரவி தமிழ்வாணன் ஆகியோருக்கும் நன்றி கூறியும், பாராட்டியும் கடிதங்கள் எழுதப்பட்டன. இவை தவிர ஈழத்தமிழர் வைகாசி 2009 வரை அனுபவித்த கொலைக்களங்களின் பாதிப்பினால் அல்லல் படுவதனை மனிதநேயக்கண்களுடன் யாழ்குடா சென்று திரும்பிய பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூனுக்கும், இப்படியானதொரு அவலத்திலிருந்து ஈழத்தமிழரைக் காப்பாற்ற எடுத்த பல்வேறுபட்ட அரசியல் நடவடிக்கைகளுக்காகவும் கனடியப் பிரதமர் ஸ்ரீபன் ஹார்பருக்கும், மற்றும் மொரிசியஸ் நாட்டுப் பிரதமர் ஈழத்தமிழருக்காகக் காட்டிய ஆதரவிற்காகவும் கடிதங்கள் நன்றி கூறி எழுதப்படலாயின.

பின் பிரதமர் டேவிட் கமரூன் அவர்களுக்கும், பிரதமர் ஸ்ரீபன் ஹார்பர் அவர்களுக்கும் எழுதிய கடிதங்களின் பிரதிகளை நூல் வடிவில் தயாரித்து, உலகின் பல்வேறுபட்ட நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களுக்கும் அனுப்பிவைத்தலும் முக்கிய கடமையாக ஏற்றுச் செயற்படவேண்டியிருந்தது. இக்கடிதங்களில், சிங்களவர் எப்பொழுது ஈழத்தின் கரையைச் சேர்ந்தார்கள்? அன்றுமுதல் (கி.மு. 543) அவர்கள் செய்துவந்த கொலைக்களங்கள் என்பன விவரிக்கப்பட்டிருந்தன. கடற்கோள்கள் ஆட்சிகளைக் கடலுக்கிரையாக்கிவிட்ட நிலையில் பாண்டியர் வடமதுரையில் புதிய அரசையேற்படுத்திக்கொண்டு ஈழத்தை முற்றாகக் கைவிட்டிருந்தனர். பின், சிங்கள அரசுகளின் கெடுபிடிகளிலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தமிழரைக் காப்பாற்றத் தமிழக அரசுகள் தலையீடுகள் ஏற்பட்டாலும், முழுமையாக விடுவிக்க முடியாத நிலையொன்று உறுதியாக இருந்தது. பின், ஆங்கிலேயர் தமிழரின் ஆட்சி அரசுகளை இணைத்து ஆண்டபின் தமிழரின் ஆட்சி நிலங்களையும் ஒற்றையாட்சி முறையில் கையளித்துவிட்டுச் சென்றதனால், இன்றுவரை தமிழர்கள் தம் பூர்வீக மண்ணிலேயே அடிமைகளாக்கப்பட்டமை போன்ற அனைத்து விடயங்களும் இக்கடிதங்களில் எளிமைப்படுத்தப்பட்டிருந்தன. பின் இவையனைத்தும் 'தமிழும், ஈழமும் கடந்துவந்த வரலாற்றுச் சோதனைகள்' எனும் நூலில் தொகுத்தளித்தமை, என் ஈனக்குரலின் மாற்று வடிவமே. மிருகங்களே தம்மைப் பராமரிப்பவரைக் காப்பாற்றும் வகையில் உயிர் ஆபத்தைக் கணக்கெடுக்காமல் விரைந்து சென்று காப்பாற்றி வருகின்றன. எடுத்துக்காட்டாக ஒஹியோ (Ohio) எனும் அமெரிக்க மாகாணத்தைச் சேர்ந்த ஒருவர் தன் வளர்ப்பு நாயுடன் நீர்த்தடாகத்திற்குள் குளிக்கையில், அவர் தூரம் சென்று திரும்ப முடியாமல் தவித்தார். நாய் பாதிவழியில் திரும்பியிருந்தது. இந்நிலையில் அந்த மனிதர் ஆபத்து சேவைக்கு தொலைபேசியில் அறிவித்திருந்தார். அப்பொழுது அங்கு வந்த பணியாளர்கள் தாம் குளத்திற்குள் சென்றால் உயிர் ஆபத்து நிச்சயம் என உணர்ந்து, அவரது நாயின் கழுத்தில் கயிறு ஒன்றினைக் கட்டி அனுப்பினார்கள். அப்பொழுது நாய் நன்றியுடன் நீந்திச்சென்று அவரிடம் கயிற்றினைச் சேர்த்து, அவரை மீண்டும் கரைக்கு வர வழிவகுத்தது. (டான் செய்தி பத்திரிகைகள் ஓர் பார்வை, *5.4.2015)* எனும் செய்தி, மிருகங்களின் நன்றியுணர்வுப் பண்பானது, அளப்பரியது என்பதனை உறுதி செய்கின்றதெனலாம். ஆனால் மனிதனோ ஆதரவு வழங்கிய மனிதனுக்கே எதிரியாகவே வாழ்ந்து வருபவன். மனிதன் அடுத்தவன் நிலங்களைக் கொள்ளையடிக்க இதுகாலவரை செய்துவந்த போர்க்களங்களோ எண்ணுக் கணக்கற்றவை. அவையனைத்தையும் பூமி பொறுமை யுடன் தாங்குவதும், கொந்தளிப்பதும், கடலிற்குள் மூழ்கி அடையாளங் களை இழந்து நிற்பதும் பூமியின் துயரக்கதைகளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12

## சமயங்கள் பற்றிய என் பார்வை

மனிதன் பகுத்தறிவு எனும் ஆறாவது அறிவுடன் பிறந்ததனால் அதுவே அவன் பகையாளியாகவும் படையெடுக்க லாயிற்று. பகுத்தறிவற்ற விலங்குகள் இயற்கையுடன் இணைந்து அமைதியாக வாழ்கையில், மனிதன் பகுத்தறிவினைக் கொண்டு நாடு, நகரங்களை அமைத்து வாழமுற்பட்டான். இந்நிலையில் ஒவ்வொரு இனத்திற்கும் மன்னர் ஆட்சிகள் உருவாகும் நிலையும், பாமர மக்கள் அவனுக்குச் சேவைபுரிபவர்களாகவும் மாறலாயினர். இத்தகைய சுகபோக வாழ்வுடன் திருப்தி யடையாமல் பேரரசனாக உருவாகி நாடுகளைக் கட்டியாளவும், தன் நாட்டின் பாதுகாப்பிற்காகவும் மன்னர்கள் அரண்களையும், படைகளையும் வைத்திருந்தனர். இதனைப் பொதுமறையான திருக்குறளே பதிவு செய்துள்ளது. இதனைத் தொடர்ந்து இடம்பெறும் நட்பியலில் மனிதத்துவம் பற்றிய கருத்துகளும் இடம்பெற்றுள்ளன.

இப்படியான வழிகளில் மனிதன் பண்பற்றுச் சென்று போரிட்டுக் கொன்றுகுவித்த மனித இனங்களின் வரலாறுகள் மனிதனின் கொடூர கோரமுகங்களின் பதிவுகளாகும். இத்தகைய மனிதனை நெறிப்படுத்துவதற்குச் சமயங்கள் அறங்களை நீதிகளை சமாதான வழிகளை அறிவுறுத்தவல்லனவாக இருத்தல் அவசியம். ஆனால், வரலாற்றில் ஒரே ஒரு தடவை மட்டும் இத்தகைய மனமாற்றமொன்று இடம்பெற்றிருந்ததாகத் தெரிகின்றது. அதாவது இந்திய மன்னனான அசோகச் சக்கரவர்த்தி கலிங்க அரசினைக் கைப்பற்ற ஒரு லட்சம் கலிங்க வீரர்களைக் கொன்றபின் 'ஒரு ஆட்சி நிலத்திற்காக இவ்வளவு வீரர்களைக் கொன்றேனே' என்று மனங்கலங்கினான். முடிவில் வாழ்க்கையின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறக்கோட்பாடுகளை வலியுறுத்திய பௌத்த மதத்தினைத் தழுவி, அதனை அயல்நாடுகளுக்குப் பரப்பும் முயற்சியில் ஈடுபட்டிருந்தான். அதனாலே ஆப்கானிஸ்தான், சீனா, யப்பான், இலங்கை வரை பௌத்தம் அறிமுகமாகியிருந்தது. இதுதவிர, இந்தியாவில் பிராமணியம் போர் வெற்றிக்காகவும், நாடுகளைக் கைப்பற்றுவதற்காகவும் அசுவமேதயாகம் முதலான வேள்வி களைச் செய்யும்படி மன்னர்களைத் தூண்டிவந்திருந்தது. இஸ்லாமிய மதம் உருவாகிய காலத்திலேயே நாடுகள்மீது படையெடுத்து மக்களை வலிந்து மதமாற்றம் செய்த ஒரு மதமாக வரலாறுகள் தெரிவிக்கின்றன.* யூத இனப்படுகொலை நடாத்திய ஹிட்லர் ஒரு கிறித்தவன். இவ்வாறே பௌத்தர்களான சிங்கள அரசியல்வாதிகளும், *1956, 1977, 1983, 1990* முதலான ஆண்டுகளில் ஈழத்தமிழினப் படுகொலையைச் செய்து *2009* ஆம் ஆண்டில் நிறைவேற்றிக் கொண்டனர். எனவே, இவர்கள் அனைவரும் சமயங்களினடிப்படையிலேயே கொலைகளைச் செய்தவர்கள் ஆவர். எனவே, மதங்களின் புனிதங்கள் கொலையாளிகளினால் தூய்மையற்றுப் போயுள்ளன என்பதே என் கருத்தாகும். இவர்கள் அனைவரும் பிரபஞ்சத்தினைக் கோடிக்கணக்கான ஆண்டு நியதி தவறாது இயக்கிவரும் பரம்பொருளுக்கும் எதிரிகளே என்பதும் புலனாம்.

## சமயங்களின் உருவாக்கங்கள் கூறுவதென்ன?

இன்று மக்களை உலகளாவிய அளவில் வழிநடத்தி வருகின்ற சைவம், யூதம், கிறித்தவம், இஸ்லாம் எல்லாம் இறை அனுபவத்தின் வெளிப்பாடுகளே. எனவே, இறையனுபவம் பெற்ற மனிதர்கள் இறைவனைப் பிறரும் அனுபவித்துய்ய வேண்டுமென்ற உயரிய நோக்கத்துடன் சமயங்களை உருவாக்கி மக்களை வழிநடத்தலாயினர். அப்பொழுது கடவுள் ஒருவர் இருப்பின் அவரை அனுபவிக்கலாம் என்று நெறிப்படுத்தியவர்கள், அவர் பெயர், உருவம் எப்படியெல்லாம்

---

* மேலும் விவரங்களுக்குப் பார்க்க, தனபாக்கியம் குணபாலசிங்கம், ஆசிய, ஆப்பிரிக்க, ஐரோப்பிய இனங்களின் தனித்துவமான வரலாறு, பாகம் 1, 2009, பக். 40 - 42.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்குமென விவரித்தார்கள் இல்லை. ஏனெனில் இவர்கள் அனைவரும் சுட்டிறந்த, வரையறைக்கப்பாற்பட்ட கடவுளின் இருப்பையே உணர்ந்தவர்கள் ஆவர். அதனாலே 'கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர்' எனும் பழமொழியும் தமிழில் உருவாகலாயிற்று. ஆனாலும் அறம் குன்றிய நிலையில் மக்களை வழிநடத்த இறைவன் காலந்தோறும் தெய்வீக அம்சங்கள் கொண்ட அவதாரங்களைத் தோற்றுவித்து வழிநடத்தி வருகின்றார் என்பதனையே சமயங்கள் முக்கிய குறிக்கோளாகக் கொண்டவையாம். இவ்வாறான அவதாரங்களில் சிவனும், முருகனும் தமிழர் வாழ்வினை நெறிப்படுத்தியோராவர். இவ்விதமே இயேசுநாதர் யூதமக்களை நெறிப்படுத்தியிருந்தார். கிறித்தவ மதத்தினைத் தொடர்ந்து உருவாகிய இஸ்லாம் மதத்தினை அல்லா அறிவுறுத்திய குர்ஆனின் கோட்பாட்டின்படி முகம்மது நபி நிறுவினார்.

இவ்வாறு வெவ்வேறு கால, தேச சூழலுக்கு ஏற்ற வகையில் மதங்கள் உருவாகியதனால் இறைவனையிட்டுப் போட்டி பூசல்கள் இடம்பெறுவது இயல்பாகிவிட்டது. உண்மையில், "எல்லாம் அறிபவரும், எங்கும் வியாபகமாய் இருப்பவரும், எல்லாம் வல்லவருமான இறைவன் ஒருவனே" என்னும் உண்மையை மதங்களுக்கு அப்பாற்பட்டு வாழும் யோகியரே அனுபவித்துக் கண்டனர். புத்தரும், சமணமத தீர்த்தங்கரரும் கடவுளை அனுபவிக்காவிடினும், மனிதனின் வாழ்க்கை நெறிகளை ஆன்ம ஈடேற்றத்திற்குரிய வழிகளில் போதித்தவர் ஆவர். குறிப்பாக, சமணர்கள் சிறு உயிர்கூட மனிதனால் சாகடிக்கக்கூடாது என்பதற்காக பல துறவறக் கோட்பாடுகளை ஏற்றிருந்தார்கள். ஆனால், அவை அன்றாட வாழ்வில் மக்களால் நடைமுறைப்படுத்த முடியாத நிலையில் சமூக வாழ்விற்கு ஒரு சவாலாக அமைந்ததனால் பெருமதமாக வளரவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறு மதங்களால் எல்லையிட்டுக் காட்டப்படுகின்ற இறைவன் எல்லா மதங்களுக்கும் அப்பாற்பட்ட பரம்பொருள் என்பதனை ஆன்மீக வாழ்வில் பக்குவப்பட்டவர்களே உணர்வர். இந்தக் கோட்பாட்டின் அடிப்படையிலேயே எல்லா மதங்களையும் ஏற்கும் நிலை எனக்கும் உருவாகியிருந்தமையும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுளின் இருப்பை நாம் உணர்வதற்கு முதலில் நாம் அவன் படைப்பான அனைத்து உயிர்களிலும் அன்புகாட்டடல் அவசியம். மற்று, இறைவனைப் போற்றி மக்களை நெறிப்படுத்துகின்ற அனைத்து மதங்களையும், இறைவனது அருள்நெறி வழிவந்த மதங்களாகவே அன்புக் கண்கொண்டு பார்த்துப் போற்றி ஏற்றிட வேண்டும். எந்த மதத்தினை ஏற்றிருந்தாலும் எமக்கருளப்பட்ட இறைமொழி தமிழாகும். கிறித்தவர்களும், இஸ்லாமியரும் பக்தி மீதுரப்பெற்ற நிலையில் இறைவனைத் தமிழிலேயே போற்றி மகிழ்வது போல, சைவர்களும் தம் தாய்மொழியான தமிழிலேயே பாடிப் போற்றி பக்திப் பரவசமாவதும் அவசியமாம். பொருள் புரிந்துகொள்ள முடியாத வடமொழியைக் கேட்டு தெய்வீக நிலைகளை ஊடுருவிப் பார்க்க முடியாத உண்மைகளை உணர்ந்து, தமிழில் அவனைப் போற்றி மகிழல் மேன்மை தரும். அப்பொழுது இயல்பாகத் துளிர்விடும் பக்தியுணர்வு என்பது அனைத்து மக்களையும், மதங்களையும் அன்புக் கண்கொண்டு 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' எனப் பார்த்து மகிழவைக்கும்.


இறுதியாக முதுமையிலும் தமிழ்ச்சமூக நலனுக்காக நான் எழுதியிருந்தேன் என்றால், அது அந்தப் பரம்பொருளின் தூண்டுதலினாலேயாம். மூளையின் செயற்பாடுகள் குறைகின்ற முதுமையிலும் என் எழுத்துப்பணி தொடர்ந்ததென்றால், அதுவும், "அவனின்றி அணுவும் அசையாது" எனும் அடிப்படையிலேயாம். எனவே, ஒவ்வொரு மனிதனும் தன்னுள் உறையும் இறைவனின் தெய்வீகக் கண்களைக்கொண்டு உலகமக்களை இறைபிள்ளை களாக ஏற்றுப் பணிபுரியக் கடமைப்பட்டுள்ளார்கள். அதுவே மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரினும் கடமையுமாகும். இதனையே "யாதும் ஊரே யாவரும் கேளிர்" எனப் புறநானூற்றுப் புலவரும் (செய். 192) கூறியிருந்தார். இக்கோட்பாட்டினையுடைய தமிழ்ச்சான்றோர் "வந்தாரை வாழவைத்து, தம்மண்ணையேயிழந்து போயினர்" என்பது மனிதனின் நன்றிகெட்ட செயற்பாடுகளையே எடுத்துரைக் கின்றன. சிங்கள அரசுகள் ஏற்படுத்திய கொலைக்களங்கள் அவர்களுக்கு நற்சான்றுகளையோ அல்லது பாராட்டுகளையோ வழங்கவில்லை. மாறாகத் தமிழரின் பூர்வீக வரலாறுகளைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னோக்கிப் பார்க்கவைத்ததோடு, மனித வரலாற்றில் இவர்கள் கறைபடிந்த வரலாறு ஒன்றினையே தொடர்ந்தும் பதிவு செய்து வந்துள்ளார்கள் என்பதனை உலகறியச் செய்துள்ளார்கள். எனவே, நீதியின்வழி தமிழ்ச்சமூகம் மிளிர்ந்து தமிழின் பெருமையை என்றென்றும் நிலைநாட்ட வேண்டுமென்ற கோரிக்கையுடன் என் வரலாற்று நினைவு மலரினை நிறைவுபெறச் செய்கின்றேன்.

செந்தமிழே உலகெங்கும் உயரப்பறந்து புகழ்மொழியாய்த்
திகழ்ந்திட வாழ்த்துகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13

# ஈழத் தமிழ்மக்களின் பூர்வீகமண் உரிமைகளையிழந்து அடிமைகளாகிய வரலாறுகளை உலகத் தலைவர்களுக்கு அறிவுறுத்தி, நீதிகோரி எழுதிய கடிதங்களும், பதில்களும்

1. பிரித்தானிய பிரதமருக்கு, யாழ்குடா சென்று போரினால் வாழ்வினையிழந்து நிற்கும் மக்களைத் துயரத்துடன் பேசி, ஆறுதல் கூறியமைக்காகவும், சிங்கள அரசிற்குத் தனது அதிருப்தியை வெளியிட்டமைக்காகவும் நன்றி கூறியதோடு, இம்மக்கள் அனுபவித்துவரும் துயரங்களைக் களைவதற்குரிய பொறுப்பினைப் பிரித்தானிய அரசே ஏற்கவேண்டும் என்பதனையும் வலியுறுத்திய கடிதமும், அவரால் அனுப்பப்பட்ட பதிலும் (17 டிசம்பர் 2013) பக்கம் 98-இல் இடம்பெற்றுள்ளது.

2. இதனைத் தொடர்ந்து கனடிய பிரதமருக்கும், அவரது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், அவர்கள் ஈழத்தமிழ்மக்கள் பல்வேறு வழிகளில் அகதிகளாக்கப்பட்ட நிலையில், அவர்களை ஆதரித்துக் கௌரவமான கனடிய மக்களாக உள்வாங்கியமைக்காக நன்றி கூறி எழுதப்பட்ட கடிதத்திற்கு வந்த பதில் (ஏப்ரல் 9, 2015). இதுவும் முற்குறிப்பிட்ட நூலில் பிரசுரமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. 99-ஆம் பக்கத்தில் இடம்பெற்றுள்ளது.

3. பொதுநலவாய அமைப்பு, மற்றும் வெளியுறவு அமைச்சின் செயலாளரான கூகோ சுவயருக்கு (Hon. Hugo Swire, MP) நான் எழுதிய கடிதமும் (17.2.2015) கிடைத்த பதிலும், (13, சித்திரை, 2015). 80 - 82-ஆம் பக்கங்களில் இடம்பெற்றுள்ளன.

4. 8, தை, 2015 இல் ஈழத்தில் (ஸ்ரீலங்காவில்) இடம்பெற்ற தேர்தலின்பின் அங்குள்ள உண்மையான அரசியல் தத்துவங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கி, தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை வென்றெடுக்க உதவிகோரி, பிரித்தானியப் பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த மதிப்பிற்குரிய ஈத் மில்லிவான்ட் (Rt.Hon.Ed. Miliband, MP) அவர்களுக்கு எழுதிய கடிதமும் *(17.2.2015)* அவர் அனுப்பியிருந்த பதிலும் *(13, மார்ச் 2015). 83 - 85*-ஆம் பக்கங்களில் இடம்பெற்றுள்ளன.

*5. 8*, தை, *2015* இல் தேர்தலின்பின் இடம்பெற்ற சிங்கள அரசின் நிகழ்ச்சிநிரல்கள், பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு மேலும் துயரங்களை அளிப்பவையாகவே காணப்படும் நிலைமைகளைப் பதிவு செய்து கனடியப் பிரதமருக்கு அனுப்பிய கடிதமாகும் *(20.2.2015)*. இதற்கு அவரது எழுதுவினைஞர் அனுப்பிய பதில் *(ஏப்ரல் 9, 2015)*. இவை *86 - 88*-ஆம் பக்கங்களில் இடம்பெற்றுள்ளன.

*6.* கனடிய வெளியுறவுத் துறை அமைச்சிற்கு அனுப்பப்பட்ட என் கடிதத்திற்குப் பதிலாக அமைச்சினால் எழுதப்பட்ட பதில் கடிதம் *(ஜுன் 10, 2015)*. இதற்கு அமைச்சர் நிக்கொல்சன் அவர்களே (The Honourable Rob Nicholson, P.C, Q.C, MP) கையெழுத்திட்டு அனுப்பியிருந்தார். *97*-ஆம் பக்கத்தில் இடம்பெற்றுள்ளது.

*7.* கனடா பாராளுமன்ற உறுப்பினர்களைக் குறிவைத்து ஐ.எஸ். (IS Islamic State) தீவிரவாதிகள் தாக்கியபொழுது, அவர்கள் துயரத்தில் நானும் கலந்துகொண்டு அனுப்பிய ஆறுதல் கடிதம் *(22.10.2014)*. இதற்குப் பதில் அளித்த திரு. எஸ். ரசில்ஸ் (Mr. S. Russell, Executive Correspondence Officer) கடிதம் *(27, நவம்பர் 2014)*. இவை *89, 91*-ஆம் பக்கங்களில் இடம் பெற்றுள்ளன.

*8.* முள்ளிவாய்க்காலில் இறுதிநேர இனப்படுகொலைகளை, ஒரு ஊடகராக நடுநிலைவகித்துத் தயாரித்த மதிப்பிற்குரிய கலம் மக்ரி (Mr. Callum Macrae) அவர்கள் அனுப்பிய காணொளிக்கும், முகப்புப் படத்திற்கும் நன்றி கூறி எழுதிய கடிதம் *94*-ஆம் பக்கம் இடம்பெற்றுள்ளது.

*9.* Dear Sirs/Madams எனக் குறிப்பிட்டு எழுதப்பட்ட இக்கடிதம், ஐரோப்பிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கும், மற்றும் தென்னாப்பிரிக்கா, எகிப்து, இஸ்ரேல், கியூபா முதலான நாடுகளுடைய வெளியுறவு அமைச்சுகளுக்கும் இலங்கை சனாதிபதி தேர்தலின்பின் (8, தை, 2015) அங்கு உருவாகியுள்ள மாயைத்தோற்றங்களை விளக்கி எழுதப்பட்ட இப் பொதுக்கடிதம் 95 - 96-ஆம் பக்கங்களில் இடம்பெற்றுள்ளது.

10. நாதன் சிரில்லோ கனடா நாட்டின் அமைதி மற்றும் நல்வாழ்க்கைக்காக தன் இன்னுயிரை ஈந்து தியாகியானதை நினைவுகூரும் வகையில் எழுதிய கடிதம் (22.10.2014) பக். 90இல் இடம் பெற்றுள்ளது.

11. கனடா நாட்டு எம்.பி.க்களின், மக்களின் புகழைப் பாதுகாக்கும் வகையில் ஸர்ஜன்ட் கெவின் விக்கொர் ஆற்றிய வீரச் செயலை வாழ்த்தி எழுதிய கடிதம் (24.10.2014) பக். 92இல் இடம் பெற்றுள்ளது.

12. ஈழத்தமிழர் மனித உரிமைப் பிரச்சினைகள் பற்றி இஸ்ரேலிய விவகாரத்துறை அமைச்சருக்கு எழுதிய கடிதம் (4.3.2015) பக். 100இல் இடம்பெற்றுள்ளது.

13. ஈழத்தமிழருக்கு சிங்கள அரசு இழைத்துவரும் அநீதிகளையும், கொடுமைகளையும் எடுத்துரைக்கும் வகையில் கியூப வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஜோர்கல் டொமிங்கஸுக்கு எழுதிய கடிதம் (3.3.2015) பக். 101இல் இடம்பெற்றுள்ளது.

14. ஸ்ரீலங்காவில் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக புலனாய்வு செய்துவரும் சுவிஸ் நாட்டின் நிர்வாக அமைப்பின் இயக்குநருக்கு 16.2.2015இல் எழுதிய கடிதம் பக். 102இல் இடம் பெற்றுள்ளது.

15. உலக நாடுகளும், ஐ.நா. சபையினரும் தொடர்ந்தும் தமிழருக்கு இழைத்துவரும் கொடுமைகளை மறைமுகமாக இடித்துரைத்து எழுதிய கடிதம் பக். 103 - 104இல் இடம் பெற்றுள்ளது.

16. தென்னாப்பிரிக்காவிலுள்ள தென்னாப்பிரிக்கத் தமிழ்க் கூட்டமைப்பின் தலைவருக்கு ஈழப் பிரச்சினை குறித்து 28.8.2015இல் எழுதிய கடிதம் பக். 105இல் இடம்பெற்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. அமெரிக்காவிலுள்ள நாடுகடந்த தமிழீழ அரசின் பிரதம அமைச்சருக்கு 20.9.2015இல் எழுதிய கடிதம் பக். 106 - 108இல் இடம்பெற்றுள்ளது.

18. கௌரவ கனடிய மாநகரசபை உறுப்பினர் ஜாக் மெக்லாரன் அவர்களுக்கு அனுப்பப்பட்ட வரலாற்றுத் தரவுகள் பக். 109 - 111இல் இடம்பெற்றுள்ளது.

19. ஜாக் மெக்லாரனின் கடிதமும் அவருக்கு ஆறுதல்படுத்த எழுதிய கடிதமும் (28.12.2015) பக். 112 - 114இல் இடம் பெற்றுள்ளது.

இறுதியாக இக்கடிதங்களை ஏன் ஆசிரியர் எழுதினார் எனும் கேள்விக்கு அவர் கூறும் காரணங்கள்:

ஆசிரியர் ஒரு வடமொழிக் கல்வியாளர் என்பதோடு, ஒரு தொல்லியலாளருமாவார். கொழும்பு, களனியா பல்கலைக் கழகங்களில் விரிவுரையாளராகப் பணிபுரிந்த காலத்தில், சிங்கள மக்களின் நட்பைப் பெற்றிருந்தவருமாவார். ஆனால் கொழும்பில் 1983 ஆடி மாதம் சிங்கள அரசு ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் தலைமையில் பேரழிவுமிக்க தமிழினப் படுகொலையைக் கட்டவிழ்த்து விட்டிருந்தது. அப்பொழுது சாவின் விளிம்பிலிருந்து தப்பிய இவர் குடும்பத்தாருடன் கிழக்கு மாகாணத்தின், ஏறாவூர் எனும் கிராமத்திற்குப் புலம் பெயர்ந்திருந்தார். அங்குதான் இவர் தமிழரின் பூர்வீகத்தாயகம் எங்கே? எனும் புதிருக்கு விடை தேடினார். அவருக்குக் கிடைத்த விடை பழம்பாண்டியர் ஆண்டிருந்த நாடுகள் எல்லாம் கடற்கோள்களில் மூழ்கியபொழுது எஞ்சிய ஈழமே, ஈழத்தமிழரின் தாயகம் என்பதாகும். பின் சிங்கள இனம் ஏன்? எவ்வாறு? கி.மு. 543இல் ஈழத்தின் கரையைச் சேர்ந்தனர் என்ற வரலாற்றுப் பதிவுகளையும் சிங்கள வரலாற்று நூல்களையும் ஆராய்ந்து தெளிந்து கொண்டார்.

இதனைத் தொடர்ந்து இந்த இரு இனங்களின் பூர்வீகப் பின்னணிகளை விளக்கிப் பல வரலாற்று நூல்களையும் எழுதிவந்தார். ஆனால் வைகாசி 2009 இல் இடம்பெற்ற தமிழினப் படுகொலையினால் அப்பாவி மக்களின் வாழ்வியல் முற்றாகச் சிதைவுற்றுள்ள நிலையினைக் கண்ணுற்ற நிலையில், தன் எழுத்து வடிவத்தைக் கடிதங்களாக வடிவமைத்தார். சொல்லொணாத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பங்களை அனுபவித்துவரும் இம்மக்களுக்குரிய உரிமைகளை வென்றெடுக்கத் தன் எழுதுகோலைப் பயன்படுத்தி மக்களால் நிறுவப்பட்ட ஆட்சிகளைக்கொண்ட கனடா, இங்கிலாந்து போன்ற நாடுகளின் மக்கள் நலன் பேணும் அரசியற் தலைமை களுக்குத் தன் மனக்குமுறல்களை எழுதி முறையிட்டார். மனித நேயச் சிந்தனை கொண்ட இவர்கள் அனுப்பிய பதில்கள், சிறிய அளவில் இவருக்கு ஆறுதலைக் கொடுத்திருந்தமை உண்மையே.

ஆனால் இவருக்கு மிருகங்கள் கூட நன்றியுடன் தொழிற்பட்டு மனிதர்களை உயிராபத்துகளிலிருந்து காப்பாற்றியிருக்கையில், மனித உருவில் இருப்பவர்கள் ஏன்? எதற்காக? இத்தகைய கொலைகளைச் செய்து, மனித வரலாற்றைக் கறைபடிய வைக்கிறார்கள் என்பதற்காகிய விடைகளும் அவருக்குப் புலப்படவில்லை. சிங்கள வரலாற்று நூலான மகாவம்சமே தமிழினப்படுகொலைகளைப் பதிவு செய்த இறப்புச் சாட்சிப் பதிவுதான். அதனால் கொலைக்களங்கள்தான் ஈழத்தமிழனின் தலைவிதி என்று சோர்ந்துவிடாமல், தமிழுக்காகப் போராடுவதே தன் தார்மீகப் பொறுப்பென்று கருதி, தன் முதுமைக்குக் கிடைத்த சவாலாக, 2013 - 2015 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் இக்கடிதங்களை எழுதியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். அதனோடு இவ்வரலாற்றுப் பதிவுகளை அனைத்துத் தமிழ்மக்களும் இலகுவாக அறிந்துகொள்வதற்காக, நாடு கடந்த தமிழீழ அரசின் தொழில்நுட்பவியலாளரான திரு. எஸ். சுரேன் தமிழர் வரலாற்றினை கால அடிப்படையில் ஆவணப்படுத்துவதற்கான ஒரு வரலாற்றுப் பட்டியலைத் தயாரித்துக் கொடுக்கும்படி கோரியிருந்தார். அதனையும் தயாரித்துக் கையளித்த நிலையில், தமிழினத்தின் தொன்மை காலத்தால் அழிந்துவிடவில்லை. மாறாக உயிர்ப்புப் பெற்று உலகெலாம் வாழ்ந்துகொண்டிருக்கின்றது என்ற உண்மையையும் நிலைநாட்டியிருக்கிறார் என்றே ஆசிரியர் உணர்கின்றார். வரலாறு நன்றி கூறும் என நம்பலாம். அவரது வாய் பேச முடியாதவற்றைப் பேனாக்கள் பேசியுள்ளன. பேனாக்களுக்கு அவர் நன்றி கூறுவதில் வியப்பேதுமில்லை. வாழ்க தமிழ்! அழியா வரம் பெற்றிடுக! தமிழே! ஒரு புதுயுகம் உனைச் சகல துறைகளிலும் தலைநிமிர்ந்து நிற்க அழைக்கின்றது. நீயும் வீறுகொண்டு எழுந்திடுவாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Rt. Hon. Hugo Swire MP
Foreign and Commonwealth Office
King Charles Street,
London,
SW1A 2AH

Dear Sir,

Our Prime Minister Rt. Hon. David Cameron informed me that my letter addressed to him, had been forwarded to the Foreign & Common Wealth Office of U.K. As such, I believe that you are aware of the content of this letter. Printed form of this letter is enclosed herewith for your kind perusal.

The change of leadership of the Srilankan regime doesn't mean that the humanitarian problems would be solved in the near future. But, we, Tamils have experiences to point out that the Sinhala State's longstanding promises were never fulfilled until now.

It seems, you have visited the North of Srilanka recently we don't know that you were able to see the army camps in every Tamil village and controlling the activities of rural population.

Besides, for the change of leadership, the contribution made by the Tamil & Muslim voters was great. As the hundred days (100) programme to improve the political set up in Srilanka has been avoided the Tamil issues we have to work constantly. In an uncivilized world humanitarian problems are just the opposite to power hunger.

Therefore, we are looking forward for the support of the western world to help us to regain our human rights on the whole.

With best wishes and kind regards

Yours Sincerely,

Mr & Mrs. Kuna

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Foreign & Commonwealth Office

South Asia Departme
King Charles Street
London
SW1A 2AH

www.fco.gov.uk

Our reference: MOP/82016/2015

Mr & Mrs Keina
5 Shelley Avenue
London
E12 6SW

13 April 2015

Dear Mr and Mrs Keina,

Thank you for your letter of 17 February to Foreign and Commonwealth Office, Mr Hugo Swire, Minister responsible for our relations with Sri Lanka. South Asia Department leads on British policy towards Sri Lanka and I have been asked to reply.

We are working with the new government of Sri Lanka to reinvigorate the relationship between our two countries, and to encourage progress on the important matters of reconciliation and accountability.

The UK was among the first countries to reach out to the new government. The Prime Minister's statement of 9 January encouraged "President-elect Sirisena to support the ongoing UN Office of the High Commission for Human Rights investigation into human rights abuses so that the issues of the past can be addressed and the country can move forward." Foreign and Commonwealth Office Minister of State, Mr Hugo Swire, also personally delivered this message when he visited Sri Lanka on 28-30 January. They were again reiterated by the Prime Minister, Foreign Secretary and Minister of State, Mr Hugo Swire during President Sirisena of Sri Lankan and Foreign Minister Samaraweera's visit to the UK this week.

During the meeting with President Sirisena on 10 March, the Prime Minister welcomed the steps the President had taken and reiterated that he remained determined to ensure that there is accountability for the past and respect for human rights today. He also said that meaningful engagement with the ongoing UN process ahead of its report in September is central to the UK's continued support for Sri Lanka.

We hope that the new Sri Lankan government will now take this opportunity to work alongside the international community to address the grievances of the past. Addressing the legitimate concerns of all of Sri Lanka's communities will help to pave

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

the way for enduring peace and reconciliation, and help ensure Sri Lanka reaches its enormous potential as a strong and prosperous nation.

Thank you for taking the time to write in with your concerns.

Yours sincerely,

South Asia Department
Foreign and Commonwealth Office

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The Rt. Hon. Ed Miliband MP
Leader of the Labour Party
One Brewer's Green
London, SW1H ORH

Dear Leader of the Labour Party

Please find herewith two letters which I wrote to thank the Rt.Hon. Prime Minister of UK and Canada for having taken necessary steps to solve our humanitarian problems. Further, enthusiastically I want to inform you whenever I visit Sri Lanka to meet my relatives and friends I boast and praise about our lives in western world, in particular I point out that the United Kingdom and Canada are the kingdoms of pious people who respect all the ethnic groups who are under their care and extend the social services to improve their standard of living without any discrimination.

In Sri Lanka it's just the opposite way since the arrival of Sinhala race in B.C. 543 to Eelam, the innocent Tamil population have been killed through wages of wars and grabbed their lands until now. It's an obvious fact that still, even in the 21st century, the minds of Sinhala rulers are petty, dishonest and unrefined.

Also, I want to inform you that the recent changes of the leadership of the Sri Lankan state doesn't mean that the long standing humanitrarian problems of the Tamils will be solved. Though the new President and his supporters were placed in power solely by Tamil and Muslim voters, they accept it for granted.

In addition, the ethnic crisis will be put aside as UN Human Rights Commission and America are relaxing their grip over the war crime investigation on Sri Lanka.

Now, some unhappy news are leaking out slowly to inform us that the new President is also said to have involved in the war crime

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

against Tamils when he acted as a Defence Minister for a short term while the former President Rajapaksa had been away from Sri Lanka. So, one cannot expect from the new government a genuine approach towards the ethnic crisis in Sri Lanka. Also, during the election campaign, the new President had declared that the army camps would not be removed from the North of Sri Lanka.

So, it's a complicated matter for the western world to establish human rights in Sri Lanka. Hence, those who care for the values of human rights, good governance and democracy should be firm enough in dealing with this chaos situation in Sri Lanka.

Hence, we, Tamils want the western world to understand the deception and misleading nature of the Sri Lankan rulers. On the current issues, many countries don't exactly understand what has been taking place in Sri Lanka.

I hope that your party would understand the real nature of our situation and extend it's support for a good human cause, so that the Tamils in the North and East of Sri Lanka certainly protected from the Sinhala dictators who have hidden programme with the support of international community.

With best wishes and kind regards

Yours Sincerely,
Mr & Mrs. Kuna
(T. Gunabalasingam)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**The Labour Party**
**Ed Miliband MP**
**Leader of the Labour Party**
One Brewer's Green, London SW1H 0RH
0845 092 2299 | labour.org.uk/contact

Correspondence Unit

Ms Kuna
116 Shelley Avenue
London
E12 6SW

13 March 2015

Dear Ms Kuna,

Thank you for your recent letter to Ed Miliband regarding Sri Lanka.

Ed Miliband is always grateful to hear people's views and suggestions as to how matters can be improved and believes that people such as you, who take the time to write in, provide a crucial input to the political process.

Thank you again for taking the time to get in touch with Ed Miliband to share your views.

Yours sincerely,

R Davis
Office of the Rt Hon Ed Miliband MP



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The Rt. Hon.Prime Minister Stephen Harper
Office of the Prime Minister
80, Wellington Street,
Ottawa,
Ontario
K1A OA2
Canada

Dear Prime Minister,

My handwritten letters to your highness and the Rt. Hon Prime Minister David Cameron, UK were printed for the purpose of circulating among certain foreign ministers of the world. I am enclosing them for your kind perusal.

Recently, though, the Tamil voters managed to change the President and to set up a new Govenrment in power in Sri Lanka, the Sinhala leaders don't pay any regards to them. Instead they take it for granted. Therefore the same old story is continuing and the Tamils are again swimming in the same old muds of water.

Hence, we Tamils want the western world to understand the deception and misleading of the Sinhala rulers whoever comes to power. As, America and the UN Human Rights Commission have relaxed their grip over the crime investigation on Sri Lanka, certainly the remedial steps to ensure the human rights of the Tamils and the restoration of normalcy in the North & East of Sri Lanka would go down and put the ethnic issue aside as usual.

Unexpectedly, some unhappy news are leakingout slowly to inform us that the new President is also said to have involved in the war crime against Tamils when he acted as Defence Minister for a short - term while the former President Rajapaksa had been away from Sri Lanka. Besides, the new President had firmly declared during the election campaign that the army camps in the North of Sri Lanka

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

would not be removed. So, one cannot expect the new government to take necessary steps to solve the ethnic crisis in Sri Lanka.

It's a complicated matter for the western world to establish human rights in Sri Lanka. Hence, those who care for the values of human rights, good governance, and democracy should be firm enough in dealing with this chaos situation in Sri Lanka.

Hence, we Tamils want the western world to understand the deception and misleading nature of the Sinhala rulers. On the current issues, many countries don't exactly understand what has been taken place in Sri Lanka.

I believe your highness and the members of the Canadian Parliament would understand the real nature of our plight and extend their support for a good human cause, so that the voiceless Tamils in the North and East of Sri Lanka, certainly protected from the Sinhala dictators who have hidden programme with the support of international community.

With best wishes and kind regards

Yours Sincerely,
(Mrs. T. Kuna)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Office of the Prime Minister    Cabinet du Premier ministre

Ottawa, Canada K1A 0A2

April 9, 2015

Mrs. T. Gunabalasingam
116 Shelley Avenue
London E12 6SW
UNITED KINGDOM

Dear Mrs. Gunabalasingam:

I would like to acknowledge receipt of your correspondence addressed to Prime Minister Harper regarding the situation in Sri Lanka. I regret the delay in replying.

Thank you for writing to share your concerns with the Prime Minister. You may be assured that your comments have been carefully considered.

Once again, thank you for writing.

Yours sincerely,

M. Bredeson

M. Bredeson
Executive Correspondence Officer

Canada

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The Rt. Hon.Prime Minister Stephen Harper
and the Parliamentarians of Canada
80, Wellington Street,
Ottawa,
Canada

It is certain that the almighty God is always all around you all to protect from any calamities.

Love all, Serve all is the religion of your country. So, he established the fact that the truth and moral would be won among eveil deeds.

May the Almighty God bless you all the strength to transform the world much brighter than you could ever know with your sacred ideals.

With lots of love and regards on behalf of Eelam Tamils.

With best wishes and kind regards.

Yours Sincerely,
Mr & Mrs. Gunabalasingam

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Hon Nathan Cirillo

You sacrificed your precious youth life while in the service of peace and prosperity of your country and became an hero of the 21st century at the war memorial of Canada to remember forever. Our generations will continue to pay their tribute to you forever. We believe that you are now sleeping at the feet of the almighty God, who will soon send you back to do good things for your fellowmen.

Bouquets are offered to you to express the heart felt feelings of humans with lots of love and regards.

With best wishes and kind regards.

Yours Sincerely,
Mr & Mrs. Gunabalasingam

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Office of the Prime Minister | Cabinet du Premier ministre

Ottawa, Canada K1A 0A2

November 27, 2014

Mr. and Mrs. T. Gunabalasingam
116 Shelley Avenue
London
E12 6SW
UNITED KINGDOM

Dear Mr. and Mrs. Gunabalasingam:

Thank you for your recent letter addressed to the Prime Minister regarding the recent attacks in Ottawa and St.-Jean-sur-Richelieu, Québec. Canadians were deeply shocked and saddened by the killing of Corporal Nathan Cirillo and Warrant Officer Patrice Vincent, and by the attack on Parliament, symbol of Canadian democracy.

Please know that Prime Minister Harper appreciates you taking the time to express your thoughts. As the Prime Minister stated in the House of Commons, Canada will never yield to terrorism. The government will redouble its efforts to keep Canadians safe while we pull together in solidarity, confident in our values as a free and democratic society and united in our profound admiration for the men and women of Canada's Armed Forces.

Yours sincerely,

S. Russell
Executive Correspondence Officer

Canada

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Sergeant Kevin Vicker

So many congratulations are being sent with happiness for your heroic act which protected the well established fame of your Parliamentarians and the Canadian citizens on the whole.

Your victory and fame are also everlasting ones. May the almighty God bless you for more and more success in your life.

With lots of love and regards to you.

On behalf of Eelam Tamils.

Yours Sincerely,
Mrs. Kuna
24.10.2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Michael Zehaf Biheou

Every murder or other injury committed by the members of IS (so-called Islamic State of dreams) is an unfaithful crime against the God Allah and the respectable islamic society of the world.

As the Canadian society is built on the foundation of spirituality and moral priniciples of humans, for the Allah's sake don't use your weapon of killing on innocent humans anymore madly.

The almighty God is always with the Canadian society and taking care of them.

Yours Sincerely,
Kuna
24.10.2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Hon Mr. Callum Macrae
Channel 4 Headquarters
124, Horseferry Road,
London SW1P 2TX

Dear Hon. Callum Macrae

I would like to acknowledge the receipt of your poster as well as the video of "No fire zone killing fields of Sri Lanka addressed to my husband (K. Kunabalasingam). Sorry for the delay for the acknowledgement.

It was also very great to see the names of the other contributors of this historic film and we take this opportunity to extend our gratitude to all of them. The world is still surviving as there are pious humans like you all who devoted their lives to work for peace and prosperity for all.

The veterans of Jews community are said to have met in Germany (24.4.2015) to express their sufferings of human tragedies of their time, such a way we too express our tragedies that we went through the riots escalated against Tamils by the Sinhala regimes in 1977, 1983, 1990 and so on.

But, your team could film every detail of Sinhala regime's cruelty against innocent Tamils in their cherished soil in May 2009 and prove it to the world that man is the enemy for himself. Thus, you all are godly men of our era in many ways. So, every Tamil is grateful to you all. May the almighty God bless you all for everything.

Yours Sincerely,
Mr & Mrs. Gunabalasingam

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Dear Sirs/Madams,

As unity in diversity is well established in european countries as well as in african countries, we Tamils bow our heads to thank you all. Besides, you all work to establish human rights all over the world based on democractic principles. Hence, I have enclosed herewith my letters to Rt. Hon. Prime Ministers of great Britian and Canada for your kind perusal.

In advance, I want to bring to your kind notice that the recent changes of the President of Sri Lankan state doesn't mean that the longstanding humanitrarian problems of the Tamils would be solved smoothly. Though the new President Srisena and his supporters were placed in power solely by the Tamil voters, the New government doesn't pay any regards to them. Instead they accepted their victory as granted. Even considering the Tamils side, they voted only against the former President Rajapaksa rather than for the new President Srisena. Another point is, if the Tamil voters ignored the President election of Sri Lanka, certainly Rajapaksa would have come to power, this means that his first political action would be punishing his opponents in one way or another. So, it's obvious that the Tamil voters have proteced them from serious political impact. May the almighty God bless them all for good.

Now, the unfaithful Foreign Minister Mangala Samaraweera has made trips to several countries, in particular America and managed to change the constructive methods of the war crimes investigation on Sri Lanka. As a result, Mangala Samaraweera says that he achieved a great success for the Sinhala state on the whole. In fact the new President Srisena had also committed war crime against Tamils when he acted as a defence minister for a short-term. He would also face accusations as war criminal along with the former President Rajapaksa. Besides the new President himself has announced that he won't allow anyone to face international intervention against into war crimes in Sri Lanka. Besides, he had declared during

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

the election campaign that he would not remove army camps from the north of Sri Lanka. It means, that the Tamils of the north would be ruled by the army camps of the Sinhala state forever.

ராஜீவ்காந்தியின் கொலைவழக்கில் தொடர்புபடுத்தப்பட்ட 26 பேருக்காக வாதாடி வெற்றியீட்டிய இவர் தொடர்ந்தும் மூவர் தூக்குத்தண்டனைக்கெதிராக வாதாடுபவராவார். அத்துடன் முள்ளிவாய்க்கால் அவலத்தின்பின் ஈழத்தமிழரின் நீதிக்காகவும், தன் சட்ட நுணுக்கங்களைக் கையாளும் வழக்கறிஞருமாவார். இவ்வாறு தமிழக சட்ட வல்லுநர்கள் அனைவரும் ஈழத்தமிழருக்கு நீதி வேண்டி, நீதி தேவதையுடன் போராடிக்கொண்டிருக் கிறார்கள். அவர்கள் அனைவருக்கும் எம் ஆழ்ந்த நன்றிகளும், வணக்கங்களும் உரித்தாகட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எம்.எஸ். விசுவநாதன் (24.6.1928 - 14.7.2015) தன் மெல்லிசையால் இறைவன் படைப்பின் அனைத்து சீவராசிகளையும் மெய்மறக்கச் செய்தவர். இன்னிசை மன்னர் விசுவநாதன் தற்காலிகமாக 2015 இல் வெளியேறியிருக்கிறார். மீண்டும் புது மெருகுடன் வந்து இசையால் அனைத்துயிர்களையும் வாழவைப்பார். தமிழிசை கொடிகட்டிப் பறக்க அனைத்து இசைக்கலைஞர்களையும் வாழ்த்தி மகிழ்கின்றோம்.



ஆச்சி மனோரமா (1937 - 2015) மறைந்தார் என்று கிரியைகள் இடம்பெற்றாலும், தமிழின் இயல், இசை, நாடகக் கலைஞரான இவர் நிரந்தரமானவராகத் தன்னைப் பதிவு செய்துள்ளமை, இவர் புகழ் விண்ணையும் தாண்டிவிட்டது என்பதே உண்மை. தமிழ்க் கலைகளை வளர்த்துவரும் அனைத்துக் கலைஞர்களுக்கும் தமிழ் வாழ்த்துப்பாடிக் கொண்டேயிருக்கும். இவ்வாறு பல்வேறு வழிகளில் தமிழுக்குத் தொண்டாற்றி வரும் அனைத்துத் தமிழ்மக்களுக்கும் என் தலை எப்பொழுதும் சாய்ந்து, போற்றிப் பாராட்டிக் கொண்டிருக்கும். (நேர்காணல் News 7 தொலைக்காட்சி ஊடகர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியாக திரு. ஏ.பி.ஜே. அப்துல் கலாம் (15.10.1931 - 27.7.2015) ஒரு தமிழ் மகன் ஆவர். தமிழகக் கல்விக்கூடங்கள் அவரை உலகம் பாராட்டும் வகையில் ஒரு மாபெரும் விஞ்ஞானியாக உருவாக்கியிருந்தன. ஆளுமைமிக்க விஞ்ஞானியாக உருவெடுத்த இவர், 11 - வைகாசி - 1998 ஆம் நாளன்று அணுகுண்டு ஏவுகணையை விண்வெளிக்கு செலுத்தும் குழுவிற்குத் தலைமைதாங்கி வெற்றியீட்டியிருந்தார். பின் இந்தியாவின் 11 ஆவது குடியரசுத் தலைவராகவும் பணியாற்றி இருந்தார். பரந்து வியாபிக்கும் அன்புள்ளத்தைக் கொண்ட இவரின் கனவு கொலைக்களங்களற்ற ஒரு சமாதான உலகமாகும். இதற்காக மாணவர்களை நெறிப்படுத்த 84 வயது வரை உழைத்தார். இன்று அவரில்லை. அவர் புகழுடம்பு ஒளிவிட்டுப் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது. அவரது பிரிவும் மாணவர் மத்தியிலே இடம் பெறலாயிற்று.



யாழ்குடா மாணவர்களுடன் தமிழ்மகன் அப்துல் கலாம் நிற்கும் காட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15

# உலகளாவிய அளவில் மாவீரன் பிரபாகரன் மற்றும் மாவீரர் நினைவந்தேல்கள் (27.11.2015)

'ஓர் எழுத்தாளரின் அரை நூற்றாண்டு வாழ்க்கை அனுபவங்கள்' எனும் நூல் நிறைவுறும் நிலையில், மீண்டும் ஒரு எழுத்துக்கரு நூலாசிரியர் உள்ளத்தை ஆழமாக வருடிக் கொண்டிருந்தது. அக்கரு வேறொன்றுமல்ல. தமிழீழ தேசியத் தலைவர் வே. பிரபாகரனின் 61ஆவது அகவை மற்றும் மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகளுமேயாம். அவைபற்றி ஆசிரியர் தமிழினத்தின் தாகத்தைத் தணிப்பதற்காகத் தொகுத்தளிக்கின்றார்.

1. வங்கதேசத்தில் கொலை, கொள்ளை, துன்புறுத்தல் முதலான வழிகளில் மக்களின் வெறுப்பையீட்டிக்கொண்ட இளவரசன் விசயனும், 700 தோழர்களும், மக்களின் வேண்டுகோட்கிணங்கவே தந்தையாகிய சிங்கபாகுவினால் நாடு கடத்தப்பட்டு, தோணிகளில் கடலில் விடப்பட்டிருந்தனர். இது நிகழ்ந்தது கி.மு. 543 எனச் சிங்கள வரலாற்று நூல்கள் பதிவு செய்துள்ளன. இவ்வாறு நாடுகடத்தப்பட்ட இவர்கள் தோணிகள் ஈழத்தின் கரையை அடைந்தபொழுது ஆதரவு அளித்து தஞ்சம் வழங்கியவர்கள் ஈழத்தின் பழங்குடியினரான தமிழ் மக்களே ஆவர். ஆனால் கெட்ட நடத்தைகளில் ஊறியிருந்த இவர்கள் சூழ்ச்சிகள் செய்து அப்பொழுது ஆட்சியிலிருந்தவனும், அடைக்கலம் வழங்கியவனுமான காலசேனன் எனும் அரசனைக் கொன்று ஆட்சியைக் கைப்பற்றியபின், தம் ஆட்சியைத் தொடர வங்கத்திலிருந்து தன் தம்பிமகனை வரவழைத்து ஆட்சியைக் கொடுத்திருந்தனர். இக்காலம் முதலாக இயக்கர், நாகர், தமிழர் ஆகிய பூர்வீகக் குடிகளின் மண்ணினைக் காலந்தோறும் ஆக்கிரமித்த வரலாற்றினைத் தீபவம்சம், மகாவம்சம் முதலான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சிங்கள வரலாற்று நூல்கள் பதிவு செய்துள்ளன. காலப்போக்கில் மூவேந்தர்களும் தலையீடு செய்து தமிழர் ஆட்சிகளை இடையிடையே மீட்டுக் கொடுத்திருந்தனர். ஆனால் பிரித்தானியர் காலத்தில் இந்நிலை முற்றாக மாறியிருந்தது. பிரித்தானியர் தமிழர் உதவியுடனே ஈழத்தின் பல பகுதிகளைத் தமதாக்கியபின் சிங்கள ஆட்சிப்பகுதிகளையும் கைப்பற்ற முடிந்தது என்பதும் பிற்கால வரலாறாகும். ஆனால் 1948 ஆம் ஆண்டு இலங்கைக்குச் சுதந்திரம் வழங்கி நீங்கும் வரையும், தமிழர் ஆட்சிப்பிரிவுகளை சிங்கள ஆட்சிப்பிரிவுகளுடன் இணைத்து ஆண்டிருந்தார்கள் என்பதும் இன்னோர் பக்க வரலாறாகும். அது மட்டுமல்ல, நாட்டை விட்டு வெளியேறுகையில் சுதந்திரம் எனும் பெயரில் தமிழர்களையும், தமிழர் மண்ணையும் சிங்களவர் கைகளில் தாரை வார்த்து விட்டே வெளியேறியிருந்தார்கள். இதனால் கடந்த 67 வருடங்களாக தமிழர்கள் உற்ற இன்னல்களை ஒவ்வொரு ஈழத்தமிழனும் அனுபவித்திருந்தான்.

இக்காலப் பகுதியில் இடம்பெற்ற சாத்வீகப் போராட்டங்கள் ஆயுத வழியில் அடக்கப்பட்ட நிலையிலேயே பிரபாகரன் முதலான இளையோர் தம் மக்களின் மண்ணிற்காகவும், உரிமைகளுக்காகவும் ஆயுதங்களை ஏந்தவும், போராடவும் சிங்கள அரசுகளின் செயற்பாடுகளே உந்துகோலாகத் தொடர்ந்தும் அமைந்திருந்தன. இடையிடையே சமாதானப் பேச்சு, அரசியற் தீர்வு எனும் பதங்களைக் கொச்சைப்படுத்தி போராளிகளின் குறிக்கோள்களை நசுக்க சதிவலைகளைக் காலந்தோறும் ஆட்சியைக் கைப்பற்றும் சிங்கள அரசுகள் விரித்திருந்தன. ஆனால் சர்வதேச உலகம் இவையெல்லாம் சிங்கள அரசுகளின் சிறந்த அரசியற் செயற்பாடுகள் என்றே கருதியிருந்தன. அன்று மட்டுமல்ல, நல்லாட்சி என்று தன்னைச் சொற்களால் மட்டும் அடையாளப்படுத்தும் மைத்திரி அரசும் இன்று இத்தகைய வேடத்திலேயே உலகை வலம் வந்துகொண்டிருக்கின்றது. இவ்வாறான சிங்களத் தலைவர்கள் ஒவ்வொருவரின் கோர முகங்களையும் வரலாற்றடிப்படையிலும், அனுபவ அடிப்படையிலும் அளந்துகொண்டு, தன்னை எப்பொழுதும் தனித்துவமான ஒரு தலைவனாகக் காட்டிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டே தலைவர் பிரபாகரன் தன் முடிவில் உறுதியாக இருந்தார். எரிக் சொல்ஹைம் (Eric Solheim) கருதுவதுபோல், பிரபாகரனே தம் சமாதானப் பேச்சுகளுக்கு முட்டுக்கட்டையாக இருந்தார் எனும் கூற்றினைச் சிங்கள இனத்தின் நரிப்புத்திகளை அறிந்துகொண்ட எவரும் ஏற்க மாட்டார்கள். இந்த வகையிலேயே 1992 - 2008 வரை தமிழீழ தேசியத்தலைவர் பிரபாகரன் நிகழ்த்திய மாவீரர் நினைவேந்தல் உரைகள் அனைத்தும், சிங்களத்தின் பச்சோந்தித் தனத்தினை அளவிட்ட உரைகளாகவே அமைந்திருந்தன. இந்த உரைகளை மீளாய்வு செய்த தினேஷ்குமார், மற்றும் அரசியல் ஆய்வாளர் இதயச் சந்திரன் ஆகிய இருவரும் பிரபாகரன் தமிழ்மக்களின் சுயநிர்ணய ஆட்சியில் கொண்டிருந்த உறுதியை மதிப்பிட்டிருந்தனர்.


தமிழ்மக்கள் மேதகு, புரட்சித்தீ, தேசியத்தலைவர் எனும் சிறப்புமிக்க அடைமொழிகளால் போற்றி மகிழும் ஒப்பற்ற தலைவர் வே. பிரபாகரன் மாவீரர் நினைவேந்தல் நாள் துக்க தினமன்று. மாறாக, இவ்வீரர்களின் விடுதலை வேட்கையை நினைத்து ஒவ்வொரு தமிழனும் நிமிர்ந்துநின்று தன் விடுதலைக்காக உறுதி எடுக்கவேண்டிய நாளென இவ்வுரைகளில் வலியுறுத்தியிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மேதகு வே. பிரபாகரன் மாவீரர் நினைவெழுச்சி நாட்களை மீட்டுப் பார்ப்பதோடு, சிங்கள அரசுகள் போடும் தடைக்கற்களை எதிர்கொள்வது பற்றியும் தன் கருத்துகளை முன்வைக்கின்றார்.



தமிழின விடுதலைக்காக உயிர்த்தியாகம் செய்த மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்துகின்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



27.11.2015 அன்று தமிழீழ தேசியத்தலைவரின் மாவீரர் உரைகளை மீளாய்வு செய்து அவர் எதிர்கொண்டிருந்த பல்வேறு பட்ட அரசியற் சூழ்ச்சிகளையெல்லாம் எவ்வாறு சமாளித்தார் என்பதனை தினேஷ் குமார், அரசியல் ஆய்வாளர், இதயச்சந்திரன் ஆகியோர் IBC தமிழ் தொலைக்காட்சியில் அடையாளப் படுத்தியிருந்தனர்.

வரலாற்றுத்துறைப் பேராசிரியரான முருகர். குணசிங்கம் மாவீரர் அர்ப்பணிப்பு, தியாகம் என்பனவற்றைப் பதிவு செய்யும் ஓர் ஆவணமாக 'மாவீரர் காவியச்சோலை' எனும் முதற் தொகுதியில் பத்தாயிரம் வீரர்களின் விடுதலை வேட்கை பற்றி ஆராய்ந்துள்ளர். இரண்டாம், மூன்றாம் தொகுதிகளில் எஞ்சிய வீரர்கள் பதிவு செய்யப்படுவர் என்பதனைக் குறிப்பிடுவதோடு, தமிழர் விடுதலைக்கான களம் தென்னிலங்கையென்றும் ஆரூடம் கூறியிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேராசிரியர் முருகர். குணசிங்கத்தினை 25.11.2015 அன்று நேர்காணல் செய்தவர் ஊடகர் எம்.என்.எம். அனஸ் ஆவர். (IBC தமிழ் தொலைக்காட்சியூடாக)




பேராசிரியர் முருகர். குணசிங்கத்தின் ஆரூடத்தை மேலும் வலியுறுத்தும் வகையில் 'ஈழம் அமையும்' எனும் நூலை எழுதிய அய்யநாதர் (மூத்த ஊடகவியலாளர், தமிழ்நாடு) இறைவன் தனக்குணர்த்தியபடி சிறுபோர் முன்னெடுப்பாலே இது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெறும் என்றும் குறிப்பிட்டார். தாய்மாரின் கண்ணீரும், புலம்பலும் இறைவனை அசைத்துள்ளது எனும் தன் தெய்வீக நம்பிக்கையையும் வலியுறுத்தியிருந்தார். இவரை நேர்காணல் செய்தவர் GTV ஊடகர் திரு. சீலன் ஆவர்.

'அறிவாயுதம்' எனும் நூலினைச் சட்டத்தரணி அமர்நாத் உருவாக்கி அதற்கான காரணம், தமிழின விடுதலைக்காகத் தீக்குளித்து வீரச்சாவடைந்த முத்துக்குமரன் "நான் உயிராயுதத்தை ஏற்றேன். நீங்கள் அறிவாயுதத்தை ஏற்றுக் கொள்ளுங்கள்" எனும் கோரிக்கையினடிப்படையிலேயே தொடங்கினார் எனக்கூறி மாவீரன் ஒருவனுக்கு தான் எவ்வாறு மதிப்பளிக்க முடிந்தது என்பதனை விவரித்தார்.




சட்டத்தரணி அமர்நாத் 'அறிவாயுதம்' என்னும் நூலின் தலைப்பில் எழுதிவரும் எழுத்தாளருமாவர். நேர்காணல் GTV ஊடகர் திரு. சீலன்.

இவ்வாறு வரலாற்று மற்றும் சமூக, சமய எழுத்தாளர்களின் அறிவுச் சிந்தனைகள் இருக்க, முப்படைகள் மற்றும் தனித்துவமான பெண்கள் படை, சைனட் குளிசைகள் எனப் பல்வேறுபட்ட சமூக எழுச்சி கொண்ட விடுதலைப் போராட்டத்தினை, தமிழ் இன அழிப்புச் சிங்கள அரசுகள் 'பயங்கரவாதம்' என அடையாளப்படுத்தி உலகச்சந்தையில் பேரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசி விற்றிருந்தார்கள். அதனால் வைகாசி 18, 2009 ஆம் ஆண்டு தமிழீழத்தின் ஆயுதப் போராட்டத்தினை உலக அரசுகளின் உதவிகளுடன் சிங்கள அரசு வெற்றி கண்டிருந்தது. அதனால் உலகளாவிப் புலம்பெயர்ந்து வாழ்ந்திருந்த ஈழத்தமிழ்மக்கள் உளரீதியாகப் பாதிக்கப்பட்டிருந்தனர். ஆனாலும் உலகநாடுகளின் சுயநலங்களையும், பாதிக்கப்பட்ட மக்களின் சீரழிந்த வாழ்க்கையையும் ஆய்வு செய்து ஐ.நாட்டுச்சபையின் மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் கடந்த ஆறு வருடங்களாகச் செயற்பட்டு ஒரு நீதியானதும் ஈழத்தமிழ் மக்களின் துயர்களுக்கு அடிப்படையாக இருந்த காரணங்களையும் கோடிட்டுக் காட்டியிருந்தனர். குறிப்பாக 17.9.2015 அன்று ஜெனீவாவில் வெளியிட்டு உரையாற்றிய இளவரசர் சையத் ராட் அல் ஹுசைன் ஈழத்தில் நடைபெற்ற போர் மனிதகுலத்திற்கு எதிரான போராகையினால், அங்கு சர்வதேச அனுசரணையுடன் கொண்ட விசாரணை மூலம் நீதி நிலைநாட்டப்பட வேண்டிய அவசியத்தினை வலியுறுத்தியிருந்தார். அப்பொழுது உலகத்தமிழர் அனைவரும் மீண்டும் தலைநிமிர்ந்து நம்பிக்கை பெற்றிருக்கையில், தமிழ் மக்கள் ஆதரவால் ஆட்சி பீடத்தைக் கைப்பற்றிக் கொண்ட மைத்திரிபால அரசு வழமைபோல் தன் இனத்திற்கேயுரித்தான சூழ்ச்சித் திட்டங்கள் மூலம், அமெரிக்காவைத் தன் காலடியில் விழுத்தி, உள்ளக விசாரணையை 30.9.2015 அன்று முன்வைக்கச் செய்தது.

இவ்வாறு உலகளாவிய அளவில் மனிதர்களின் சிந்தனைகள் அநீதியின் வழிநோக்கிப் பயணிப்பதனையிட்டு மீண்டும் தமிழர்கள் நம்பிக்கையிழந்த நிலையில் பல அறவழிப் போராட்டங்களை நடத்தியிருந்தனர். அப்பொழுது சட்டவாளர் வைகோ முதலான தலைவர்களும் கைது செய்யப்பட்டனர். இத்தகைய சீர்கெட்ட மனிதகுலத்தினைக் கண்டு தமிழ்மக்கள் அச்சம் கொள்ளவில்லை. தமிழகம், ஈழம், உலக நாடுகள் அனைத்திலும் வாழ்ந்துவருகின்ற தமிழ் மக்கள் அனைவரும் வீறுகொண்டு எழுந்தனர். தேசியத் தலைவர் பிரபாகரனின் 61ஆவது அகவையையும் (26.11.2015), மாவீரர் தினத்தினையும் முன்னொரு பொழுதும் இல்லாதவாறு நினைவுகூர்ந்து வீரவணக்கம் செலுத்தினர். அவை பற்றிய சிறப்புத் தொகுப்பினை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிழற்படங்கள் மூலம் சீர்தூக்கலாம். இராணுவ அடக்குமுறைகளுக்கு எதிரான முறையில் ஈழத்தில் இடம்பெற்ற மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகள் உணர்வுபூர்வமாக அரங்கேறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.




யாழ் பல்கலைக்கழக மூன்றலில் இடம்பெற்ற வீரவணக்க நிகழ்வுகள்.



மட்டக்களப்பில் அரசியல்தலைவர்களும் இணைந்து நடாத்திய வீரவணக்க நிகழ்வுகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வன்னியர் ஆட்சிப்பீடமாக விளங்கிய வவுனியாவில் இடம்பெற்ற வீரவணக்க நிகழ்வுகள்.

இவ்வாறெல்லாம் வீரவணக்க நிகழ்வுகள் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் 26.11.2015 யாழ், கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவனான இராஜேஸ்வரன் செந்தூரன், மைத்திரி அரசின் கபட நாடகத்தைப் பொறுத்துக்கொள்ள முடியாத நிலையில் ஓடும் புகையிரத வண்டிமுன் பாய்ந்து தற்கொலை மூலம் வீரச்சாவை அடைந்தான். ஏறக்குறைய இருபது வருடங்களாக அடைத்து வைக்கப்பட்டுள்ள சிறைக்கைதிகளுக்குப் பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்யுமாறு, சமூக அமைப்புகள், உறவினர்கள், மனித உரிமைச்சபைகள் அனைத்தும் குரல் கொடுத்தும், மைத்திரி, பாவப்பட்ட ஒரு சாதாரண மானுடனுக்காக சிறுதுளியும் அசையவில்லை. அதனாலே 'நல்லாட்சி அரசு' எனப் பட்டம் சூட்டிக்கொண்ட மைத்திரிக்கு, அரசியல் தலைமைப்பதவி மூலம் உலகம் சுற்றும் வாலிபனாக்கிவிட்ட மக்களுக்குக் கருணை காட்டும்படி ஒரு கடிதத்தினையும் எழுதிவைத்துவிட்டே 17 வயதுச் சிறுவனான செந்தூரன் வீரச்சாவைத் தழுவினான். அதனால் அதிர்ச்சியும், கவலையும் கொண்ட யாழ்குடா முழுமையாகத் துக்கம் கொண்டாடியது. இவனது மரண ஊர்வலத்தில் அரசியல் தலைமைகள், ஊர்மக்கள், மாணவ சமூகம் அனைத்தும் கலந்து கொண்டிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உடல், உளரீதியாகத் துன்புறும் தமிழ் அரசியற் கைதிகளின் விடுதலைக்காக வீரச்சாவைத் தழுவிய மாவீரன் செந்தூரனின் மரண ஊர்வலம்.



செந்தூரனின் வீரச்சாவிற்குச் சிரம் தாழ்த்திய முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமசந்திரன், மற்றும் வீரத்தின் முழுவடிவென அடையாளப்படுத்தப்பட்டுள்ள எம்.கே. சிவாஜிலிங்கம், வடமாகாணசபை தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் ஆனந்த சங்கரி முதலானோரைக் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்துக்கு அடுத்தபடியாக மாவீரர் தின நினைவேந்தலைத் தமிழ்நாட்டு மக்களும் நினைவுகொண்டிருந்தனர். நினைவேந்தல் நிகழ்வுகளை நிகழ்த்த இம்முறை தமிழக நீதிமன்றம் அனுமதித்த நிலையில், இ[illegible]ாட்கள் தமிழகத்தின் நீறுபூத்த நெருப்பாக எரிந்திருந்தன. இரு காட்சிகள் மட்டுமே அவர்களுக்குத் தலைசாய்க்கும் வகையில் பதிவாகியுள்ளன.



சட்டவாளர் வைகோவின் குரல், ஏறக்குறைய கால் நூற்றாண்டாக ஈழத்தமிழருக்கென்றே ஒலித்துவருவது அவரது நீதி வழிவந்த அருள் மழையாகும். கொளத்தூரில் பொன்னம்மான் எனும் ஈழவிடுதலைப் போராளியின் நினைவு மன்றம் ஒன்று இருப்பதாகத் தெரிகின்றது. இந்த ஈழ விடுதலை என்பதனை தன் உயிரின் துடிப்பாக ஏற்றுக்கொண்ட கொளத்தூர் மணி, அங்கு நினைவேந்தலை நிகழ்த்தியபின், உலகத்தமிழர் அமைப்புகள் தொடர்ந்தும் விடுதலையை நோக்கி அர்ப்பணிப்புடன் பயணிக்க வேண்டுமென்றும் IBC தமிழ் ஊடகர் தினேஷ்குமாருக்கு ஒலிவாங்கி மூலம் வேண்டுகோள் விடுத்தது மூலம், உலகத் தமிழர் அவர் அழைப்பினை தலையாய பணியெனக் கொள்வர் என்பது உறுதியாம். கோவையில் திரு. கு. இராதாகிருஷ்ணனும், அன்பர்களும் உணர்வுபூர்வமாக நினைவேந்தலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொளத்தூர் மணியை காணொலி மூலம் நேர்காணல் செய்தவர் ஊடகர் தினேஷ்குமார் (IBC Tamil).

மேற்கொண்டிருந்தமையையிட்டு நாமனைவரும் அவர் பணிகளுக்கு தலைசாய்த்து நிற்போமாக. மியன்மார், கட்டார் முதலான நாடுகளிற்கூட அடக்குமுறை அரசிற்கு மனித நேயத்தைப் போதிக்கும் முறையில் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றமையும் மறத்தமிழனை எவரும் அடக்கியாள முடியாது என்பதனை உணர்த்தும் நிகழ்வுகள் எனலாம்.



நோர்வே நினைவேந்தல் நிகழ்வினை ஒரு போர் முற்றாக இச்சிறுவன் ஆணித்தரமான கருத்துகளை வெளியிட்டு மாற்றியிருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இனி, புலம்பெயர்நாடுகளில் ஈழத்தமிழர்கள் மீண்டும் வீறு கொண்டெழுந்த நினைவேந்தல் நிகழ்வுகள் உலகத்தின் மனச் சாட்சிகளைத் தட்டியெழுப்பும் வகையில் அமைந்திருந்தன.

பேராசிரியர் அறிவரசன் தலைவர் பிரபாகரனின் அழைப்பினை ஏற்று 2006 - 2008 வரை ஈழத்திலிருந்து தமிழ்ப்பணியாற்றிய ஒருவர். இவர் சுவிற்சலாந்தில் நடத்தப்பட்ட மாவீரர் தினத்தில் உரையாற்றுகையில் தலைவர் பிரபாகரன் "மாவீரர் நாள் துக்கநாளன்று. மாறாக, உயிர்த்தியாகம் செய்த வீரர்களை நினைந்து தலைநிமிர்ந்து நின்று உறுதிபூணும் நாள் என்று கூறினார்" என்பதனை எடுத்துரைத்தார். அதனோடு வள்ளுவர் கூறியதுபோல், 'செய்தக்க அல்ல செயக் கெடுஞ் செய்தக்க செய்யாமை யானுங் கெடும்' (குறள் 466) எனும் கோட்பாட்டினை பிரபாகரன் கொண்டிருந்தார் என்பதனையும் வலியுறுத்திக் கூறியிருந்தார்.



ஈழ விடுதலைப் போராட்டத்தின் தார்மீகத்தை மனிதநேயக் கண்களால் பார்த்து வருகின்ற கனடிய மாநகர சபைக்கூடத்தில் இம்முறையும் பழமைவாதக்கட்சி உறுப்பினர் உரையாற்றி, மாவீரர் தினத்தன்று உரை நிகழ்த்தி, உலக சமாதானத்திற்கு மனித மாண்புகளே சிறந்த ஆயுதமென உலகிற்கு அறிவுறுத்தியிருந்தார். கனடிய பாராளுமன்ற அனைத்து உறுப்பினர்களும் இப்பணியைத் தொடர்ந்து மேற்கொள்ள இறைவன் துணை நிற்பானாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனடாவின் சட்டமன்ற உறுப்பினராக யக் மக்லரென்
(Jack Maclaren MPP) மாவீரர் தின உரையாற்றுகின்றார். (26.11.2015)




GTV ஊடகர் பிரேம். சிவகுரு மாவீரர் நிகழ்வுகளைத்
தொகுத்தளிக்கின்றார்.

லண்டனில் மாவீரர்தின நினைவேந்தலுக்காகத் திரண்டுவந்த மக்களை வெம்பிளி மண்டபத்தில் முழுமையாக உள்வாங்க முடியாத நிலையிருந்ததனால், தூர இடங்களிலிருந்து வந்த மக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளிர்காலத்து இடர்களையும் சமாளிக்க வேண்டியதாயிற்று. GTV ஊடகர் பிரேம். சிவகுரு வரலாற்றடிப்படையில் தமிழினம் அனுபவித்துவரும் இன்னல்களை அவ்வப்பொழுது ஆராய்ந்துவரும் ஒரு ஆய்வாளராவார். அவரது மாவீரர் நாள் உரையாடல்களை GTV நேயர்கள் வீடுகளிலிருந்தபடியே செவிமடுத்து தம் வீரவணக்கங்களையும் செலுத்தியிருந்தனர்.


தீபம் தொலைக்காட்சி ஊடகரான யாத்திரா மாவீரர் நினைவேந்தலைக் கலைஞர்களின் ஆக்கங்களுடன் புத்துயிரூட்டியிருந்தார். அதனோடு கவிஞர். கா சுப்பிரமணியமும் தன் கவிதைகள் மூலம் மாவீரர் உணர்வுகளை வடித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



(இடமிருந்து வலம்) கவிஞர் கா. சுப்பிரமணியம், ஊடகர் யாத்திரா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் இனம் வெட்ட வெட்டத் தழைத்து, உலகெங்கும் கிளைகள் விட்டுப் படர்ந்த நிலையில், தொலைக்காட்சிகளும் காலத்தின் தேவைக்கேற்ப உருவாக்கப்பட்டு, தமிழ்மக்களை மெய்மறக்கச் செய்து வருகின்றன. அனைத்துத் துறைகளிலும் நிபுணத்துவம் கொண்ட படைப்பாளிகளும் உருவாகியிருப் பதனால் தமிழ்மக்கள் பொழுதுகள் பயனுள்ளவையாகவே கழிக்கப்படுகின்றன. இவ்வகையில் அண்மையில் உருவாகிய IBC தமிழ் தொலைக்காட்சியும் மக்கள் மனங்களில் தன் அலைகளைப் பல்வேறு வடிவங்களில் வீசிக்கொண்டிருக்கின்றது. IBC தமிழ் தொலைக்காட்சி ஊடகர்களான சுதர்சன் சுப்பிரமணியன், கோகுலன் கந்தசுவாமி ஆகிய இருவரும், வன்னியில் கள மருத்துவராகப் பணியாற்றிய உயர்ச்சியின் கள அனுபவங்களை நேர்காணல் மூலம் வெளிக்கொண்டு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



(இடமிருந்து வலம்) திரு. கோகுலன் கந்தசுவாமி, சுதர்சன் சுப்பிரமணியன்.

களமருத்துவர் உயர்ச்சி தான் இன்று உயிருடன் வாழ்வதற்குத் தன் நண்பனாகிய வைகுந்தனே உயிர்ப்பிச்சை கொடுத்திருந்தான் எனும் கருத்தினை முன்வைத்திருந்தார். அதாவது இவரைக் களப்பணிக்கு அனுப்பிவிட்டு, உயர்ச்சியின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுக்கையில் கால்வைக்குமிடத்தில் தலையை வைத்துப் படுக்கையில் விழுந்த வெடிகுண்டுகள், தலைமீது விழுந்ததனால் அவர் இறக்க நேரிட்டது எனும் துயரத்தைக் கக்கினார். அதுவும் விதியாகலாம் எனத் தன்னை ஆறுதல்படுத்திக் கொண்டார். இதுபோன்ற பல வீரர்களின் உயிர்த்தியாகங்களைக் கண்ட இவர், இன்று ஒரு மாவீரனாகவே எமக்குக் காட்சியளிக்கின்றார் எனில் மிகையாகாது.




**வன்னியில் களமருத்துவராகப் பணியாற்றிய உயர்ச்சியை நேர்காணல் செய்பவர் கோகுலன் கந்தசுவாமி ஆவார்.**

இறுதியாக தமிழீழ விடுதலையுடன் வாழ்வினை அர்ப்பணித்துவரும் தமிழ்ப் பற்றாளர், மற்றும் மனித உரிமைப்பணியாளர்கள் பற்றியும் பதிவுகள் செய்வதும் என் பொறுப்பாகத் தெரிகின்றது. முதலாவதாக IBC தமிழ் அகம்புறம் நிகழ்ச்சியில் தோன்றி கருத்துகளை வெளியிட்ட திரு. பழ. நெடுமாறன் அவர்கள் உலகத்தமிழர் அமைப்பின் தலைவராகப் பணிபுரிந்து வருகின்றார்.

பழ. நெடுமாறன் தான் மூன்று தலைமுறையினரின் தமிழ் உழைப்பின் வழியே வந்தவர் என்பதனை விளக்கியதோடு, திரு. காமராசர் காலத்தில் காங்கிரஸ் கட்சி உறுப்பினராக இருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியாற்றிய ஒருவர் என்றும் தனது அரசியல் வரலாற்றினையும் எடுத்துரைத்திருந்தார்.



திரு. பழ. நெடுமாறனை நேர்காணல் செய்பவர் திரு. ராஜ்மோகன் - அகம் புறம் நிகழ்ச்சி. 24.11.2015 (IBC Tamil)

சுப. உதயகுமாரும் (17.11.2015) அன்று அகம்புறம் நிகழ்ச்சியில் தோன்றி தன் கூடங்குளம் அணு உலைக்கு எதிரான போராட்டம், அரசியல் பிரவேசம் முதலானவற்றை எடுத்துக்




திரு. சுப. உதயகுமாரை நேர்காணல் செய்தவர் திரு. ராஜ்மோகன் - அகம் புறம் நிகழ்ச்சி. 17.11.2015 (IBC Tamil)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறியிருந்தார். முடிவில் மனிதமாண்புகளே மனிதனைக் காக்கவல்லன, சர்வதேசங்களின் அணுவாயுதங்களல்ல என்ற உண்மையையும் வலியுறுத்தியிருந்தார் என்பதும் குறிப்பிடத் தக்கது.

மனித உரிமைச் செயற்பாட்டாளர் கிருபாகரன் பிரான்சிலிருந்து தமிழர் உரிமைகள் பற்றிய முன்னேற்றம், பின்னடைவுகள் முதலான வழிகளில் தன் கண்காணிப்புகளைச் செய்து, அவற்றின் பலாபலன்கள் பற்றியும் துல்லியமாக எடை போட்டு அறிவுறுத்தி வருபவராவார். பொதுவாக GTV ஊடாகத் தன் கருத்துகளை முன்வைப்பார். தற்பொழுது தீபம் தொலைக்காட்சியில் இவரை ஊடகர் யாத்திரா நேர்காணல் செய்கின்றார்.



(இடமிருந்து வலம்) ஊடகர் திரு. யாத்திரா, திரு. கிருபாகரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16

## என் எழுத்துப்பணிக்கு உதவிய உறவினருக்கு நன்றிகள்

தங்கை மாலா செளந்தரம் ஒரு சமூக சேவையாளர் என்பதனை அறிந்தபின் என் பெரும்பகுதி நூல்களின் விற்பனை நிதியை சமூக சேவைக்குப் பயன்படுத்துமாறு கையளித்திருந்தேன். இவர் பின்னர் எஞ்சிய நூல்களை வடகிழக்கு மாகாண நூல் நிலையங்களுக்கு அன்பளிப்புச் செய்யின் அதிக பயனாகும் எனும் புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் திரு. பிரதாபனின் ஆலோசனையை ஏற்று, அவரிடம் கையளித்திருந்தார். பின்



தங்கை மாலாவின் தன்னலமற்ற சேவைகள் பலதரப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூல்கள் உதவி அரசாங்க அதிபர் கண்காணிப்பில் நூல் நிலையங்களுக்கு அனுப்பப்பட்டன. இவ்விருவருக்கும் என் நன்றிகள்.




என் கணவர் தங்கை அன்னலட்சுமியுடன் நானும், மாலாவும்.

நான் இலங்கைக்குச் செல்கையில் திரு/திருமதி. மனோகரன் - அன்னலக்குமி வீட்டிலே தங்குவேன். அப்பொழுது இவர்களும், மகன் ஆனந்தும் என் நூல்களைப் பொதியிட்டு நூல் நிலையங்களுக்கு நேரடியாகக் கொடுத்தல் மற்றும் தபாலில் அனுப்புதல் முதலான பல வழிகளிலும் உதவுவர். அவர்களுக்கும் என் எழுத்துலகம் தங்குதடையின்றிப் பயணிக்க உதவியாக இருந்த என் கணவருக்கும் மற்றும் மருமகன் ரமேஷ் குடும்பத்தினருக்கும் நன்றிகள்.

என் நூல்களின் கைப்பிரதிகளை மின்னஞ்சல் ஊடாக மணிமேகலைப் பிரசுரத்திற்கு அனுப்பி நூல்களை விரைவாக வெளியீடு செய்ய உதவுபவர் மருமகன் ரமேஷ் மயில்வாகனன் ஆவார். அவரது தாயார் சாந்தினி மயில்வாகனன் என் நூல்களை ஆர்வத்துடன் வாசிப்பதோடு, அவற்றைக் கனடா செல்கையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மகள் சிவச்செல்வி - ரமேஷ் திருமணத்துடன் இரு குடும்பத்தாரும் ஒரே மேசையில்.



ரமேஷ் மயில்வாகனத்தின் பெற்றோருடன் தம்பியார் ரவி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துச்சென்று கல்விமான்கள் பலருக்கும் அன்பளிப்புச் செய்து திருப்தியடைவார். அதனோடு அங்குள்ள பலரது ஆக்கங்களையும் பெற்றுவந்து, என் அறிவியல் பசிக்கு விருந்தாக்குவார்.



என் மகள் சிவச்செல்வியுடன் அவரது கணவர் ரமேஷ் மயில்வாகனன்.

என் நூல்கள் முழு வடிவம் பெற்றதும், மணிமேகலைப் பிரசுரம் கையளிக்கும் நூற்பிரதிகளைத் தன் பயணப் பொதியிலிட்டு எடுத்து வருபவர் என் கணவர் ஆவார். இவ்வாறு இவர்களது பங்களிப்புகளும் என் எழுத்துலகத்திற்குக் கை கொடுத்து உதவியிருந்தமையும் பதிவிற்குரியனவாம். மகளின் பங்களிப்புகள் பக். 195 இல் பதிவாகியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17

# என் எழுதுகோல்களுக்கும், படப்பிடிப்புக் கருவிக்கும் நன்றி கூறுவேன்

என் வலது கை அ, ஆ முதல் பதினைந்து நூல்கள்வரை கடந்த எழுபது வருடங்கள் ஓடியிருந்தாலும், அண்மைக் காலத்திலேதான் (2013 முதல் 2015 ஆன காலப் பகுதியில்) என் எழுதுகோலின் பெருமையினையும், வலிமையையும் உணரத் தொடங்கினேன். பாடசாலைகளில் அன்று பாவித்த மைக்குப்பிகளும், எழுதுகோல்களும் பாவனையிலிருந்து நீங்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையில், அதற்குப் பதிலாக கைநோவின்றி எழுதக்கூடிய புதுமை வழிவந்த எழுதுகோல்களையே தேடிப் பெற்றுக்கொள்வேன். இவை இறைவனைப் பற்றியும், அவரது மதங்களின் பெருமைகளைப் பற்றியும் எழுதி மகிழ்ந்ததோடு, பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட மனித வரலாறுகளையும் பல்வேறு அகப்பைகள் துணைகொண்டு துலாவியுமிருந்தன. ஆனால் 2013 - 2015 ஆம் ஆண்டுக் காலப் பகுதிகளில் இவ்வெழுதுகோல்கள் அஞ்சல்களை எழுதக் கைகொடுத்து உதவின. அதனால் இவ் வெழுதுகோல்களை நன்றியுடனே சேகரித்து வந்தேன். நான் எழுத நினைத்த அத்தனையையும் எழுதிப் பதிப்பித்த இவையனைத்திற்கும் நன்றி கூறும் வகையில் படம் எடுத்துக் கொண்டேன். மிக அண்மைக் காலமாகச் சான்றுகளைப் பதிவு செய்ய உதவியாக இருந்த என் படப்பிடிப்புக்கருவிக்கும் நான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.


**எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**
**செய்நன்றி கொன்ற மகற்கு.**

[குறள்]

18

# ஆசிரியரின் வாழ்வியலுடன் தொடர்பான நிழற்படங்கள்

## கல்வி கற்கும் மாணவியாக




நெல்லியடி அரசினர் பாடசாலை விடுதியில் வாழ்ந்திருந்த மாணவ, மாணவிகள், அதிபர் கலாநிதி சிவப்பிரகாசம், மற்றும் ஆசிரியர்களுடன் (1954) நூலாசிரியர் நிலத்தில் உட்கார்ந்திருக்கிறார்.



அக்காவீட்டு வாழைத் தோட்டத்தில், அக்கா சிவபாக்கியம், அவரது மகன் ரவிந்திரன், தம்பி தன நிருபசிங்கம் ஆகியோருடன் நூலாசிரியர். (1965)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொழும்பு
பல்கலைக்கழக
பௌதிகவியற்துறைப்
பேராசிரியர்
ஆ.வி. மயில்வாகனம்
வீட்டின் வாயிலில்,
அக்கா, அவரது
மூத்த மகன்
ஆகியோருடன்.
(20.4.1965)



களனிய பல்கலைக்கழகத்
தொல்லியற்துறை மாணவர்களை,
கித்துல்கலையில் பேணப்பட்டு வரும்
பழங்கால மனிதன் வாழ்ந்திருந்த
குகைக்கு அழைத்துச்சென்று
ஆய்வுகளை நடாத்திய பொழுது.
(1978)



அக்கா சிவபாக்கியத்துடன்.
(1976)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இளம்கலைமாணி பட்டச் சான்றிதழுடன். (1966)




திருமணவாழ்வில் காலடி வைத்த காட்சி. (1979)



லண்டனில் குடும்பவாழ்வில் ஈடுபட்டிருக்கையில் இயல்பான நூல் வாசிப்பும், எழுத்து முயற்சிகளும் (1979 - 198[illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனைவி, தாய் ஆகிய பதவிகளுடன் வாசிப்பும், எழுத்தும் தொடரவே செய்தன



லண்டனில் குளிர்கால வாசிப்புகள் படுக்கையின் உதவியுடனே தொடர்ந்தன.



லண்டனில் குடும்பவாழ்வில் ஈடுபட்டிருக்கையில் இயல்பான நூல் வாசிப்பும், எழுத்து முயற்சிகளும். (1979 - 1981)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தாய்மையின் பெறுபேறுகள் ஹம்மசிமித் (Hammer Smith)மருத்துவ நிலையத்தில் சிவச்செல்வியினைப் பெற்றெடுத்துக்கொண்டு மருத்துவத்தாதியுடன் வெளியேறுகையில் பண்புமிக்க ஆங்கிலப் பெண்மணி குழந்தையைப் பார்த்து மகிழல். (1981)




சிவச்செல்வியின் முப்பத்தோராம் (31) நாள் வழிபாட்டிற்காக உயர்வாசற்குன்று முருகன் கோவிலுக்கு (Highgate Hill Murugan Temple) சென்றபோது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வீட்டில் சிவச்செல்வியுடன் பேசி மகிழல். (1981)



சிவச்செல்வி விமானத்தில் கொழும்பை நோக்கிப் பயணிக்கின்றார். (புரட்டாசி. 1981)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொழும்பு வீட்டின் வாயிலில் சிவச்செல்வி
இயற்கையுடன் வாழப் பழகுகின்றார்.



சிவச்செல்வியின் இரண்டாவது பிறந்தநாள் கொண்டாட்டம். (5.6.1983)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




5.6.1983 அன்று அழும் சிவச்செல்வியைச் சமாதானப்படுத்துதல்



சிவச்செல்வி தந்தையாருடன். (1983)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1983, ஆடியில் கொழும்பில் இடம்பெற்ற தமிழர் இனப் படுகொலைகளுக்கு அஞ்சி ஏறாவூரில் இடம்பெயர்ந்து வாழ்கையில், முன்பள்ளிக்குச் சிவச்செல்வி மகிழ்ச்சியுடன் செல்லும் காட்சி. (1984)



முன்பள்ளி ஆசிரியை திருமதி. கனகநாயகத்தின் சிறுவர், சிறுமிகளுடன் ஆடிப் பாடல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு. கனகநாயகம் ஆசிரியர் போட்டியில் வெற்றி பெற்றோருக்குப் பரிசில்கள் அளித்துக் கௌரவித்தல்



மீண்டும் 1990-இல் ஏறாவூரில் இடம்பெற்ற சிங்கள இராணுவத்தின் தமிழினக் கொலைகளுக்கு அஞ்சி, மாலை தீவிற்குப் புலம்பெயர்ந்து வாழ்கையில், படிப்பிற்காக ஒரு சிங்கள பௌத்த பாடசாலையில் சிவச்செல்வி விடப்பட்டிருந்த காலத்தில் புத்தர் வழிபாடுகள். (1992)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவச்செல்வியின் இளம்கலைமாணிப்பட்டச் சான்றிதழுடன் தந்தையார்.



சிவச்செல்வி - ரமேஷ் திருமண வரவேற்பு நாளன்று. (2004)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கணவர் வரவேற்புரை நிகழ்த்துகின்றார். (2004)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீண்டும் எழுத்துலகத்துடன்



மீண்டும் லண்டனுக்குப் புலம்பெயர்ந்த நிலையில், மணிமேகலைப் பிரசுரம் (சென்னை) உதவியுடன் தன் பரிசு பெற்ற நூல்களை மறுபதிப்புச் செய்கின்றார் (2001)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வீட்டில் ஒரு நூல் நிலையத்தினை உருவாக்கிக் கொண்டும், நூலகங்களின் நூல்களை ஆய்வு செய்தும் நூல்களை எழுதும் முயற்சி தொடர்கின்றது.
(2001 - 2015)



'குமரிக்கண்டனம் முதல் சுமேரியா வரை தமிழர் வரலாறுகள்' எனும் நூலிற்கு யோகசுந்தரம் அறக்கட்டளை (வேலூர்) வழங்கிய விருது, ஒரு ஆறுதல் பரிசாக ஆசிரியர் ஏற்றுக் கொண்டிருந்தார். (2012)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தனது படிப்பறையில் தனது நூல்களையே படித்து மகிழும் ஆசிரியர்.



'குமரிக்கண்டம் முதல் சுமேரியா வரை தமிழர் வரலாறுகள்' எனும் நூலில் இடம் பெற்றிருந்த சிறுகதைகளுக்காக வேலூர் யோகசுந்தரம் அறக்கட்டளை வழங்கிய பரிசும், சான்றிதழும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமூக சேவையாளராக



2009 வைகாசியின் பின் சிங்கள அரசுகளின் தமிழினப்படுகொலையில் வாழ்வாதாரங்களனைத்தும் இழந்து நிற்கும் மக்களுக்கு, உணவுப் பொட்டலங்களை வழங்கி ஆறுதல் அடைகின்றார்.

35 பேருக்கான உணவுப் பொட்டலங்கள் தங்கை மாலினி சௌந்தரத்தின் உதவியுடன் 13.1.2014 அன்று விசுவமடுவில் வழங்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மீண்டும் 15.3.2013 அன்று விசுவமடுவில் ஈஸ்றஹாமில் திருவள்ளுவர் பள்ளி ஆசிரியை திருமதி. த. மனோகரன் மற்றும் இவரது மகள் சிவச்செல்வி ஆகியோர் வழங்கிய பணக்கொடை மூலம் 40 பேருக்கு உணவுப்பொட்டலங்களை வழங்கினார்.

மேலும் திருமதி. சிவயோகம். சோமசுந்தரம் கொடுத்த நன்கொடையை (ரூபாய் 20,000) மட்டக்களப்பு மங்கையர்க்கரசி இல்ல பெண்கள் நலனுக்காகவும் கொடுத்திருந்தார். மற்று ஆசிரியரின் நூல்களை விற்பனை செய்து விசுவமடு சிறுவர் பாடசாலை நலனுக்காக திருமதி. மாலினி சௌந்தரம் பயன்படுத்தியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



ஈஸ்றஹாமில் (Eastham) இயங்கிவரும் திருவள்ளுவர் பள்ளியில் வருடந்தோறும் இடம்பெறும் திருக்குறள் மற்றும் தமிழ் பேச்சுப் போட்டியாளர்களின் தரத்தினை மதிப்பீடு செய்யும் பணியில். (21.6.2014)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருவள்ளுவர் பள்ளி ஆசிரியர்கள் முன்னிலையில் தலைமை ஆசிரியை திருமதி. தவமணி மனோகரனிடம் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு அன்பளிப்புச் செய்வதற்குச் சிறுவர்களுக்காக எழுதிய தன் நூல்களைக் கையளித்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலாசிரியருக்கு உறவினர்கள் வழங்கிய நீங்காத நினைவுகள்





திரு. ஏ. சோமசுந்தரம் திருமதி. ராஜேஸ்வரி சோமசுந்தரம் (மாமா - மாமி) இருவரும் காலமாகி விட்டாலும் அவர்கள் விட்டுச்சென்ற மனிதநேயப் பண்புகள் பல திறத்தனவாம்.




மாமா
ஏ. தில்லையம்பலத்துடன்
20.1.2014 அவரது
வீட்டுத்தோட்டத்தில்.
கல்வி மூலம் என்னை
நிமிர்ந்து வாழவைத்த
இவருக்கு வயது 99 ஆகும்.
தனக்கென்று வாழாத
பண்பாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




என் சிறிய தாயாரை (திருமதி. தங்கம்மா கந்தவனம், கப்புதூர் பாடசாலை அதிபராகப் பணிபுரிந்தவர்) 22.1.2014 இல் சந்தித்தபொழுது.



முதுமையில் நாங்கள் மூவரும். அக்கா சிவபாக்கியம் தம்பி தனநிருபசிங்கம் கிளிநொச்சியில் (திருவையாற்றில்) நாங்கள் 27.1.2015 அன்று ஒன்றுகூடி உறவினை மீட்டிருந்தோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



என் நூல்களின் உள்ளடக்கங்களை சுருக்கமாகக் கணினியில் தொகுத்தளித்த மருமகன் ம. சத்தீசன். (2014)



மேலே குறிப்பிட்ட சத்தீசனின் அம்மா
திருமதி. ம. அன்னலெட்சுமியுடன் மகள் சிவச்செல்வி, இவரது அண்ணன் க. குணபாலசிங்கம் (2002). அன்னலட்சுமி பெயருக்கேற்ப அன்னதானத்தில் ஊறித் திளைத்தவர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




என் தாய் - தந்தையரின் பணியை முற்றாகத் தனதாகக் கருதி என் திருமணத்தினை 3.3.1979 அன்று சிறப்பாக நிறைவேற்றிய காலஞ்சென்ற (2012) என் அக்கா கணவர் அ. நடராசாவிற்கு, இது அவரது முதற்பிள்ளை திருமணம் எனில் மிகையாகாது. பின்னர் தனது மூத்த மகன் ரவீந்திரனின் திருமணத்தை 1.6.1996 அன்று இரண்டாவதாக நடாத்தி நிறைவு காண்கின்றனர்.



மீண்டும் நான் என் சிறிய தாயாருடன் உட்கார்ந்திருப்பது மச்சாள் திருமதி. மனோன்மணி நடராசாவை நினைவு கூர்வதற்கேயாம். உறவினர்களில் இவர் எனக்குக் காட்டிய அன்பும், பாசமும் நினைவில் என்றும் நிலையாகிவிட்டவையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



என் தாய்வழி மாமாமகளின், மகன் திருமணத்திற்கு நோர்வே சென்று கலந்திருந்தேன்.



ஏறக்குறைய 64 வருடங்களின்பின் தந்தைவழி உறவினர் தொடர்புகள் மீட்டெடுக்கப்பட்ட நிலையில் தங்கை அரியமலர் குடும்பத்துடன் நானும் என் மகள் சிவச்செல்வியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மகள் சிவச்செல்வி தாயாரின் எழுத்தாக்கங்களை (ஆங்கிலம்) திருத்துகின்றார். (2013)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



28.6.2012 அன்று காலை ஆசிரியர் கண்களை மூடியிருந்தபொழுது முருகனின் குழந்தை முகம் இருமுறை காட்சி கொடுத்து மறைந்தது. ஆனால் 17.7.2013 அன்று சத்குரு சரவணபாபாவை எம் வீட்டிற்கு அழைத்தோம். அப்பொழுது ''நான் உனக்கு பாலமுருகன் உருவில் இருமுறை காட்சி தந்தேன்'' என்றார். அப்பொழுதுதான் தெய்வீகத்தின் திருவிளையாடல்கள் பற்றி உரை முடிந்தது. இது தெய்வீக அனுபவங்களில் ஒன்றாகும்.



சென்னையில் 12.2.2015 அன்று ஒலிம்பிக் ஹபீப் அறக்கட்டளை நிதியத்தினருக்கு என் எழுத்தாக்கங்கள் பற்றித் திரு. மோகன் அவர்கள் மணிமேகலைப் பிரசுரம் சார்பில் எடுத்துரைக்கின்றார். (இடமிருந்து வலம்) நூலாசிரியை, திரு. ஹபீப் அவர்கள் மகன் திரு. நூர் முகமது, எழுத்தாளர் திரு. லேனா தமிழ்வாணன், திரு. ரவி தமிழ்வாணன் ஆகியோர் வீற்றிருக்கிறார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஒலிம்பிக் அறக்கட்டளை தொண்டு நிறுவனர் திரு. நூர்முகமது அவர்கள் ரூபா. 10.000/- கொண்ட பணமுடிச்சினை நான் பெற்றுக்கொள்ளும்பொழுது, காலஞ்சென்ற கற்கண்டு ஆசிரியர் தமிழ்வாணனின் மகன்களான திரு. லேனா, திரு. ரவி ஆகிய இருவரும் கலந்து சிறப்புச் சொற்பொழிவாற்றினர். இறுதியாக ஆசிரியர் வாழ்வில் ஒரு விடுகதை தொக்கி நிற்பதனை ஆசிரியர் குறிப்பிடுவதற்கில்லை. இவரது நினைவுமலர் தொடருமா? தொடராதா? காலம் பதில் சொல்லட்டும். இந்நினைவு மலரை எழுதுவித்த ஹபீப் அறக்கட்டளை நிதியத்தினருக்கு வாழ்த்துகளும், நன்றிகளும் உரித்தாகுக. மேலும் கடந்த பதினான்கு ஆண்டுகளாக எனக்கு ஆக்கமும், ஊக்கமுமளித்து முழுமையான எழுத்தாளராக வளர்த்துவிட்ட மணிமேகலைப் பிரசுரத்திற்கும் என் நன்றிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு வேண்டுகோள்!



அந்தோனியார் தேவாலயம், லண்டன் E7 (4.7.2015)

நான் எழுத்துலகிலிருந்து ஒய்வு பெற்றுக் கொண்டுள்ளேன். ஒரு வேண்டுகோள். தமிழ்மக்கள், குறிப்பாக ஈழத்தமிழ் மக்கள் தம் பூர்வீகமண் கடல்கோள்களில் எஞ்சிய ஏழ்பனை நாட்டுப் பிரிவின் துண்டமான ஈழமே என்பதனை உறுதியாக அறிந்து கொள்ளல் வேண்டும். அத்துடன், 'யாதும் ஊரே யாவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேளிர்' எனும் அன்புத் தத்துவத்தினை நாடற்று வரும் பரதேசிகளுக்கு தூர நோக்கற்று எம்முன்னோர் காட்டியதனாலே இன்று 'தமிழன் நாடற்றவன் ஆனான்' எனும் இன்றைய பரிதாப நிலையைச் சீர்தூக்கி, எதிர்காலத் தலைமுறையினருக்கு எஞ்சியிருக்கும் மண்ணிலாவது, "தேசியம், சுய நிர்ணயம், சுயாட்சி" போன்ற மனித உரிமைக் கோட்பாட்டினடிப்படையில் ஒன்றுபட்டு பாதுகாப்பளியுங்கள். நான் மட்டுமன்றி வடகிழக்கு வாழ் தமிழ்மக்களும், இந்நிலையினூடாகவே தம் வாழ்வினை முழுமையாகக் கட்டியெழுப்ப முடியுமென்று நம்புகின்றார்கள். கடவுள் கண் திறப்பானாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் பின்னுரை

ஆசிரியர் கடந்த முப்பது ஆண்டுகளாகத் தமிழரின் தாயகம் எங்கே? எனும் தேடலிற் தன்னை முழுமையாக அர்ப்பணித்திருந்ததோடு மட்டுமன்றி, தமிழர் சமய, சமூக வரலாறுகளோடு, உலக வரலாறுகளையும் முடியுமான அளவு மீட்டுப் பார்த்திருந்தார். இறுதியில் தனது எழுத்துப்பணி மனித வரலாறுகளுக்கு மீண்டும் உயிரூட்டிய தன் ஆய்வுகள் பற்றித் திருப்தியுடையவராக இருந்தபொழுதும், எழுத்துலகத்திற்கு முழுமையாக அர்ப்பணித்திருந்த தன்னை அடையாளப்படுத்தும் ஒரு வரலாற்றுத் தேவையென உணர்ந்தார். ஏனெனில் தமிழருக்குப் பெருமைமிக்க வரலாறுகள் கி.மு. 9600 ஆம் ஆண்டு முதலாக அடையாளப்பட்டிருந்தும், இன்று வரலாறுகளற்ற மனிதர்களாகவே வாழ்ந்து வருகின்றனர். அறம் தழும்பியபொழுது கடற்கோள்கள் முதலிரு தமிழ்கெழு கூடல்களை வைத்துத் தமிழ் வளர்த்த தென்பாண்டியர் ஆட்சிப்புலங்களை முற்றாகச் சிதைத்துவிட்டிருந்தன. ஆனாலும் வடபுலத்தில் ஆண்டிருந்த சேரரும், சோழரும் தம் நிலங்களை வழங்கி, இன்றைய மதுரையில் மீண்டும் பாண்டியராட்சியைக் கட்டியெழுப்ப உதவியிருந்தனர். வடக்கே புலம்பெயர்ந்த அரசாகையினால் இதற்கு வடமதுரை என அழைப்பது மரபாயிற்று. சிவனும் - முருகனும் மீண்டும் மூன்றாவது தமிழ்கெழுகூடல் உருவாகித் தமிழ் வளர்க்கத் திருவிளையாடல் புரிந்திருந்த நிலையில், உருவாக்கப்பட்ட நூல்களே தொல்காப்பியம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, திருமுருகாற்றுப்படை, திருக்குறள் முதலான நூல்களாவன. இந்த மூன்றாம் தமிழ்கெழுகூடல் கி.மு. 1850 - கி.பி. 100 வரை இயங்கியதொன்றாகும். இவையே இன்றுவரை எம் அறிவிற்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுத்து வாழ்வியலைப் பண்படுத்தி வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் மீண்டும் ஒரு பெருங்குறை தொடரத்தான் செய்கின்றது. அது என்னவெனில் ஏறக்குறைய மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே பல நூல்களைக் கற்றதாகக் குறிப்பிட்டு, தம் அறிவை வியத்தகு வகையில் வளர்த்து, யாத்த நூல்கள் பெரும் அறிவுப் பெட்டகங்களாக இருப்பினும், தம் வாழ்வு முறைகள் பற்றி இக்காலப் புலவர்கள் எவரும் துளியளவும் குறிப்பிட்டாரில்லை. அதனால் நாம் இன்றுவரை ஊகங்கள் மீதே பயணித்து வருகின்றோம். இந்நிலை நீடிக்கக் கூடாது என்பதில் உறுதியாக இருந்த ஆசிரியர் தமது நூல்களில் ஆங்காங்கே தன் வரலாற்றுடன் தொடர்புபட்ட நிகழ்ச்சிகளை நிழற்படங்கள் மூலம் காட்சிப்படுத்தியிருந்தார். அவை போதுமானவையல்ல என்று கருதியதனால் தன் வாழ்வியல் பற்றிச் சுருக்கமாகத் தொகுத்தளிக்க முற்பட்ட நூலே 'ஓர் எழுத்தாளரின் அரை நூற்றாண்டு வாழ்க்கை அனுபவங்கள்' எனும் இந்நூலாகும்.

ஆனால், இந்நூலுடன் இவர் எழுத்துலகம் முற்றுப்பெற்றுவிட்டதா? இல்லவே இல்லை. ஆய்வுப்பணி முடிவுற்றாலும், சமூகப்பணி நிறைவுபெற முடியாத நிலையொன்று தொடர்ந்தது. அதாவது லண்டனில் இயங்கிவரும் தமிழ் தொலைக்காட்சிகளான தீபம், உலகத் தமிழர் பார்வை (GTV), IBC தமிழ், ஆதவன் மற்றும் யாழ்குடாவில் இயங்கிவரும் டான்ஒளி என்பன, ஈழத் தமிழர் வரலாற்றுடன் தொடர்பான பதிவுகளை மேற்கொள்கையில், ஆசிரியர் அவ்வப்பொழுது தனது படக்கருவி மூலம் காட்சிப்படங்களைப் பதிவு செய்துகொள்வார். ஏனெனில் இச்செய்திகளை அடுத்தத் தலைமுறையினருக்கு எடுத்துச் செல்லும் பணியிலிருந்து தவறக்கூடாது எனும் நோக்கில், இவரது வாழ்வின் மறுபக்கமாகவே இப்பணி மேற்கொள்ளப் படலாயிற்று.

இதற்கு எடுத்துக்காட்டாக சீனமக்களின் வரலாறானது, கி.பி. 1900 - 1950 வரையிலான காலப்பகுதியில் அங்கு சென்றிருந்த மேலைத்தேயப் புவியியலாளர், ஊடகவியலாளர் எடுத்த பல்லாயிரக்கணக்கான புகைப்படங்களிலேதான் பாதுகாத்து வைக்கப்பட்டிருந்தன. இப்புகைப்படங்கள் சீனமக்களின் அன்றாட வாழ்வு முறைகள், கீழ்த்தட்டு மக்களின் வாழ்வியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராட்டங்கள், பயண வண்டிகள், கடற்பயணங்கள், அன்றைய கட்டட வடிவங்கள், நகர அமைப்புகள், யப்பானியர் படையெடுப்புகள், போரின் அழிவுகள், மரண ஊர்வலங்கள், பொதுவுடைமை அரசாட்சி உருவாக்கங்கள் என அன்றைய சீனாவை அப்படியே காட்சிப்படுத்தியிருந்தன. இவை இன்றுவரை ஏராளமான கதைகளைப் புதிய சீனத் தலைமுறையினருக்கு எடுத்துக் கூறிக்கொண்டேயிருக்கின்றன. இன்றைய சீன ஆய்வாளர்களும் இவற்றை மீட்டுப் பார்த்து, ஆய்வு செய்யும் நிலையிலேயே இருக்கின்றார்கள். எனவே சமகால வரலாறுகளைக் காட்சிப்படங்களாகப் பதிவு செய்தலின் அவசியத்தை நானும் உணரலானேன். இவை காலக்கண்ணாடிகளாக பணியாற்றவல்லன என்பதில் ஐயமில்லை. அதனாலே இந்நூலின் பிற்பகுதியில் ஈழமக்கள் சுயாட்சிக்காகவும், உரிமைகளுக்காகவும் குரல்கொடுத்துப் போராடிவரும் மனிதநேயப் பணியாளர்கள் காட்சிப்படுத்தப்பட்டார்கள். அதனோடு உலகளாவிய அளவில், தம் மண்ணைவிட்டு, மக்களின் வாழ்வின் துயரங்களை துடைப்பதற்காகப் போராடி, தம்மை ஆகுதி செய்த மாவீரர் நினைவுநாள் பதிவுகளும் இடம்பெற்றிருந்தன.

இனி, இந்தப் பின்னுரையில் தமிழகத்தில் ஓடிக்கொண்டிருக்கும் தமிழருவிகளையும் குறிப்பிடல் காலத்தின் தேவையாகும். அனைவரையும் உள்ளடக்குவதென்பது ஆசிரியருக்கு கையாலாகாத பணியெனினும், ஒரு சிலரின் கருத்துகளைப் பதிவுசெய்ய விரும்புகின்றார். தமிழ்கூடல் நிகழ்ச்சியில் ஆய்வுரையாற்றிய திருமிகு. தமிழருவி மணியன் தமிழக வீழ்ச்சிக்குரிய காரணம் இன்பத்தைத் தமிழர் முன்வைத்தமையே காரணம் என்றார். இது இன்னமும் தொடரும் நிலையிலேயே உள்ளது. திருவள்ளுவர் மாற்றியமைத் திருந்தாலும், தமிழகம் அதனை முழுமையாகப் பின்பற்றவில்லை என்பதே உண்மை. பேராசிரியர் கு. ஞானசம்பந்தன், 'நூல்களே காலயந்திரம்' என அடையாளப்படுத்தினார். சங்க இலக்கியங் களைப் படிக்கின் நாற்காலியிலிருந்தபடியே இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னால் பயணித்து வரமுடியும் எனும் அவரது வரலாற்றுப் பார்வை நூல்கள் ஒரு காலக்கண்ணாடிகள்! எனும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையை வலியுறுத்தியிருந்தது. தமிழ்ப் பேராசிரியர் ஒளவை நடராசன் மூன்றாம் தமிழ்கெழுகூடல் கடலிற்குள் மூழ்கி, நீந்தி வெளியேறிய ஒருவராவர். தமிழ் தேசியப் பேரியக்கத் தலைவரான பெ. மணியரசன் தமிழகத்தில் திராவிடக் கட்சிகள் தமிழுக்காகத் தம் பணிகளை முன்நகர்த்த மாட்டார்கள் என்பதை அனுபவவாயிலாகக் கக்கியிருந்தார். தமிழர் நல பேரியக்கத் தலைவரும், திரைப்பட இயக்குநருமான மு. களஞ்சியம், தேசியத் தலைவர் பிரபாகரனின் பேராற்றல் கொண்ட ஆளுமையைக் காட்டிலும், அவரது மனிதநேயமே மேன்மையானது என அவரது உள்ளத்தை வருடியதோடு, தமிழர்கள் திராவிட அடையாளத்திலிருந்து தம்மை விடுவித்துக்கொள்ள, சாதி, மத வேறுபாடுகளுக்கப்பாற்பட்ட, ஒரு சமூகமாக ஒன்றிணைந்து போராடினாலே தமிழன் இழந்த நாட்டினை மீட்டுக்கொள்ள முடியும் என்பதனை உறுதிப்படுத்தியிருந்தார்.

தமிழ் தேசியப் பேரியக்கப் பொதுச்செயலாளரான திரு. கி. வெங்கட்ராமன், தமிழர்கள் பன்னாட்டு அரசியல் சக்திகளாக மாறினாலே கையிழந்த ஈழத்தினைச் (வங்கநாட்டுச் சிங்கத்திடமிருந்து) மீட்க முடியும் எனும் தன் கருத்தினைப் பதிவு செய்திருந்தார். தமிழகத்தின் பூர்வீககுடிகளான தமிழர் சமூகங்களைச் சாதிக்கொடுமைகளிலிருந்து விடுவித்து உன்னத தமிழ்க் குடிகளாக்கப் போராடிவரும், இளைஞர் இயக்கப் பணியாளரான மருத்துவர் எழிலன். நாகநாதன் முதலான இளைஞர்கள் இவர்களை விடுவிக்கப் போராட வேண்டிய தளங்களை விவரித்திருந்தார். விடுதலைச் சிறுத்தைகள் செய்தித் தொடர்பாளர் திரு. வன்னியரசு, வன்னிப்போர் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் மக்கள் அனுபவித்த அவலங்களைப் படம்பிடித்த ஒருவராவார். அவரது சாட்சியங்கள் வெளிவருதல் அவசியமாகும். இசைஞானி இளையராஜா சகோதரர்கள் தமிழிசைக்கு உயிர் கொடுத்தார்கள் என்றால், அது எவ்வாறு. இசையே பதில் சொல்லட்டும். கவிப்பேரரசு வைரமுத்து, ஈழத்தில் இடம்பெற்ற உழவர் விழாவில் கலந்துகொண்டு (24.1.2016) பெற்ற புத்துணர்வு 'ஈழ மகாகாவியம்' என்பதேயாகும். அருள்மிகு சுகிசிவம் மெய்ஞ்ஞானத்தின் மெய்ச்சுடராவார். அவரது மெய்ச்சுடர் உலகை ஒளிமயமாக்கட்டும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இவர்களோடு இன்றைய தலைமுறையினரின் ஆய்வுகள் பல ஆதவன், டான்ஒளி தொலைக்காட்சிகளில் பதிவு செய்யப் பட்டுள்ளன. ஒட்டுமொத்தத்தில் அனைத்து அறிவுக் களஞ்சியங்களும் தமிழை உலகளாவிக் கொடிகட்டிப் பறக்க அயராது உழைத்து வருவது கண்கூடு.

தமிழ் இன்று இங்கிலாந்து நாட்டின் ஒக்ஸ்போர்ட் நகரில் உலகத்தமிழர் வரலாற்று மையத்தினை நூற்றெட்டு *(108)* ஏக்கரில் உருவாக்கும் திட்டத்தில் அயராது உழைத்துக் கொண்டிருக்கின்றது. இப்பூமியிருக்கும்வரை தமிழ் தன் வரலாற்றைக் கூறி கொடிகட்டிப் பறக்கும். இறைவன் திருவிளையாடலும் அதுவே. ஆசிரியரின் எழுத்துப் பணியும் இந்த வரலாற்று மையத்திற்கு தலைசாய்த்து நிறைவுபெறுகின்றது.

முற்குறிப்பிட்ட தொலைக்காட்சி சேவைகள் அனைத்திற்கும் என் உளப்பூர்வமான நன்றிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆன்மிகப் பேரொளி திருமிகு. சுகிசிவம்.





இசைஞானி இளையராஜா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கவிப்பேரரசு வைரமுத்துவின் 'ஈழ மகாகாவியம்' உலகளாவிப் பெருகியோடப் பெருக்கெடுக்கின்றது.



தமிழறிஞர் ஔவை நடராஜன், நேர்காணல் News 7 ஊடகர் திரு. விஜயன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமிகு. தமிழருவி மணியன்




மனித உரிமைச் செயற்பாட்டாளர் நளினி. ரட்னராஜா (இலங்கை) பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சுரேஷ். பிரேமசந்திரன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரைப் பொது மன்னிப்பில் விடுவிக்க முடியுமானால் சிறையில் 20 வருடங்களுக்கு மேலாக வாடும் 217 தமிழ்க்கைதிகளை ஏன் விடுவிக்க முடியாது? எனும் தார்மீகக் கருத்தை முன்வைத்தார். நேர்காணல் ஊடகர் சீலன். (3.11.2015 GTV)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறிப்புகள்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## இந்நூலைப்பற்றி....

நூலாசிரியர் காலவெள்ளத்தினுள் மறைவுண்டு கிடந்த உலக மனித வரலாறுகளை மீள்கட்டுமானம் செய்து பல நூல்களைத் தமிழ் உலகிற்குக் கொடுத்துள்ள ஒருவராகையால், தன் வாழ்வுடன் தொடர்புகொண்டிருந்த நிகழ்ச்சிகளையும் வரலாற்று நோக்கிலேயே பதிவு செய்திருந்தார். இவ்வாறு தனி மனித வரலாற்று நிகழ்ச்சிகள் ஒருவருக்குப் பலவாகத் தோன்றினாலும் முடிவில் எஞ்சியிருப்பது வாழ்வு எனும் ஒரு பயணம்தான். அது மனிதனுக்கு மனிதன் வேறுபட்ட பல்வேறு கோணங்களைக் கொண்டதாகும். இக்கோணங்களைப் பதிவுசெய்யப் பொதுவாக மனிதர்கள் முன்வருவதில்லை. இக்குறைபாட்டினை வரலாற்றாசிரியரான தானும் விடக்கூடாது என்பதில் உறுதியாக இருந்து எழுதியதோடு, வாழ்வின் ஒவ்வொரு கட்டங்களையும் நிழற்படங்கள் மூலமும் பதிவு செய்துள்ளார். இதற்குத் தூண்டுகோலாக இருந்தவர்கள் ஒலிம்பிக் ஹபீப் அறக்கட்டளைத் தொண்டு நிறுவனமும், மணிமேகலைப் பிரசுரத்தாரும் எனில் மிகையாகாது.. அதனால் இவ்விரு நிறுவனங்களின் நடவடிக்கைகளை நினைவுகூரும் வகையிலும் இந்நூல் அமைந்திருப்பதும் காலத்தாற் செய்த உதவி ஞாலத்திற் பெரிது எனும் வள்ளுவர் போற்றிய கருத்திற்பாற்பட்டதாகும். வழமைபோல் மணிமேகலைப் பிரசுரம் இவரது இச்சுயசரித நூலினை வெளியிடுவதில் சங்ககால ஔவைமரபில் வந்த ஆசிரியருக்கு மட்டுமன்றித் தமிழுக்கும் பெருமையாகும் எனக் கருதுகின்றது. அனைத்து வழிகளிலும் தமிழின் பெருமையை உலக அரங்கில் உலகுள்ளளவும் நிலைநாட்டிடுவோம் என்பதும் அதன் திடசங்கற்பமாகும். தற்பொழுது தமிழ் உலகெங்கும் பயணித்துத் தன் அரசியல் நகர்வுகளை முன்னெடுத்து வருவதனையும் இந்நூல் பறைசாற்றியுள்ளது எனில் மிகையாகாது. இவரது எழுதுகோல்களுக்குத் துணைபோயிருந்த மணிமேகலைப் பிரசுரமே அவரது எழுத்துலகத்தைப் பின்னோக்கிப் பார்த்து பதிவுகளைச் செய்யவும் ஆக்கமும், ஊக்கமும் கொடுத்தி ருந்தது. எழுத்தாளர்கள், வாசகர்கள் அனைவரும் இந்நூலைப் படித்துப் பயனடைவர் என்பதில் ஐயமில்லை.

– பதிப்பகத்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org